www.padippakam.com



# விடியட்டும் பார்ப்போம்

புலோலியூர் ஆ. இரத்தின வேலோன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# விடியட்டும் பார்ப்போம்...!

புலோலியூர் ஆ. இரத்தின வேலோன்

படிப்பகம்

www.padippakam.com

☆ பதிப்புரிமை : திருமதி ஐ. சாந்த குமாரி

☆ முதலாம் பதிப்பு : மாசி 1997

☆ அச்சுப்பதிப்பு : பிறின்ட் கிறாப்பிக்ஸ்,
4, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு 06.
தொலைபேசி : 596312

☆ விலை ரூபா : 100/-

# VEDEYADDUM PARPOM ...!

(A Collection of Short Stories)

By

## PULOLYOOR A. RATNA VELONE

First Edition : February 1997

Printed at : Print Graphics,
4, Nelson Place,
Colombo-06.
Telephone: 596312

Price : Rs.100/-

படிப்பகம்

www.padippakam.com

இலக்கியமே
என்
பலமென
வுணர்ந்து....
என்றுமே
என்
உந்து
'சக்தி' யாயுள்ள
என் மனைவி
சாந்த குமாரிக்கு....
இந்நூல்
அர்ப்பணம்!

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே......


| | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | 05 |
| அறிமுகவுரை | 09 |
| முன்னுரை | 15 |
| தொடரும்..(புதிய) பயணம் | 22 |
| அரங்கேற்றம்........ | 25 |
| ஒற்றைப்பனை........ | 33 |
| புத்தொளி........ | 49 |
| புதிய அத்தியாயம் ........ | 56 |
| காகித உறவுகள்........ | 67 |
| அம்மா........ | 78 |
| ஒரு பக்கத் தானம்........ | 85 |
| விழியாட்டும் பார்ப்போம்........ | 90 |
| இருட்டினில் வாழும் உயிர்களுக்கு........ | 98 |


படிப்பகம்

www.padippakam.com

# ஆசியுரை

எழுபதுகளின் பிற்கூறில் எழுதத் தொடங்கி இன்றுவரை இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனியான இடம் பெற்றுக் கொண்டுள்ளவர் நண்பர் இரத்தின வேலோன்.

இவருடைய சிறுகதைகள் திருமதி கோகிலா மகேந்திரனின் சிறுகதைகளுடன் சேர்த்து, 1984ல் 'அறிமுகவிழா' என்னும் மகுடத்தில் வெளியிடப்பட்டது.

இவ்விரு படைப்பாளிகளின் மும்மூன்று சிறுகதைகளும் இருவருமாக இணைந்தெழுதிய ஒரு நெடுங்கதையும் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

இவருடைய தனித்தொகுதியான 'புதிய பயணம்' 1996ல் வெளிவந்துள்ளது.

இப்போது வரும் இந்தத் தொகுதி இவருடைய சிறு கதைகளை ஒன்றாக்கித் தரும் மூன்றாவது நூலாகும்.

தன்னுடைய எழுத்தை வைத்து தனக்கு ஏதாவதொன்றைத் தேடிக்கொள்ள அவாவுறாத அந்தச் சின்ன இலக்கிய வட்டத்தைச் சேர்ந்தவராகவே நான் அன்றிலிருந்து இன்று வரை இவரைக் காணுகின்றேன். இவருடைய எழுத்துக்கு அடுத்ததாக என்னைக் கவர்ந்தவை இவருடைய இந்தப் பண்பு, இவருடைய அடக்கம்.

தமிழ்ச் சிறுகதை தோன்றி ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. ( 1917 – 1997 ).

படிப்பகம்

www.padippakam.com



வணிகப் பத்திரிகைகளின் பெருக்கம், அச்சுவசதி முன்னேற்றம், சீரான விநியோகமுறை விஸ்தரிப்பு போன்ற இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட விஷயங்களே சிறுகதைகளைக் கட்டுப்படுத்தி வழிநடத்திக் கொண்டிருக்கும் ஒரு தமிழ் சூழலில்......

பெரும் பத்திரிகைகள் உருவாக்கி விட்டிருக்கும் பொறுப்பற்ற - இலட்சிய நோக்கமற்ற வாசகர் கூட்டத்தினை திருப்திப் படுத்துவதற்காகவே எழுதிக் குவிக்கும் எழுத்துக்கூலிகள் மத்தியில்.....

ஈழத்துச் சிறுகதைகள் போராடிப்போராடி வளர்ந்து வருகின்றன என்று நான் கூறினால் அது தற்புகழ்ச்சியாகாது!

இப்படித்தான் சிறுகதை இருக்கவேண்டும் என்று இயற்றப்பட்ட சட்டங்கள் ஏதும் இல்லையாதலால், சிறுகதை இன்னும் ஒரு வளர்முகத் துறையாகவே இருக்கிறது.

இந்த வளர்ச்சிக்குத் துணையாக இரத்தின வேலோனின் படைப்புக்களும் இருப்பது மகிழ்ச்சியான செய்தியே.

வாழ்விற்கோரு உந்து சக்தியாகவும், ஜீவ அம்சமாகவும் இலக்கியம் இருக்கவேண்டும் என்கின்ற போது எழுத்துக்கொரு நோக்கம் இருக்க வேண்டும் என்பது சொல்லாமலே புலனாகின்றது.

நண்பர் இரத்தின வேலோனின் சிறுகதைகள் இந்த நோக்கங்களுக்கான சாட்சிகளாகவே திகழ்கின்றன.

தனது வாழ்க்கை அனுபவங்கள் மூலம் தான் உணர்ந்து கொண்டதை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பாங்கு அற்புதமாக இருக்கிறது.

வாழ்வின் யதார்த்தங்களினூடாக உண்மையைத் தேடிச் செல்லும் விதம் பெரும்பான்மையான இவரது படைப்புக்களில் வெளிப்படுவது மகிழ்வைத் தருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



"என்னுடைய அனுபவங்களை எல்லாம் எழுத்தில் வடிக்க எனக்கு ஆயுள் போதவில்லை", என்று கூறினார் மலையாள எழுத்துக் கலைஞர் வைக்கம் முகம்மது பஷீர்.

தன்னுடைய 38 வயது வாழ்க்கை அனுபவங்களை ஒரு இருபது வருட இலக்கிய வாழ்வில் இருபது, அல்லது இருபத்து மூன்று சிறுகதைகள் மூலம் வடித்து வைத்திருக்கின்றார் இரத்தின வேலோன்.

அன்றாட வாழ்வின் அவஸ்தைகள் உள்மனதில் ஊறி ஊறி, நொதித்து நொதித்து சிறுகதைகளாகப் பீறிட்டுக் கிளம்பியுள்ளன.

**எளிமையான, ஆனால் தேர்ந்த சக்திமிக்க வார்த்தைகள் இவருடைய படைப்புகளுக்கு ஒரு பலத்தைக் கொடுக்கின்றன. இவருக்கொரு அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுக்கின்றன.**

இவர் பெற்றுள்ள இந்த அங்கீகாரம் எதிர்காலத்துப் புதுப்புது சூழல்களுக்கேற்ப மேலும் விரிவடைந்து வளர்ந்து – தமிழ்ச் சிறுகதை இலக்கியத்துக்கு வளம் சேர்க்க வாழ்த்துகின்றேன்!

பெருமை கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்!

**தெளிவத்தை ஜோசப்**
16 - 1 - 1997

35, N.H.S
HEKITTA
WATTALA

www.padippakam.com

இரத்தின வேலோனுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு ஆத்மார்த்தமானது. இவரது தந்தையார் வே. ஆறுமுகம் ஒரு நல்ல கவிஞர். தாய்மாமனார் க. சதாசிவம் நாடறிந்த நாவலாசிரியர். இத்தகைய கலைக் குடும்ப வாரிசான இரத்தின வேலோனைச் சிறுவனாக இருக்கும் காலத்திலிருந்தே எனக்கு நன்கு தெரியும்.

சமுதாயப் பிரச்சினைகளை அமைதியாக நின்று மிக ஆழமாகவே வேலோன் சித்திரிக்கின்றார். சாகா வரமிக்க படைப்புகளைப் படைத்து இலக்கிய உலகில் மேலும் அவர் பிரகாசிக்க வேண்டும்.

**பொன். ராஜகோபால்**

படிப்பகம்

www.padippakam.com

# அறிமுகவுரை

சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு எழுத்தாளனால் தான் வாழும் சமூகத்தினின்றும் ஒதுங்கிவிட முடிவதில்லை. அவனது வாழ்நிலையை மட்டுமன்றி அவனது உளப்பாங்கினையும், படைப்பாற்றலையுங்கூட அச்சமூகச் சூழ்நிலை பாதிப்பினுக்குள்ளாக்கிவிடுகிறது. ஈழத்திலே, தற்கால படைப்பாளர்களின் பாடுபொருளாக தனிமனித அகவுணர்வுகள், தான் வாழும் சமூகக் கட்டமைப்பில் எழும் சமுதாய முரண்பாடுகள், தேசிய, இன நெருக்கடி ஆகியன அமைகின்றன. ஆற்றல் படைத்த எழுத்தாளர்களின் ஆக்கங்களிலே தனிமனித அகவுணர்வுகளும், தேசிய இன நெருக்கடிகளுங்கூட சமுதாய முரண்பாடுகளின் வெளிப்பாடு களாகவே சித்திரிக்கப்படுகின்றன.

**புலோலியூர் இரத்தின வேலோனின் படைப்புக்களும் ஆற்றல் வாய்ந்த இலக்கியங்களாகவே இனங்காணப் படுகின்றன.** கடந்த வருடம் வெளியிடப்பட்ட **'புதிய பயணம்'** இப்பொழுது வெளியிடப்படும் **'விடியட்டும் பார்ப்போம் ...!' ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வேலோனது எழுத்தாற்றலின் சுகப்பிரசவங்களாக கருதப்பட வேண்டியவையாகும்.** புதிய பயணத்தோடு ஒப்பிடுகையில் உருவம், உள்ளடக்கம், உத்திமுறை ஆகியவற்றில் 'விடியட்டும் பார்ப்போம்...!' என்ற இந் நூலிலுள்ள சிறுகதைகள் சற்று வேறுபட்டவையாகும்.

1977 தொடக்கம் 1997ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட இரண்டு தசாப்த காலத்துள் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வடமராட்சிப் பிரதே சத்தில் நிகழ்ந்துவிட்ட சமூக மாற்றங்களையும், அப்பிரதேச வாழ் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களையும் இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளினூடாகத் தரிசிக்க முடிகிறது. படைப்புக்களின் தரத்தினைக் கருத்திற்கொள்ளாது, வெறுமனே சமகால நிகழ்வுகளை மட்டும்

www.padippakam.com



சித்திரிப்பதன் மூலம் 'இலக்கியக் கொடுமுடிகளாகத்' தங்களைக் கற்பனை செய்து வரும் எழுத்தாளர்கள் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் 20 வருடங்கள் பழமை வாய்ந்த தனது சிறுகதைகளையும் இத்தொகுதியிலே வேலோன் இடம்பெறச்செய்திருப்பது இலக்கிய, சமூகவியல் ஆய்வாளர்களின் விசேட கவனத்திற்குள்ளாகின்றது. சலனமற்றிருந்த **தமிழ்மக்களின் வாழ்க்கையும், அவர்களின் அகவுணர்வுகளும் இன ஒடுக்குமுறைகளால் எவ்வாறு 'திசைமாறிய பயணமாயிற்று' என்பதை இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் சித்திரமாக்கியுள்ளன.**

1983ம் ஆண்டு இலங்கைத் தமிழ்மக்களின் வாழ்க்கையை மட்டுமன்றி, தமிழ் இலக்கியத் தடத்தினையும் திசைமாற்றிவிட்ட அவலத்தினை இச்சிறுகதைகளினுடாகத் தரிசிக்க முடிகிறது. இக்காலப்பகுதிக்கு முன்னர் எழுதப்பட்ட 'அரங்கேற்றம்' 'ஒற்றைப்பனை', 'புத்தொளி', 'புதிய அத்தியாயம்' ஆகியன வடமராட்சிப் பிரதேச கிராமங்களின் வளப்பையும், இயற்கை வளத்தையும், அங்கு வாழ்கின்ற மக்களின் அன்பும்; அமைதியும் நிறைந்த வாழ்க்கையையும் படம்பிடிக்கின்றன. தூய காதலுணர்வையும், அந்தக் காதலில் வெற்றி பெறுவதற்காக அவர்கள் செய்யும் அற்புதமான தியாகங்களையும் அவை சித்திரிக்கின்றன.

அன்பும், பாசமும், தியாக உணர்வும் நிறைந்த இந்த மக்களின் வாழ்க்கையை 1983ஆம் ஆண்டுக்கலவரம் அபஸ்வரமாக்கிவிட, அவர்களின் உணர்வுகளும் எரிமலையாகக் குமுறத்தொடங்கி விட்டதனை 'காகித உறவுகள்', 'அம்மா', 'விடியட்டும் பார்ப்போம்...!', 'இருட்டினில் வாழும் உயிர்களுக்கு...!' ஆகிய சிறுகதைகள் உணர்த்துகின்றன.

"நாட்டிலே நடைபெறும் சம்பவங்கள் மனதுக்கு இதமானவையாக இல்லாதிருப்பதும், விடியலைத் தேடும்போது தூர ஒரு விடிவெள்ளிதானும் புலப்படாதபோதும் எப்படி ஒரு எழுத்தாளனால் ஆரோக்கியமான பிரசவங்களை பிரசவிக்க முடியும்?" என்ற கேள்விக் கோளுக்கியோடு தனது எழுத்தாற்றலைத் தொலைத்துவிட்டு நின்று பரிதவிக்கும் ஓர் எழுத்தாளன் அந்தப்பிரதேசத்தின் பதச்சோறாகி விடுகிறான்.

படிப்பகம்

www.padippakam.com



இழப்பதற்கு எதுவுமற்ற நிலையில், அற்ற குளத்து அறுநீர்ப்பறவைகளாக, ஐரோப்பிய நாடுகளுக்கு வல்லவர்கள் புலம்பெயர்ந்து சென்றுவிட, இந்த மண்ணைவிட்டுப்பிரியவும் முடியாமல், வாழவும் வழியில்லாமல் சொந்த மண்ணிலேயே அகதிகளாக முன்வினைப் பயன்களையே பற்றுக்கோடாகக்கொண்டு வாழும் ஒரு மூதாட்டியின் அவலத்தைச் சித்திரிக்கும் 'அம்மா'வும் ஒரு பதச்சோறாகிவிடுகிறாள்.

யுத்த வியூகங்களினால், பௌதிக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மட்டுமன்றி, அறிவுரீதியாகவும், உணர்வு ரீதியாகவுங் கூட குடாநாட்டின் 'முளைகள்' முற்றுகையிடப்பட்டுள்ளார்கள் என்பதை இருட்டினில் வாழும் உயிர்களுக்கு......' சித்திரிக்கின்றது.

யாழ்ப்பாண சமூகவியல் தளத்தை உணர்ந்துகொண்ட படைப்பாளி ஒருவனால் அங்குநிலவும் சாதிப்பாகுபாடுகளையும், சமூகத்தின் மீதான அதன் கொடூரமான அழுத்தங்களையும் எழுதாமலிருக்க முடிவதில்லை. வேலோனும் இதற்கு விதிவிலக்காகிவிட முடியாது. 'ஒற்றைப்பனை' வடமாராட்சியில் வாழும் 'மேட்டுக்குடிமக்களின்' வாழ்க்கை முறையினை 'குளோஸ்அப்பில்' (மிகத்துல்லியமாகப் ) படம் பிடித்துள்ளது.

உழைப்பையே மூலதனமாகக் கொண்டுவாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் அயரா முயற்சியையும், அவர்களின் எளிமையான வாழ்க்கை முறையையும், அவர்கள் வாழும் வட்டாரத்தின் சூழல் பகைப்புலத்தையும், செம்புலப்பெயல் நீர்போல, அந்தப் பிரதேசத்துடனேயே ஒன்றிப்போய்விட்ட அவர்களின் பேச்சுவழக்கினையும் **'ஒற்றைப்பனையிலே' ஓர் 'உள்வீட்டுப் பிள்ளை' போலவே வடித்தெடுத்திருக்கின்றார் வேலோன்.** மிக நுணுக்கமாக அந்த மக்களின் வாழ்வியலைப் புரிந்து கொண்டு தமது போதையூட்டும் சொல்லாட்சியினால் **'ஒற்றைப்பனையை' ஓர் எழுதா ஓவியமாக்கியிருக்கின்றார்.** உள்வீட்டுப் பிள்ளைகளினால் மிகவசதியாகவே தவிர்க்கப்பட்டு விடுகின்ற உள்முரண்பாடுகளையுஞ் சுட்டிக்காட்டுவதன்மூலம் தமது பார்வைவீச்சினை ஒற்றைப்பனை மூலம் துளாம்பரமாக்கியிருக்கிறார் வேலோன்.

படிப்பகம்

www.padippakam.com



'காகித உறவுகள்' சிறுகதை வடிவத்தில் ஒரு புதிய உத்தி.

இன்னொரு வகையிலே, 'விடியட்டும் பார்ப்போம்....!' வாசகர்களினதும், ஆய்வாளர்களினதும் கவனத்தை ஈர்க்கின்றது. யாழ்ப்பாண மக்கள், காதல், திருமண உறவுமுறைகள், பாலியல், தொடர்புகள் பற்றி மிக இறுக்கமானதும், கட்டுக்கோப்பானதுமான மரபுகளைக் கடைப்பிடிப்பவர்களென கூறப்படுபவர்கள். இத்தகைய உறவுமுறைகளின் 'கிடுக்கிப்பிடி' 'ஒற்றைப்பனை', 'காகித உறவுகள்', 'புதிய அத்தியாயம்', 'புத்தொளி', 'அரங்கேற்றம்' ஆகிய கதைகளிலே தளர்வுற்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

ஈழத்திலே சிறுகதைகளின் வடிவம், பொருள், சமுதாயத்தின் மீதான பார்வைவீச்சு ஆகியவற்றினைப் படைப்பாளி சார்ந்திருக்கும் அணியின் கொள்கைகளே தீர்மானிப்பவையாக இருந்திருக்கின்றன. எழுத்தாளர் பலருக்கு இவ்வுண்மை வேம்பாகக் கசத்தல் கூடும். அவர்கள் ஆக்ரோசமாக இதனை மறுக்கவுங்கூடும். ஆனாலும், அவர்கள் தம்மையறியாமலே ஏதோ ஒரு கொள்கைசார் அணியின் பாதிப்பினுக்கு ஆட்பட்டவர்கள் என்பதனை மறுத்துவிட முடியாது. எமது நாட்டிலே எழுந்த முற்போக்கு இலக்கியங்களின் தாக்கம், அவ்வணிசாரா எழுத்தாளர்களது படைப்புக்களின் தனித்துவங்களை கணிசமான அளவில் ஆற்றுப்படுத்தியுள்ளது என்பதை எவரும் மறந்துவிடவும் கூடாது.

**புலோலியூர் ஆ. இரத்தின வேலோனின் படைப்புக்களில் நிறையவே முற்போக்கு இலக்கியத்தின் தாக்கத்தினை உணரமுடிகிறது. சமூகப் பார்வை ஆழம்மிக்கதாகக் காணப்படுகின்றது.** அவரது அனுபவங்கள் விரிவடையுமிடத்தும் சமூகப்பார்வை விசாலமடையுமிடத்தும் நிச்சயமாக அவரிடமிருந்து இன்னும் சிறப்பான படைப்புக்களை நாம் எதிர்பார்க்கலாம்.

**சி. வன்னியகுலம்** M.A.
**பணிப்பாளர் (தமிழ் நிகழ்ச்சிகள்),**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**கொழும்பு – 07.**

படிப்பகம்

www.padippakam.com

இரத்தின வேலோன் வெறுமனே கதைகளைக் கட்டாமல், கட்டுக் கதைகளை எழுதாமல், தான் உணர்ந்ததை ஆக்கமாகத் தருவதில் அக்கறை கொண்டுள்ளார்.

1977 முதல் எழுதுகிறார். இவரது ஆக்கங்கள் இடம் பெற்ற நூல்கள் காலத்தின் யுத்தங்கள், அறிமுக விழா, மல்லிகைக் கவிதைகள். சிறுகதையுடன் கவிதையிலும் ஈடுபாடு கொண்ட ஆ. இரத்தின வேலோன் தரமான கலை/ இலக்கியப் பத்தி எழுத்தாளரும் ஆவார்.

1996இல் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'புதிய பயணம்' அறுவடை செய்யப்பட்டது. அண்மைக் காலச் சிறுகதை எழுதும் பாணி/பாங்கு மெல்ல இரத்தின வேலோனிடமும் வரத் தொடங்குகிறது என்று கூறுமளவிற்கு இவருடைய கதைகள் அத்தொகுதியில் அமைந்திருந்தன. இவருடைய தனித்துவமான ஆளுமையின் வளர்ச்சியை இவரது கதைகள் காட்டி நிற்கின்றன. சமுதாயத்தையும், மனிதர்களையும் இவர் பார்க்கும் பார்வை இவருக்கே உரியது. இதனால் வித்தியாசமான அனுபவத்தை வாசகர் நுகர முடியும்.

**கே. எஸ். சிவகுமாரன்**
01.10.1996

www.padippakam.com

உரையாடல் ஊடாகவே கதை நகர்த்தும் தன்மை, குறியீடுகள் வாயிலாகச் சம்பவங்களைச் சிறப்பிக்கும் திறமை, மண்வாசனையுடன் எழுதும் ஆற்றல், இவைகளால் இரத்தின வேலோன் தனித்துவ மிக்க ஒரு எழுத்தாளனாகத் திகழ்கிறார்.

ஆ. சிவநேசச் செல்வன்.
14.07.1996

படிப்பகம்

# முன்னுரை

எமது ஈழத்தாய்த்திருநாட்டின் தமிழ் கலை இலக்கியப் பூங்காவில் ரோஜாக்கள், மல்லிகைகள், முல்லைகள், மருக் கொழுந்துகள், செவ்வரத்தைகள் போன்ற பலவர்ண, பல்வேறு வண்ணப் பூக்கள் மலர்ந்துள்ளன. அதேவேளை, முள்முருக்கம் பூக்களும், காகிதப் பூக்களுமிருக்கின்றன.

கலை இலக்கியம் காலத்தின் கண்ணாடி. அது ஒரு சமூகத்தில் வாழ்கின்ற மக்களது வாழ்வை, அவர்களது பண்பாட்டை அடிநாதமாகக் கொண்டிருக்கவேண்டும்.

கலை கலைக்காக, மனிதனுக்கப்பாற்பட்டகலை, ஆத் மார்த்தக்கலை, தெய்வீகக்கலை என ஒரு சாரார் கூறிக்கொண்டு தமது படைப்புக்களை ஆக்குகின்றனர். இவர்கள் உருவத்திற்கு மாத்திரம் அதிக அழுத்தம் கொடுப்பதுடன், உள்ளடக்கத்தில் கவனம் செலுத்து வதில்லை. இந்த வகையைச் சார்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் ஆத்ம திருப்திக்காக எழுதுகின்றோம் என்று கூறிக்கொள்கின்றனர்.

அண்மைக்காலமாக சில எழுத்தாளர்கள் உருவமயக்கத்தில் தமது படைப்புக்களில் சொற்சிலம்பமாடிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் உருவத்திற்கு மாத்திரம் அதிக கவனம் செலுத்துவதுடன் அதையே தமது இலட்சியமாகக் கருதிக் கொண்டு தமது படைப்புக்களைப் புனைகின்றார்கள். இவர்களுக்கு சமுதாயம் பற்றி எள்ளளவும் அக்கறையில்லாததுடன், சமுதாயம் பற்றிய ஒரு தெளிவான பார்வையோ, எந்த வித இலக்கோ இன்றி தமது ஆக்கங்களைப் புனைகின்றார்கள். இவர்கள் ஆழமான சமுதாய, அரசியல் பார்வையோ,

www.padippakam.com



ஆழமான படிப்போ அற்றவர்களாக இருக்கின்றார்கள். மேற்கு நாடுகளில் சொல்லரித்துத் தேய்ந்து இறந்துகொண்டிருக்கின்ற மலட்டுத்தனமான இலக்கிய சித்தாந்தங்களை நுனிப்புல் மேய்ந்துவிட்டு, அவற்றை அரைகுறையாக விளங்கியும் விளங்காமலும் இந்த இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் "தமிழிலே நவீனமுறையில் புதிய உருவத்தில் படைப்புக்களை புனைகின்றோம்." என்று கூறித் தமது ஆக்கங்களைப் படைக்கின்றார்கள். இவர்களது படைப்புக்களைப் பரந்துபட்ட மக்களால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கின்றது. நவீனத்துவம், பின்நவீனத்துவம், அமைப்பியல் வாதம், மஜிக்கல் றியலிஸம் போன்ற கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டு தமது படைப்புக்களை ஆக்குகின்றோம் என்று கூறுகின்றார்கள். மனிதனுடைய உள்ளங்களில் ஏற்படுகின்ற உள்ளுணர்வுகளே மனக்குகை ஓவியங்களாகப் பரிணமிக்கின்றன என்று கூறிக் கொண்டு தமது ஆக்கங்களில் தம்மையும், தமது சக்திக்கப்பாற்பட்ட ஏதோ ஒன்றையும் தேடிக் கொண்டிருக்கின்றோம் என்று கூறுகின்றார்கள்.

கலை இலக்கியம் மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டும் என்ற சமூகப் பிரக்ஞையுடன் தமது படைப்புக்களைச் சிருஷ்டிக் கின்றார்கள். இன்னொரு பகுதி எழுத்தாளர்கள். இப்படைப்புக்கள் சமூகத்தில் வாழ்கின்ற மக்களை, அவர்களது வாழ்க்கைமுறைகளை, அவர்களது பண்பாட்டை, அவர்களது பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்டு இருக்கின்றன. அத்துடன் சமூகத்திலுள்ள மக்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள், இவைகளால் ஏற்படுகின்ற போராட்டங்கள், இப்போராட்டங்கள் மூலம் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமது சிருஷ்டிகளைப் படைக்கின்றார்கள் இந்த எழுத்தாளர்கள். இவர்களுக்கு தெளிவான சமூக, அரசியல் பார்வை இருப்பதுடன், இலட்சிய இலக்கு இருக்கின்றது. உள்ளத்தில் ஒளியுண்டானால் வாக்கினிலே ஒளியுண்டு என்று மகாகவி பாரதி கூறியது போல, மக்களுக்காகக் கலை இலக்கியம் படைப்பவர்களுக்கு தெளிவான பார்வையுண்டு. இதனால்தான் இவர்களுடைய படைப்புக்களில் தெளிவிருப்பதுடன், பரந்துபட்ட மக்களால் இவர்களுடைய படைப்புக்கள்

www.padippakam.com



புரிந்து கொள்ளக் கூடியனவையாகவுமிருக்கின்றன. உயிரும் உடலும் இணைந்தால்தான் மனிதனால் இயங்கமுடியும். உயிரற்ற உடல் வெறும் சடம், பிணம். ஆகவே, உருவமும், உள்ளடக்கமும் இணைந்தாலே கலாபூர்வமான உயிரோட்டமுள்ள படைப்புக்களைப் படைக்கமுடியும். இப்படிப்பட்ட சிருஷ்டிகளைப் படைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள் மக்களுக்காக கலை இலக்கியம் படைக்கின்ற பெரும்பாலான இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்கள்.

மேலே கூறப்பட்ட கோட்பாடுகளுக்கு தன்னை உள்படுத்திக் கொள்ளாமல், **இரத்தின வேலோன் தனக்கென ஒரு சுய நிலைபாட்டை எடுத்துக்கொண்டு தனது படைப்புக்களைச் சிருஷ்டிக்கின்றார். வேலோனின் ஆக்கங்களில் எளிமையிருக்கின்றது. தெளிவு இருக்கின்றது. உயிர்த்துடிப்பும், கலை அம்சமுமிருக்கின்றன.**

இரத்தின வேலோன் தான் சார்ந்த மத்தியதர வர்க்கத்தின் ஆசாபாசங்களை, உணர்வுகளை தனது படைப்புக்களில் வெற்றிகரமாக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் நாட்டில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் மத்தியதர வர்க்கத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை, அதன் தவிர்க்க முடியாத சிதைவை தமது ஆக்கங்களில் பிரதிபலித்துள்ளார் வேலோன். மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த அவரது பாத்திரங்கள் ரத்தமும், சதையுமுள்ள உயிர்த் துடிப்புள்ளவையாக இருப்பதுடன், இந்த வர்க்கத்தின் ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், அவலங்கள், தோல்விகள் ஆகிய உணர்வுகளை தமது பாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். **வேலோனின் படைப்புக்களில் யாழ்ப்பாணம் - வடமராட்சிப் பிரதேசத்தின் மண்வளமும், வாழ்வு நிகழ்வுகளும் சித்திரிக்கப்பட்டு, இவை நமது உணர்வுகளைத் தொடுவனவாக உள்ளதுடன், ஒருவித துயர அலையையும் நமது உள்ளத்தில் ஏற்படுத்துகின்றன.**

'விடியட்டும் பார்ப்போம்...!' என்ற இவரது தொகுதியிலுள்ள கதைகளை வைத்துக்கொண்டு இரத்தின வேலோனின் இலக்கியத் தரத்தினையும் வளர்ச்சியையும் எடை போட முடியாது. ஏனென்றால்

www.padippakam.com



'புதிய பயணம்' என்ற இவரது முதற் தொகுதியிலுள்ள கதைகள் படைக்கப்படுவற்கும் முன்பே அதாவது இவரது ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட பெரும்பாலான கதைகள்தான் இவருடைய இந்த 'விடியட்டும் பார்ப்போம்' என்ற தொகுதியில் அடங்கியுள்ளன. அப்படியிருந்தும், இக்கதைகளில், இவர் எதிர்காலத்தில் ஒரு நல்ல படைப்பாளியாக வளர முடியும் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன. இவருடைய முதலாவது தொகுதியிலுள்ள கதைகளைப்போல வலுவையும், கலைத்துவத்தையும் இக்கதைகளில் நாம் தரிசிக்க முடியாவிட்டாலும், இக்கதைகள் சோடைபோகாதவையாக இருக்கின்றன என்று எண்ணத்தோன்றுகின்றது. அத்துடன் இக்கதைகளில், சிதைந்து கொண்டிருக்கின்ற மத்தியதர வர்க்கத்தின் ஏக்கம் நிறைந்த துயரம் நூலிழையாக ஓடிக்கொண்டிருப்பதை நாம் உணர முடிகின்றது. பிரதேசரீதியான மண்வாசனையும், இதை மேம்படுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களும் உவமான உவமேயங்களும் இவரது பாத்திரங்களுக்கு உயிரோட்டத்தையும், ஓரளவு வலுவையும் கொடுப்பதைக் காணமுடிகின்றது.

'ஒற்றைப்பனை' என்ற கதையில் வருகின்ற மலர்விழியை ஆசிரியர்; "வடலிப் பருவம்.... குருத்தோலை மென்மை.... சார்வுநிறம்.... பாளைச்சிரிப்புதிர்த்துப்.... பார்ப்பதற்குப் புதிதாக வார்த்த பனாட்டுத்தட்டாகப் பளப்பளப்புடன் காட்சியளித்த அவள் தன்னையே வைத்த கண்வாங்காமல்...." என்று சித்திரிக்கும்போது ஆசிரியரது தனித்துவத்தைப் புலப்படுத்துவதுடன் கலாபூர்வமானதாக வுமிருக்கின்றது. மேலும், பனம் பொருள்நிலையம் நிறுவப்பட்டபின்பு வடமராட்சிப் பிரதேசத்தில் வாழ்கின்ற ஒரு பிரிவு மக்களிடையே ஏற்பட்டுவருகின்ற பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றத்தையும் இப்படைப்பில் கோடிட்டுக் காட்டுகிறார் வேலோன். "காவோலை கட்டி இழுத்தவைக்கு வடம் பிடிச்சு தேர் இழுக்கக் கேக்குதோ", "இப்ப நாங்கள் சீவுற கள்ளுக் கருப்பணியக் எல்லாம் கோப்பறே சனுக்குத்தான் நேராகப் போகுது. முன்னை மாதிரி வீடு வீடாகத் திரிஞ்சு குடுக்கிறதில்லை. அதோடை வெங்காய வைப்பு, களைப்புடுங்கல் எண்டு எங்கடை பகுதிப் பெண்டுகள் எங்கையும் அலையத்

www.padippakam.com



தேவையில்லை. மூடல், குட்டான், பாய் இளைக்கிற வேலையோ, அல்லது பணங்கட்டி, பாணிப்பனாட்டு, புளுக்கொடியல் போடுகிற வேலையோ எதுவெண்டாலும் அவையள் எல்லாரும் எங்கடை பனம் பொருள் நிலையத்துக்கு வந்து வேலை செய்யலாம். அதேமாதிரித்தான் சலவைத் தொழிலாளிகளையும் குடிமைத் தொழில் செய்ய வேண்டாமெண்டு அறிவிச்சிருக்கிறம்" என்ற இச்சித்திரிப்பு அப்பிரதேசத்தில் ஏற்பட்டுவருகின்ற சமூக, பொருளாதார மாற்றத்தை வெளிக்காட்டுகின்றது.

"பட்டுப்போன பனையிலை பாளையைப் பார்த்துக்கொண்டு நிக்கிறியளே...... விட்டுப்போட்டு நானிப்ப சொல்லிறதைக் கேளுங்கோ......" "உங்கடை நல்ல மனதுக்கு ஒண்டும் நடக்கக்கூடாது! என்னாலை நீங்கள் ஏமாந்து போனதாகவும் இருக்கப்படாது! அதுக்காகத்தான் இதெல்லாத்தையும் சொல்லுறன். சலனமற்ற குளமாயிருந்த உங்களின்ரை வாழ்க்கையிலை இளமை உணர்ச்சிக்கு இடமளிச்சு ஒரு கல்லைப் போலை நான் வந்து விழுந்தன். ஆனால், உங்களோடையும் வாழ முடியாமல், அவரோட கடைசிவரை வாழுற பாக்கியமுமில்லாமல் ஒரேயடியாய் வாழ்க்கையிலை விழுந்து போயிருக்கிறன்." மலர் விழி என்ற பாத்திரத்தின் அவலநிலையும் துயர வாழ்வும் உணர்வு பூர்வமாக மனதை தொடும் வகையில் இக்கதையில் வெளிப்பட்டிருக்கின்றது. **'ஒற்றைப்பனை' என்கின்ற இக்கதை உள்ளத்தை விட்டகல மறுக்கின்றது.**

அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தைச் சார்ந்த, அதாவது இச்சமூகத்தில் பிறந்து வளர்ந்த ஒரு எழுத்தாளனால் தான் அந்தச் சமூகத்தின் இன்ப துன்பங்களை, உணர்வுகளை பூரணமாக தனது படைப்புக்களில் வெளிப்படுத்த முடியும். அவனுக்குத்தான் அந்த உணர்வு இருக்க முடியும். அவனுக்குத்தான் அந்த உரிமையும் உண்டு என்று சமீப காலமாக ஒரு குரல் இங்கு ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்தக் கருத்தோட்டத்தை, ஏற்கெனவே, எழுதிய சில சமூகப் பிரக்ஞையுள்ள சில எழுத்தாளர்களது சில படைப்புக்களைப்போல இரத்தின வேலோனின் 'ஒற்றைப்பனை' என்ற படைப்பும்

www.padippakam.com



பொய்ப்பித்திருக்கின்றது. தூய்மையான உள்ளத்தையுடைய மனிதாபிமானமுள்ள ஒரு எழுத்தாளன், அவன் எச்சமூகத்தை சார்ந்தவனாக இருந்தாலும், அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகக் குரலெழுப்ப வேண்டுமென்ற புனிதமான உணர்வு அவன் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்தால் அவனுடைய சிருஷ்டிகளில் இந்த இலட்சிய வேட்கையை நாம் காண முடியம். இரத்தின வேலோனின் இந்தப் படைப்பில் நாம் இதைக் காண்கின்றோம்.

'விடியட்டும் பார்ப்போம்', 'காகித உறவுகள்' ஆகிய இரண்டு கதைகளும் ஒரு எழுத்தாளனுடைய அவல வாழ்வை, அவனுடைய படைப்புக்கான மனோ அவஸ்த்தையை, உணர்வுகளை மேலோட்டமாக வெளிப்படுத்துகின்றதுடன் **இரத்தின வேலோனே கதாபாத்திரங்களாக இக்கதைகளில் வந்து நிற்கின்றார்.** "நாட்டிலே நடைபெறும் சம்பவங்கள் மனதுக்கு இதமாக இல்லாதிருப்பதும், விடியலைத்தேடும் போது தூர ஒரு விடிவெள்ளி தானும் புலப்படாத போதும் எப்படி ஒரு கதைஞனால் ஆரோக்கியமான பிரசவங்களைப் பிரசவிக்க முடியும்?" என்ற கூற்று ஆசிரியரின் பிரசவ வேதனையை, விரக்தி மனோநிலையை வெளிப்படுத்து கின்றது. 'அம்மா' என்ற கதை உள்ளத்தைத் தொடக்கூடியதாக இருந்தாலும் இது தென் இந்திய சினிமாப் பாணியிலமைந்துள்ளது.. 'புதிய அத்தியாயம்', 'ஒரு பக்கத் தாளம்'ஆகிய கதைகள் வாலிபப் பருவ உணர்வுகளையும், காதலையும் மேலோட்டமாக வெளிப்படுத்துகின்றன. 'புத்தொளி' என்ற கதை யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள சீதனக் கொடுமையினால் 'குமர் முத்திக் குரங்காகிப் போகிற' அவல நிலையைக் காட்டுகின்றது. அத்துடன், "உந்தக்கலட்டறியாத குலங்கோத்திரம் பார்க்கிறதாலைதானே எங்கடை இன சனங்கள் இப்பிடி விடியா மலிருக்குதுகள். உதுகளிலை என்னகிடக்கு? எங்கடை நில வரத்தையுமல்லோ நாங்கள் யோசிக்கவேணும். பொடிச்சிக்கும் வாற ஐப்பசியோடை முப்பத்திரண்டு முடியப்போகுது, இனியும் சிறை வைச்சிருந்து என்னெயப்போறாய்?", என்ற நிலையும் இறுதியில், 'இரண்டாந்தாரமாய்' கட்டிக்குடுக்கிற முடிவுக்கு புவனத்தின் தம்பி வந்ததுடன், 'அடுப்பு சுவாலை விட்டு எரியவில்லை, புத்தொளி வீசிக்கொண்டிருக்கின்றது.' என்ற குறிப்புடன் ஆசிரியர் முத்தாப்புடன்

www.padippakam.com



கதையை முடிக்கின்றார். 'இருட்டினில் வாழும் உயிர்களுக்கு.......!' என்ற கதையில் யுத்தம் சிறுவர்களுடைய உள்ளத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆசிரியர் தனது கதையின் இறுதிப் பகுதியில் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார். 'அரங்கேற்றம்' என்ற படைப்பில் ஆசிரியர் சில படைப்பாளிகளின், கலைஞர்களின் போலித்தனத்தை வெளிப்படுத்துகின்றார். "ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி" என்பதைப் போல சில எழுத்தாளர்களின் எழுத்து வேறு, வாழ்க்கை முறை வேறாக இருப்பதை இந்தப் படைப்பில் ஆசிரியர் காட்டியுள்ளதுடன், இவர்களின் ஆஷாடபூதித்தனத்தை இதன்மூலம் வெளிக்கொணர்ந்துமுள்ளார். அத்துடன் இந்த வேடதாரித்தனத்துக்கெதிராக, சாதிக்கட்டுப்பாட்டைத் தகர்க்கும் வகையில், "என்ரை புருசனை என்ரை எதிர்காலத்தை நான் நிச்சயித்துப்போட்டன். இனி இதிலை குறுக்கிட எவருக்கும் உரிமை இல்லை." என்ற **பெண்ணின் கிளர்ச்சி மனப்பான்மையையும். உரிமைக்குரலையும் இக்கதையில் ஆசிரியர் வெளிப்படுத்தி யுள்ளார்.**

மொத்தத்தில் இத்தொகுப்பிலுள்ள கதைகளில் பெரும் பாலானவை இரத்தின வேலோனின் ஆரம்பகாலக் கதைகளாக இருப்பதால், 'புதிய பயணம்' என்ற அவரது முதற் தொகுதியிலுள்ள கதைகளிலும் பார்க்க காத்திரமும், வலுவும் குறைந்தவையாக இருந்தாலும், இக்கதைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு ஆசிரியரது படைப்பாற்றலையும் இலக்கிய தரத்தையும் எடைபோட முடியாது. இப்படைப்பாளி எதிர்காலத்தில் ஒரு சிறந்த சிறுகதை ஆசியராய் வரக்கூடியவராய் இருக்கின்றார் என்பதை இக்கதைகளிலிருந்து நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

**வசந்தம்,** **நீர்வை பொன்னையன்**

**நீர்வேலி.**
05-01-97

www.padippakam.com

# தொடரும்.....
# (புதிய) பயணம் !

**1977** முதல் கடந்த 20 வருடங்களாக இலக்கிய உலகில் ஈடுபட்டதனால் விளைந்த சிறுகதைகளுள் இருபதினைத் தேர்ந்தெடுத்து இரு தொகுதிகளாக வெளியிட எண்ணினேன். அதன் பிரகாரம் பதினொரு கதைகளைக் கொண்ட தொகுதி 'புதிய பயணமாக' கடந்த ஆண்டு வெளிக்கொணரப்பட்டது. மீதி ஒன்பதும் 'விடியட்டும் பார்ப்போம்.......!' என்ற தலைப்பில் இப்போது உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

கதைகளுள் தேர்ந்தெடுத்து.... புதிய பயணத்தை அறுவடை செய்ததால் கனதியும், வலுவும் சேர்ந்த கதைகள் அதில் அடங்கிவிட, மிகுதிகள் இத்தொகுதியில் வந்து அதே வலுவினை அடையமுடியாது போய்விட்டமை தவிர்க்கமுடியாததுதான். ஆனாலும்...... காலத்தினை, கடந்த இரு தசாப்த வரலாற்று நிகழ்வுகளை காட்டும் பதிவுகளாக இவைகள் நிச்சயம் விளங்கும் என்பதே எனது நம்பிக்கை.

1983ல் நிகழ்ந்த ஆடிக்கலவரத்தின் முன் எழுதப்பட்ட பெரும்பாலான கதைகளே இதில் அடங்குகின்றன. கல்லூரி மாணவனாக, முதிரா இளைஞனாக நான் இருந்த காலங்களில் என் மனதினைப் பெரிதும் பாதித்த சாதிப் பாகுபாடு, சீதனக் கொடுமை போன்றவற்றினை அடிநாதமாக வைத்து எழுதப்பட்ட கதைகள் தான் இவை. இக் கொடுமைகளை எதிர்த்து பேனாவால் போர் தொடுக்கும் ஒரு போர்வீரனாக அப்போது என்னை நான் பிரகடனப்படுத்தியதுண்டு.

ஆடிக் கலவரம் எமக்கு மேலும் பளுவை அதிகரிக்கச் செய்தது. புதிய பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டி வந்தது. எம்மிடையே இருந்த சிறிதளவு நிம்மதியும் இல்லாது போய்விடவே.....

www.padippakam.com



முகமில்லாத மனிதர்களானோம் நாம். தொலைந்துபோன முகவரிகளை தேடிப் பிடிக்கும் முயற்சியில்........ எமது பேனாவும் தமது போராட்டப் பரிமாணத்தினை அகலப்படுத்திக் கொண்டது. அதன் விளைவால், பிரசவிக்கப்பட்ட கதைகள் தான்...... 'விடியட்டும் பார்ப்போம்....!' 'இருட்டினில் வாழும் உயிர்களுக்கு....!', போன்ற சமீபத்திய எனது கதைகள்.

**எமது மக்கள் படும் துன்பங்களை, துயரங்களை உள்வாங்கி, உண்மைகளாக, சத்தியமான வெளிப்பாடுகளாக உணர்வு குன்றாது அவற்றினை வெளிக்கொணர்வதற்காக..... அந்த அனுபவங்களை எனதாக்கி பின் நானாகவே நின்று கதை சொல்கிறேன்.**

புதிய பயணத்தில் இருந்து நான் ஆரம்பித்த இத்தகைய பாணியிலமைந்த இலக்கியப் பயணம் எந்தளவு தூரம் வெற்றி பெற்றுள்ளது என்பதனை திறனாய்வு செய்து வாசகர்களாகிய நீங்கள் தான் எனக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும்!

☆

**18** வயதில் எழுத ஆரம்பத்த எனக்கு 38 வயதில்தான் அடுத்தடுத்ததாக இருதொகுதிகளையும் அறுவடை செய்ய முடிந்தது. இதற்குக் களமமைத்து தந்த எமது அச்சக, நிர்வாக இயக்குனர் திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பாடுடையவன்.

வழமைபோல் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தந்ததோடு மட்டுமன்றி, இந்நூலிற்கு நல்லதோர் ஆசியுரையும் நல்கி, எனது கதைகள் சிலவற்றையும் தனது இல்ல நூலகத்திலிருந்து கொடுத்து தவிய எனது குடும்ப நண்பரும், மலையக முன்னோடி எழுத்தாளருமான திரு. தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு எனது அன்பினைத் தெரிவிக்க

www.padippakam.com



விரும்புகிறேன். நூலிற்கு முன்னுரை தந்துதவிய மூத்த எழுத்தாளர் திரு. நீர்வை பொன்னையன் அவர்களுக்கும், நூலைப்பற்றிய நல்லதொரு அறிமுகவுரை தந்த இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைகள் பணிப்பாளர் திரு. சி. வன்னியகுலம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நான் கல்லூரி மாணவனாக இருக்கும் காலத்திலிருந்தே என் வளர்ச்சிக்கு உரமிட்டு வரும் வீரகேசரி வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியரும், மூத்த பத்திரிகையாளருமான மதிப்பிற்குரிய திரு. பொன் ராஜகோபால் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது குடும்பத்தினர் சார்பாகவும் விசேட நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

எனது இச்சிறுகதைத் தொகுதி நல்ல முறையில் உருவாக என்னுடன் துணைநின்ற சோதரி இ. நிஷாந்தினி மற்றும் எமது அச்சகக் குடும்ப அங்கத்தவர்களுக்கும், இச்சிறுகதைகளைப் பிரசுரித்த பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் எனது அன்பு நன்றிகள்.

இனி கதைகளை உங்கள் பார்வைக்குத் தருகின்றேன்.....!

**புலோலியூர் ஆ. இரத்தின வேலோன்.**

**'மீரா அகம்',**
**புற்றளை, புலோலி,**
02-02-1997.

www.padippakam.com

# அரங்கேற்றம்

"இதோ இன்னும் சில விநாடிகளில் மேடையேறக் காத்திருக்கிறது வயலூர் முத்தமிழ்க் கலா மன்றம் பெருமையுடன் அளிக்கும் சமூகச் சீர்திருத்த நாடகமான 'அரங்கேற்றம்'! 'வழி பிறந்தது', 'யுகோதயம்' போன்ற வெற்றி நாடகங்களை உங்களுக்கு அளித்த முத்தமிழ்க் கலா மன்றத்தினரின் மூன்றாவது வெளியீடு முதலாவது தடவையாக இதோ இன்று உங்கள் முன் மேடையேறக் காத்திருக்கிறது" – வயலூர் பிள்ளையார் கோவிலின் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த கூத்துக் கொட்டகையிலிருந்து வாடைக் காற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருந்தது.

விநாயகா ஒளியமைப்பாளர்களது 'ஜெனரேட்டர்' கோவில் தீர்த்தக் கேணியடியில் பெரும் ஒலியை எழுப்பிக்கொண்டிருக்க, சண்முகா ஒலியமைப்பாளர்கள் வாடைக்காற்றிற்கு எதிராக தமது பழைய சாதனங்களை இயக்குவதில் பெரும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அறிவிப்பாளரின் குரலுடன் போட்டி போட்டுக்கொண்டு காற்று 'மைக்'கினுள் புகுந்து எழுப்பும் ஓசை வேறு பார்வையாளர்களது காதுகளைக் கிழித்து விடும் போல் இருந்தது.

"எங்களது கன்னிப் படைப்பிற்கு நீங்கள் தந்த ஆதரவே மென் மேலும் எம்மை இக்களத்தில் காலூன்ற வைக்கின்றது. சென்ற இடமெல்லாம் புகழ் பரப்பி இதோ மீண்டும் எம் மண்ணில் தமது மூன்றாவது நாடகத்தினை அரங்கேற்றுவதில் வயலூர் முத்தமிழ்க்

www.padippakam.com



கலாமன்றம் அகம் மகிழ்கின்றது!" கே.எஸ்.ராஜாவின் குரலினைக் குத்தகைக்கெடுத்து திரைக்குப் பின்னால் ஒலிக்கும் மன்றத்து அறிவிப்பாளரின் அறிவிப்பினைக் கேட்டு, கோவிலின் நாலாபுறமும் சிதறி நின்றவர்கள் வடக்கு விதிக் கொட்டகையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

கோவிலில் கூத்து என்பதைச் சாட்டாக வைத்து, வீட்டுக்குத் தெரியாது பருத்தித்துறை, நெல்லியடி திரையரங்குகளுக்கு படம் பார்க்கச் செல்லும் இளவட்டங்கள் கூட இன்று தமது 'புரோக்கிராமைக் கான்சல்' பண்ணிவிட்டு நாடகம் பார்க்கவென வந்திருந்தார்கள்.

"உரிமைக்குரல் எழுப்பும் சமூகத்தில் உரிமையற்ற ஒரு பகுதி மக்கள் உள்ளவரை அச்சமூகம் உரிமைபெறப் போவதில்லை! நிலப்பிர புத்துவ யுகத்தை ஒழித்து ஒரு புதிய யுகத்தை அரங்கேற்றுவோம்!"

"ஒரு மூண்டு மணித்தியாலக் கூத்துக்கு இவையள் ஆலாபரணங்கள் பண்ணி முடியவே விடிஞ்சிடும் போலகிடக்கு." கூத்துப் பார்க்கவென வந்திருந்த வட்ட விதானையார் கொட்டாவி விட்டவாறே அலுத்துக் கொள்கிறார்.

"தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரின் கழலடிக்குச்சமர்ப்பண மாக்கி இதுவரை நீங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த எமது நாடகத்தினை இதோ அரங்கேற்றுகின்றோம்!" மேடைக்கு மட்டும் ஒளி பாய்ச்சப்படுகிறது. அரங்குத் திரை உயர்கிறது. நாடகத்தின் முதலாம் காட்சி அரங்கேறுகிறது!

வயலூர் மகா வித்தியாலத்தில் பணிபுரியும் ஆசிரியர் வளவன். அவனது ஒரே தங்கை வசந்தி. தாய், தந்தையற்ற தன் தங்கையை எக்குறையுமில்லாது வளர்த்து வருகிறான் வளவன். பருத்தித்துறை மகளிர் கல்லூரியில் உயர்வகுப்பு பயிலும் வசந்தியை அவளது படிப்பு முடிந்ததுமே ஒரு மருத்துவனுக்கோ, ஒரு பொறியியலாளனுக்கோ, அல்லது ஒரு பட்டதாரிக்கோ மணம் முடித்து வைப்பதே தனது இலட்சியம் என்கிறான் வளவன்.

www.padippakam.com



"தங்கச்சி, என்னுடைய பன்னிரண்டு வயதிலை நீ பிறந்தாயம்மா. நீ பிறந்த சில நாட்களிலேயே எங்களைப் பெத்தவங்க கண்களை மூடீட்டாங்க. உனக்குத் தாய்க்குத் தாயாக தந்தைக்குத் தந்தையாக நின்று என் மடியிலும் தோளிலும் தூங்கவைத்து உன்னை வளர்த்தவன் அம்மா நான் இந்தப் பத்தொன்பது, இருபது வருஷங்களாக எந்த வித துன்பமோ, துயரமோ இல்லாம உன்னை வளர்த்த நான், ஒரு நல்லவனின் கைகளிலை ஒப்படைத்த பின்புதானம்மா என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப்பார்க்க முடியும்!"

மீண்டும் வடக்கு வீதி வெளிச்சத்திற்கு வருகின்றது. அரங்கில் திரை விழுகிறது. இப்போது மேடை இருளில் மூழ்கிறது.

"கோண்ணர் கலக்கிறாரடி. மேடைக்கேற்ற முக வெட்டு. நடிப்பிலும் வி.வி.வைரமுத்துவை வெண்டுடுவார் போலை கிடக்கு." மகிழ மரத்திற்குக் கீழிருந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தியைப் பார்த்து, அவளது கல்லூரித் தோழி நித்தியா கூறுகின்றாள்.

வசந்திக்குப் பெருமையாகத்தான் இருந்தது. இதே அரங் கேற்றத்தினை ஒத்திகைகள் நடக்கும் போது எத்தனையோ தரம் பார்த்திருக்கிறாள் வசந்தி.

நாடக ஒத்திகைகள் வளவனின் வீட்டிலேயே நடப்பது வழக்கம். இரவு ஏழு ஏழரை மணிக்குத் தொடங்கும் ஒத்திகை, நடுச்சாமம் வரை செல்வதுண்டு. அந்நாட்களில் நடிகர்களுக்குத் தேவையான சிற்றுண்டிகள், தேநீர் தயாரித்துக் கொடுப்பது வசந்தியின் பொறுப்பாக இருந்து வந்தது. சமயங்களில் நாடகத்தில் நடிக்கும் நடிகர்களும் அவளுக்கு ஒத்தாசை புரிவதுண்டு. நாடக நடிகர்களுள் வசந்தியை மிகவும் கவர்ந்த.......,

"இதோ வயலூர் வளவனின் கதை, வசனம், நெறியாள்கையில் உருவான அரங்கேற்றத்தின் இரண்டாவது காட்சி." இப்போது ஒளியமைப்பாளர் நாடக மேடையை மட்டும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றார். திரை உயர்கிறது.

www.padippakam.com



சுந்தரன், வளவனுடன் பணிபுரியும் ஒரு பட்டதாரி ஆசிரியன். வயலூரிற்கு கிழக்குப் புறமாக உள்ள வடலித் திடலில் பிறந்தவன். 'திடலைச் சார்ந்தவர்கள் தீண்டத் தகாதவர்கள்' என்பவர்கள் மத்தியில் வளவன் அவர்களுக்கு முன் மாதிரியாக நடந்து காட்டினான்.

"இராமனுக்குக் குகனைப் போல இந்த வளவனுக்கு ஒரு சுந்தரன். பிறப்பாலை உருவாகிறதில்லைப் பேதம். கொண்ட கருத்தாலை உருவாகிறதுதான் பேதம்." சுந்தரனின் தோளில் வளவன் கைகளைப் போட்டு, அவனை அணைக்கும் காட்சியை ஒளியமைப்பாளர் பல வர்ணங்களில் சுழற்றிக் காட்டிக் கொண்டிருக்கும் போது. அரங்கில் திரை விழுகின்றது.

"வசந்தி......சுந்தரனா நடிக்கிறவரும் வைரமுத்துவுக்கு வாய்ச்ச நற்குணம் மாதிரி, உன்ரை கொண்ணருக்குச் சளைச்சவர் இல்லையடி." கச்சான் சரையை வசந்தியிடம் நீட்டியவாறே நித்தியா கூறுகிறாள்.

சுந்தரனின் அழகு, நடிப்பை விட அவனது பண்பும், பழக்க வழக்கங்களுமே வசந்தியை அதிகளவில் ஆகர்சித்திருந்தன. ஒத்திகைகளின் போது மட்டுமல்ல, தன் ஓய்வு நேரங்களிலெல்லாம் சுந்தரன் வளவன் வீட்டிற்குச் சென்றுவர ஆரம்பித்தான்.

சுந்தரனின் வருகையும், அவனது அருகாமையும் வசந்திக்கு இனம் புரியாத ஒரு இன்ப உணர்வினை ஏற்படுத்த ஆரம்பித்தது. சுந்தரனுக்கும் வசந்தியின் பால் ஓர் ஈடுபாடு ஏற்பட ஆரம்பித்த போது தான்.........

**மூ**ன்றாவது காட்சிக்காகத் திரை உயர்கின்றது. நாடகத்தின் உச்சக்கட்டம் அது! வசந்திக்குப் பிடித்த கட்டமும் அது தான்!

தனது தங்கைக்கும் தனது நண்பனுக்கும் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டிருப்பது வளவனுக்குத் தெரிய வருகின்றது. 'நம்பிக்கைத் துரோகி' என்று தன்னைத் தூற்றி வளவன் சீனங்கொள்வானோ என்று சுந்தரனின் மனம் ஏக்கம் கொள்கிறது.

www.padippakam.com



மாறாக வளவன் சுந்தரனின் தோளில் தட்டி "என் தங்கைக்கு ஏற்றவன் நீ தான் சுந்தரா! நான் எங்கு தேடியிருந்தாலும் உன்னைப் போல் அவளுக்கு இசைவான ஒருவனைத் தேடியிருக்க முடியாது. என் தங்கைக்கு நல்ல ஒரு கணவனை தேடிக்கொடுப்பதே எனது இலட்சியமாக இருந்தது. ஆனால் தனது இலட்சியக் கணவனை தேடிக்கொண்டதில் எனது தங்கை இலட்சியவாதியாகி விட்டாள்" என்று கூறி வசந்தியினதும் சுந்தரனினதும் கைகளை வளவன் சேர்த்து வைக்கும்போது அரங்கின் நாலாபுறமும் இருந்து மலர்கள் தூவப்படுகின்றன.

"சாதி, மதம், அந்தஸ்து இவை யாவற்றிற்கும் அப்பாற்பட்டதே காதல். காதல் மட்டுமே இவைகள் யாவற்றையும் உடைத்தெறிந்து புதிய சமுதாயம் ஒன்றிற்கு கால்கோளிடவல்லது!"

மூவரும் சிலைபோல் சமைந்து நிற்க அவர்கள் மீது வண்ண ஒளிக்கதிர்கள் சுழலவிடப்படுகின்றன. பச்சை நிற ஒளிக்கதிர்கள் அவர்கள் மீது பாய்ச்சப்படும்போது அரங்கில் திரை விழுகின்றது.

"இன்று இந்த மேடையில் நிகழ்ந்த அரங்கேற்றம் நாளை உங்கள் வீடுகளிலும் நிகழட்டும்! புதிய யுகம் ஒன்று பிறக்க இந்த அரங்கேற்றம் ஓர் ஒத்திகை ஆகட்டும்" அறிவிப்பாளரின் குரல் உச்சத்தாயியில் ஒலிக்க அரங்கு இருளில் மூழ்கின்றது. கோவிலின் வடக்கு வீதி வெளிச்சத்திற்கு வருகின்றது.

"முந்தின நாடகத்தைவிட இது பரவாயில்லை. நாடகத்திலை நல்ல கருத்தும் இருக்கு. இனி நடிச்ச பொடியங்களும் நல்லா நடிச்சாங்கள். குறிப்பாத் திடலில் பொடியன்ரை நடிப்பு அருமையாக இருந்தது" பின்னால் இருந்து யாரோ சொல்லிக்கொண்டு செல்வது வசந்தியின் காதுகளில் விழுகின்றது.

**நா**டகம் முடிந்து சனங்கள் மெல்ல மெல்ல கலைந்து கொண்டிருந்தார்கள். நித்தியாவும் வசந்தியிடம் கூறிவிட்டு அப்போதே சென்று விட்டாள். வேடம் கலைத்து வரவிருக்கும் தமையனுக்காக காத்திருந்தாள் வசந்தி.

www.padippakam.com



'நாடகத்தில் இப்பேர்ப்பட்ட கருத்தினைக் கூறும் அண்ணன் நடைமுறையில் எப்படி இருக்கப் போகிறானோ? சுந்தரன் மீது நான் கொண்டுள்ள காதலை அவன் அங்கீகரிப்பானா?'

"எப்படி வசந்தி நாடகம்?" சுந்தரனின் குரல் கேட்டு திரும்புகிறாள் வசந்தி.

"நல்லா இருந்தது......வழமையைவிட இண்டைக்கு நீங்கள் நல்லா நடிச்சிருந்தியள். என்னுடைய பாராட்டுக்கள்."

"உண்மையிலை இந்த நாடகத்திலை நான் கஷ்டப்பட்டு நடிக்கவே இல்லை. நாடகத்தின்ரை கதையே என்ரை சொந்தக் கதையாகவும் இருந்தபடியாலை என்ரை நடிப்பு இதிலை இயல்பாக இருந்திருக்கலாம்."

"இப்ப என்ரை அங்கலாய்ப்புகள் எல்லாம் இந்த நாடகத்தின்ரை முடிவைப் போலை எங்கடை முடிவும் இருக்காதோ எண்டது தான்."

"பயப்படாதை வசந்தி..... வளவனை எனக்கு நல்லாத் தெரியும். இதுக்கு அவன் உடன்படுவானே தவிர, எங்களை ஒரு காலமும் உதாசீனப்படுத்த மாட்டான்." சுந்தரனின் கைகள் வசந்தியின் தோளில் பதிந்த போது பின்னால் ஏதோ அரவங் கேட்டது.

"ராஸ்கல்! என்ன தைரியமிருந்தா நீ இப்படிச் செய்திருப்பாய்?" – வளவனின் குரல் கேட்டு இருவரும் திரும்புகின்றனர்.

"வளவன்;..............."

"எளியவா! என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட உனக்கென்னடா தகுதி இருக்கு? உங்களை எல்லாம் வைக்க வேண்டிய இடத்திலை வைச்சிருக்க வேணும். கொஞ்சம் இடம்கொடுத்தால் தலைக்கு மேலையே ஏறிடுவியள்."

"வளவன்! நீயா இப்படி கதைக்கிறது? புதிய யுகம், புதிய சமுதாயம் எண்டு கொஞ்சத்துக்கு முந்தி வாய் கிழியக் கத்தின நீயா இப்படி எல்லாம்......."

www.padippakam.com



"அடவிசரா, அது நாடகம்! நாடகங்களை அப்படி எழுதினால் தான் கதை சோபிக்கும். நாலு பேற்றை பாராட்டுகள் கிடைக்கும்."

"அப்ப உன்ரை அரங்கேற்றங்களும், உபதேசங்களும் ஊருக்கும் பேர் புகழுக்கும் மட்டும் தானா?"

"உன்னோடை ஏன் எனக்கு வீண் பேச்சு? வசந்தி வாடி இங்காலை!"

"தைரியமிருந்தால் அவளைக் கூட்டிக்கொண்டு போ பாப்பம்."

"அட.......அந்தளவுக்கு உமக்கு வாய் நீளுதோ? கோயிலுக்கு வெளியாலை நிக்கிற சனங்களுக்கு வந்த கொழுப்பைப் பார்!"

"அண்ணா! வீண் கதையை நிப்பாட்டுங்கோ! நான் இப்ப உங்களோடை வாறதாக இல்லை!"

"தங்கச்சி........ என்னைப் பார்த்தா நீ இப்படிச் சொல்லுறாய்?"

"ஓம்! என்ரை அண்ணன் அந்தக் கூத்துக் கொட்டகையிலேயே செத்துப்போனான். இப்ப எனக்கு முன்னாலை நிண்டு கூச்சல்போடுறது மதம் பிடிச்ச, சாதித் திமிர் பிடிச்ச ஒரு மிருகம். என்ரை புருஷனை என்ரை எதிர்காலத்தை நான் நிச்சயித்துப்போட்டன். இனி இதிலை குறுக்கிட எவருக்குமே உரிமை இல்லை."

"ஓகோண்டானாம்! அதையும் பாப்பம்."

"சும்மா மிரட்டாதையும் வளவன்! இப்ப முடிவு தெரிஞ்சு போச்சுதுதானே?......... இனி நீர் போகலாம்!"

வடக்கு வீதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆட்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

"உங்களைச் சந்திக்க வேண்டிய இடத்திலை சந்திக்கிறன்."

www.padippakam.com



அடிபட்ட நாயொன்று ஊளையிட்டுக் கொண்டு கேணியடிப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தது.

வசந்தியின் கைகளைச் சுந்தரன் பற்றினான். வாடைக்காற்றில் உதிரும் மகிழம் பூக்கள், புதிய தம்பதிகளை வாழ்த்திக் கொண்டிருந்தன.

நாடக அரங்கு உருக்குலைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வெளுக்கும் கிழக்கை நோக்கி இரு உருவங்கள் நிதானத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தன.

**(சுடர் - பரிசுக்கதை: 1980)**

www.padippakam.com

# ஒற்றைப்பனை

மாணிக்கனது மனம் இன்று ஒரு நிலையில் இல்லை. மலர்விழி சொல்லப் போகும் அந்தப் பதிலில் தான் அவனது வாழ்வே தங்கியுள்ளது. நல்லதொரு பதிலை அவள் சொல்வாளா?

நெஞ்சில் முட்டிமோதும் நினைவலைகள் மத்தியில் படலையைத் திறந்து, கொட்டிலடிக்கு வந்தவன், இடுப்பில் முட்டி மோதிய முட்டிகள் இரண்டினையும் கழற்றி, அருகிலிருந்த வடலியில் கொழுவிவிட்டு, உள்ளிருந்த பனங்கொட்டிலில் குந்திக் கொண்டான்.

இடுப்பில் கனத்த இயனக்கூடு அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. காலில் அணிந்திருந்த காதோலையையும், மார்பை வியாபித்திருந்த மாதோலையையும் கழற்றியவன், வெறுமையாகக் கிடந்த வானத்தை நெடுமூச்சுடன் நோக்குகிறான்.

தலையை அலங்கரித்த தடநாரை எடுத்து அருகே வைத்தவன் இடுப்பை ஆக்கிரமித்திருந்த இயனக் கூட்டையும், ஏறுபட்டியையும், அவிழ்த்துப் படிப்படியாக.... இறக்கி வைக்கிறான்.

கடந்த ஆண்டு வயலூரிற்கு வட்ட விதானையார் தறைக்கு வெங்காய வைப்புக்குச் சென்ற போதுதான் அது நிகழ்ந்தது!

வயலூரில் வாழைத்தறையில் வெங்காய வைப்பென்றால் வட்ட விதானையார் கிராமத்தின் கிழக்கேயுள்ள திடலைச் சார்ந்த 'சம்பள காரரைக்' கொண்டுதான் முன்னர் செய்விப்பது வழக்கம். தனது

www.padippakam.com



நண்பர்களுடன் தறையில் இறங்கிய மாணிக்கன், மத்தியானச் சாப்பாட்டு வேளையில் தான், கொத்திற்கு வந்திருந்த வடலித் திடலாரைவிட, வெங்காய வைப்பிற்கெனச் செம்பாட்டுத் திடல் 'பெண்டுகள்' வந்திருப்பதையும் அவதானித்தான்.

வடலித் திடலில் ஆண்கள் சீவல் தொழில் செய்த மீதி நேரத்திற்கு இப்படித் தறைகொத்துப் போன்ற பகுதிநேர வேலைகளுக்கும் செல்வது முன்னர் வழக்கத்திலிருந்தது. ஆனால், அயலூரான செம்பாட்டுத் திடலில் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருந்தது. அப்பகுதி ஆண்கள் செருப்புக் கட்டுவதையும், விறகு கொத்துவதையும் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண்களே இப்படி வெங்காய வைப்பிற்கென்றும், களை பிடுங்குவதற்கென்றும் சம்பளத்திற்காகப் பக்கத்தூரான வயலூரிற்குச் சென்று வந்தார்கள்.

பலரையும் இனங்கண்டுவந்த மாணிக்கனின் கண்கள் ஓர் இடத்தில் நிலைத்தன. வடலிப் பருவம்.....குருத்தோலை மென்மை......சார்வு நிறம்......பாளைச் சிரிப்புதிர்த்துப்.......பார்ப்பதற்குப் புதிதாக வார்த்த பனாட்டுத் தட்டாகப் பளபளப்புடன் காட்சியளித்த அவள், தன்னையே வைத்த கண் வாங்காமல்.....?

"மச்சான் பங்கார் பாரடா!"–பரந்த மார்பில் நிறைந்து வழிந்த வியர்வையைத் துவாய்த் துண்டால் துடைத்தவாறே, பக்கத்தில் நின்ற வீரனுக்குத் தட்டிக் காட்டினான் மாணிக்கன்.

"ஆர் வல்லியாற்றை மோளைச் சொல்லுறியே?"

"எந்த வல்லியாற்றை மோள்?"

"அதுதான் மச்சான்......சிலம்படி வல்லியாரெண்டு முடப்பனை முடக்கிலை இருக்குதுகள்......."

"என்ன பூராயக்கதை உது? அவருக்கு உப்பிடி ஒரு லட்சணமான பொடிச்சியோ?"

www.padippakam.com



மத்தியானச் சாப்பாடு முடிந்து பின்னேர வேலை ஆரம்பமாகியது. மூன்று மணியிருக்கும். வானமே இருண்டது. தறையில் நிற்க முடியாதளவிற்குப் பலத்த மழை. சம்பளகாரர் யாவரும் குடிலை நோக்கி ஓடி வந்தனர்.

தலையில் தலைப்பாகையாகச் சுற்றியிருந்த துவாய்த் துண்டை எடுத்து, முகத்தைத் துடைத்தவாறே திரும்பிய மாணிக்கனுக்கு, உச்சிப் பனையிலிருந்து சறுக்கியதைப் போன்ற ஒரு பிரமை. அந்த 'வல்லியாற்றை' மகள்....அதே ஏக்கப் பார்வையுடன்! அருகில் நின்ற வீரனை அழைத்தவாறே, அவளை அணுகுகிறான்.

"உங்கடை பகுதிக்கு என்ன மாதிரி விதானையார் சம்பளம் தாறார்?" அவள்து பக்கத்தில் நின்ற சின்னிக்கிழவியை மாணிக்கன் வினவினான்.

"ஏன் மோனை அந்தச் சீத்துவக்கேட்டைக் கேக்கிறாய்? நாள் முழுக்க உழைச்சதுக்கு ஐம்பது ரூபாதான் கூலி" – இருமிக் களைத்த கிழவி குடில்க் கப்பைப் பக்கபலமாய்ப் பிடித்தவாறே கூறுகிறாள்.

"என்னணை பெத்தாத்தை, அநியாயக் கதை இது? ஏன் கூட்டித் தரச் சொல்லிக் கேக்கிறதுதானே?"

"கேட்டாப்போலை கிடைச்சிடுமா?" – ஓ! ஒலித்தது குயிலா? அன்றி அவள் குரலா? அந்த வல்லி மகள் மலர்விழிதான் கூறினாள்.

நிலத்திலிருந்து கொண்டெழும்பிய காற்று நெடும்பனைக் காவோலைகளைச் 'சரசர'க்க வைத்துவிட்டு, குருத்தோலைகளுக்குத் தாவியது.

"நாளுக்கு எழுபது கேளுங்கோ! இல்லாட்டி வைப்புக்கு வரேலாது எண்டு சொல்லுங்கோ!"

"உங்களுக்கு என்ன மாதிரி?"

www.padippakam.com



"எங்களுக்குக் கொத்து வேலை எண்டபடியாலையாக்கும் நூறு தாறார்."

"ம்......ம்......மழைதான் விட்டுட்டுதே, பிறகு மென்ன மெனக்கேடு?"– வட்ட விதானையார் தறையில் நின்று சத்தமிட்டார்.

அன்றைய.....அந்தச்.....சந்திப்பின் விளைவு? வயலூருக்கு... சீவலுக்குச் சென்று வரும் வழியில் செம்பாட்டுத் திடலில் வல்லி வளவுக்கையும் வடலிப் பருவப் பனையொன்றை மாணிக்கன் பார்த்துக் கொண்டான்.

"முன்னை உங்கடை பகுதியார் எங்களோடை வலு வாரப்பாடு தம்பி. அந்த நாளையிலை உன்ரை கொப்பு கோத்தை கூட வயலூருக்குப் போகக்குள்ளை மைமல் பொழுதெண்டாலும், இந்தப் படலையையும் ஒருக்கால் திறுந்து தான் போவினம்."

ஆரம்ப காலங்களில் செம்பாட்டுத் திடலைப் போலவே வடலித் திடலும் பொருளாதாரத்தில் இருந்ததையும், காலஞ் செல்லச்செல்லப் படிப்பறிவாலும் தொழில் துறையாலும் வடலித் திடலார் மேம்பட்டுச் செம்பாட்டுத் திடலாருடன் இருந்த தொடர்பைத் துண்டித்ததோடு சம்மந்தம் வைத்துக் கொள்வதையும் நிற்பாட்டியதையுமே சுட்டிக்காட்ட வல்லி அதைச் சூசகமாகக் கூறினார் என்பதை மாணிக்கன் நன்குணர்ந்து எதையுமே கூறமுடியாதவனாக மௌனியாகி விட்டான்.

''அந்த நாளையிலை, நான் ஆடு மாடு வளர்த்த காலங்களிலை அதுகளுக்கு தீனுக்காக சேர்வை சீவுறதுக்கு நொங்கு பொறுக்கவெண்டு கருக்கலோடையே நித்திரைப்பாயை விட்டு எழும்பிப் போடுவன். நொங்கு பொறுக்காலை வந்த பிறகுதான் நான் விறகு கொத்துக்குப் போறது.''

''இரண்டு பனை ஏறி இறங்கவே எங்களுக்கு நாரி சந்தெல்லாம் உழையுது. எப்பிடி அம்மான் இந்த வயதிலையும் உப்பிடி உசாரா விறகு கொத்திறியள்?''

www.padippakam.com



''அப்பிடிக் கேள் மோனை. இந்த நாளையில் கூப்பன் மா புட்டிலும், மிச்சாட்டு அரிசியிலும் என்ன சத்துக் கிடக்கு? அந்த நாளையிலை ஒடியல் புட்டையும், பாணிப் பினாட்டையும் திண்டு கூழையும் குடிச்சுத்தான் எங்கடை தேகத்தை வளத்து இப்பிடி வலுவாக்கினம். அந்த அத்திவாரத்தாலைதான் இந்த வயதிலையும் இப்பிடித் தொழில் செய்ய முடியுது. இப்பவும் வாற போற ஆக்களுக்கு குடுக்கிறதே தவிர, உந்தக் கோப்பி தேத்தண்ணியளை நான் பாவிக்கிறது கிடையாது கண்டியோ? காலம்பற வெள்ளன முகங்கழுவின உடனை நான் இப்பவும் குடிக்கிறது பழந்தண்ணிதான் மோனை.''

வல்லியுடன் கதை கொடுத்தாலும், மாணிக்கனின் கண்கள் அடுப்படியிலேயே நிலைத்திருக்கும். தேத்தண்ணிச் சிரட்டையுடனும் பணங்கட்டிக் குட்டானுடனும் அவள் வந்து 'தரிசனம்' கொடுக்கும் அந்த ஐந்து நிமிடத்துக்காக அவன் மணிக்கணக்கில் காத்திருந்த நாட்கள் ஏராளம்.

அன்றும் வழக்கம் போலச் சீவலை முடித்தவாறே மால் பக்கம் வந்தவன், ஒரு முறை உள்ளே எட்டிப் பார்த்தான். எவருமே இல்லை. ஆனால், அடுப்படிப்பக்கத்திலிருந்து ஒரு முனகல் சத்தம் மட்டுமே வெளி வந்தது. கையோடு கையாகக் குசினிப் படலையையும் திறந்தவனுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

முழங்கால்கள் இரண்டிற்குள்ளும் முகத்தைப் புதைத்தவாறே மலர்விழிதான் முனகிக்கொண்டிருந்தாள். அவசர அவசரமாக உள்ளே நுழைந்தவன், அவளை அணுகியபோது, தாங்க முடியாத வயிற்று வலியால் அவள் நிலை தடுமாறுவது அவனுக்குப் புரிந்தது.

வயலூர் சென்று ஆயுர்வேதப் பரியாரியாரை அழைத்து வந்து வைத்தியம் பார்த்து, அவளைத் தூக்கிச் சென்று மாலுக்குள் வாங்கிலில் படுக்க வைத்து, காவோலை வெட்டிக் கொக்காரை, பன்னாடை பொறுக்கி வந்து சூட்டடுப்பை மூட்டி, 'தேத்தண்ணி' போட்டுக்கொண்டு வந்து, பரியாரியாரின் தூளைப் பாணி கலந்து தீத்தி, பின்னர் தேநீரைக் குடிக்கக் கொடுத்த போதுதான் நாவைக் கூட்டி அவள் கதைக்க ஆரம்பித்தாள்.

www.padippakam.com



"இந்தக் கல்லடசல் குத்து இடைக்கிடை எனக்கு வாறது. அந்த நேரங்களிலை ஒண்டுமே எனக்குத் தெரியாது. தலைக்கை ஒரேயடியா அம்மிப்போடும். இண்டைக்கெண்டு பாத்து நறுவிலி வைரவர் கோயிலிலை வேள்வியெண்டு சிலம்படிக்கு அப்ப போனவர்தான்...... அப்புவை இன்னும் காணேலை! நல்லவேளை கடவுள் போலை ஆபத்துக்கு வந்து உதவினியள்....." - என அவள் மால் கப்பில் சாய்ந்திருந்தவாறே கூறியதும்.......

அன்றைய அந்த நெருக்கம்..... படிப்படியாகக் கூடிக்கொண்டு வந்தது. அச்சமயத்தில்தான் மாணிக்கன் தனது எண்ணத்தை முடிவாக்கி அதை அவளிடம் கூற, ஒரு நல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

**வ**யலூர் பிள்ளையார் கோவிலில் மூன்றாந் திருவிழாவிலன்று வடக்கு வீதியில் வல்லியின் சிலம்படியே விசேட நிகழ்ச்சி என வீரன் மூலம் கேள்விப்பட்ட வேளையில் தான் 'அதைச் சொல்ல' அன்றே நல்ல நாள் என்று அடுக்கெடுத்த மாணிக்கன் மைமல் பொழுதாக மலர்விழி வளவு மாலிற்குள் நுழைகிறான்.

"மலர்! உன்னோடை ஒரு சங்கதி பறைய வேணும்."

"என்ன......அப்பிடி........புதுநாணயமா இண்டைக்கு?"

"அப்பிடி ஒண்டுமில்லை மலர்! நான்......உன்னைக் கலியாணங் கட்ட விரும்புறன்."

அதைக் கேட்டதும் அவள் எதுவுமே பேசாது பேயறைந்தவள் போல.... 'ஏன் இவளுக்கு 'இதில்' புறியமே இல்லையா?'

"என்ன மலர்..... நான் சொல்லுறன், நீ ஒண்டும் பறையாமல்....."

"நான்.....நான் எப்பிடி?"

"என்ன மலர், என்ன சொல்லுறாய் நீ?"

www.padippakam.com



"எனக்கு எப்பவோ கலியாணம் நடந்திட்டுது" உச்சிப்பனையில் இருந்த போது புயல் காற்று வீசியதைப் போல இருந்தது மாணிக்கனுக்கு.

"என்ன, .....நீ.....என்ன பூராயம் பிடிக்கிறாய்?"

"எனக்குக் கலியாண எழுத்து முடிஞ்சுது. அதுக்குப் பிறகு அவர் தங்கடை ஊரிலையிருந்து அதுதான் கிளைப்பனையடியிலை யிருந்து இஞ்சை அடிக்கடி வந்து போறவர். நல்ல நாளாய்ப் பாத்து இரண்டு பேருக்கும் சோத்தைக் குடுப்பிச்சு விடுவம் எண்டு அப்பு சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அதுக்கிடையிலை வெளிநாட்டிலை வேலை கிடைச்சு....அவர் போட்டார். போட்டு வந்து உனக்குத் தங்கத் தாலியே கட்டுறன் பார் எண்டு சொல்லிப்போட்டுப் போனார். போனவர் போனது தான். போய் ரண்டு வருசமாச்சு......இன்னும் ஒரு கடதாசி கூடப் போடேல்லை".

"அப்ப இந்தச் சங்கதியை இவ்வளவு நாளும் நீயோ அல்லது உன்ரை கொப்புவோ ஏன் எனக்குச் சொல்லேல்லை?"

"அவற்றை பகுதியிலை ஒரு சின்னப் பிசகு இருந்ததாலை அருளாமல் தான் கொப்பி போட்டு கலியாண எழுத்தும் நடந்தது. பிறகு வெளிநாட்டுக் கெண்டு போயும் ஒரு மறுமொழிகூடப் போடாதபடியாலை ஒருநாள் யோசிச்சுப் போட்டு அப்புதான் சொன்னார். 'எனக்கெண்டால் அவன் திரும்பி, எங்கடை வளவுக்கு வருவான் எண்ட நம்பிக்கை ஒல்லுப் போலையும் இல்லைப் பிள்ளை. எங்களுக்கெண்டு இப்பிடி ஒரு சீலக்கேடு வருமெண்டு நான் கனவிலைகூட நினைக்கேல்லை. பேசாமல்..... அந்தக் கதையையே விட்டுடுவம்......' எண்டு. அதுதான் அதைப்பற்றி நான் மூச்சுக்கூட விடேலை."

"கலியாண எழுத்து முடிஞ்சளவிலை தானோ?"

"இல்லை! மூண்டாம் வருஷம் வயலூர் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கெண்டு வந்து இரவிலை இஞ்சை தான் பத்து நாளும் தங்கியிருந்தவர்."

www.padippakam.com



"எட......உப்பிடி எல்லாம் நடந்தவனுக்கு ஒரு கடதாசி கூடப் போட...... ?"

"அதுதான் நாங்களும் யோசிக்கிறம்."

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஏழெட்டு நாட்களாக மாணிக்கம் வல்லிவளவுப் படலையைத் திறக்கவில்லை.

பத்தாம் நாள் மைமலுக்குள் மால் வாசலில் நெடும்பனையாக நின்ற அந்த உருவத்தைப் பார்த்து அவள் நிமிருகிறாள்.

"அன்டைக்குப் பறைஞ்ச விசயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருப்பாய் எண்டு நம்புறன்." – எரிந்து கொண்டிருக்கும் கைவிளக்கில் சுவாலையைப் பார்த்தவாறே மாணிக்கம் கூறுகிறான்.

"................"

"இப்படியெல்லாம் உன்னை மறந்திருக்கிறவன் ஊருக்கு வந்தாலும் உன்னட்டை வருவான் எண்டு நானும் ஒல்லுப்போலையும் நம்பேல்லை. அதனாலை நான் கேட்டமாதிரி ஒரு முடிவுக்கு வாறதுதான் நல்லதெண்டு நம்புறன்."

"பத்து நாளா யோசிச்சு நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டன். எதுக்கும் அப்புவோடை யோசிச்சுப் போட்டு மறுமொழி சொல்லுறன்."

வல்லியின் அந்த முடிவை ஆவலோடு எதிர்பார்த்து இருந்த நாட்களில்.....ஒரு நாள் நடந்த சம்பவம் அது.

அன்று ஒரு பௌர்ணமி தினம். வயலூர் பிள்ளையார் கோவிலிற்கு காத்தான் கூத்துப் பார்க்கவென இரவுச் சாப்பாடு முடிந்த கையோடு வல்லி சென்றுவிட்டாள். கூத்துப் பார்க்கவென தனது வளவிலிருந்து கிளம்பி வந்த மாணிக்கன் ஒருக்கால் மலர் விழியினது வளவையும் எட்டிப்பார்த்துக் கொண்டு போவம் என்ற எண்ணத்துடன் படலையைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

www.padippakam.com



மாலிற்குள் குந்தியிருந்தவாறே கிழிந்த பாயொன்றிற்கு பொத்தல் போட்டுக்கொண்டு இருந்தாள் மலர். மாணிக்கனின் வரவால் அவளின் முகம் சார்வோலையாக மலர்ந்தது.

"வாருங்கோ. என்ன இந்த நேரத்திலை...."

"காத்தான் கூத்துப் பார்க்கப் போறன். அதுதான் ஒருக்கால்......."

"கூத்து, பிள்ளையார் கோவிலிலை."

"அப்ப நான் போட்டு வாறன்."

"நீங்கள் கூத்துப் பார்க்க போறியளோ? இல்லாட்டி கூத்தாடப் போறியளோ?"

"ஏன் மலர் அப்பிடிக் கேக்கிறாய்?"

"இல்லை, முகமெல்லாம் ஒரே பூசல் மாவாக் கிடக்கு."

"வேர்வையோடை போட்டது. சுண்ணாம்பு போலைப் படிஞ்சு போச்சுது போலைக் கிடக்கு. அது சரி நீ கூத்துப் பார்க்க வரேலையோ?"

"ஏன் காத்தான் கதை உங்களுக்கு இவ்வளவு நாளும் தெரியாதோ? அதுபோக, இப்ப நீங்களும் பெரிய பெரிய சங்கதிகள் எல்லாம் செய்யிறியளாம்."

"என்னத்தைச் சொல்லுறாய் மலர்?" முற்றத்து ஒற்றைப் பனையின் கீழ் குவிந்திருந்த வெண் மணலில் குந்தியவாறே மாணிக்கன் கேட்கிறான்.

"வயலூர் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவிலண்டு உங்களுக்கும் வட்டவிதானையாருக்கும் பெரிய போராமே?"

"எட! அதைச் சொல்லுறியே? உனக்கார் சொன்னது?"

www.padippakam.com



"அப்புதான் சொல்லிப் புழுகினார். மாணிக்கன் மட்டும் அண்டைக்கு இல்லாட்டில் வயலூராரர் எங்களையெல்லாம் ஏறி மிதிச்சிருப்பாங் களெண்டு."

"பின்னையென்ன மலர்? நாங்களும் தேர் வடம் பிடிக்கப் போறம் எண்டு கேட்டம். 'காவோலை கட்டி இழுத்தவைக்கு வடம் பிடிச்சு தேர் இழுக்கக் கேக்குதோ?' எண்டு விதானையார் நிண்டார். 'ஓகோ அப்பிடியோ சங்கதி? அப்ப இண்டு மேற்பட்டு நாங்கள் ஒருதரும் குடிமைத் 'தொழில் செய்யிறதில்லை' எண்டு சொல்லிப் போட்டு எல்லாரும் வந்திட்டம்."

"உப்பிடிக் குடிமைத் தொழிலை விட்டுட்டு எத்தினை நாளைக் கெண்டு சீவிக்கிறது?"

"இது தான் இனி முடிவு மலர். ஆரம்பத்திலை கொஞ்ச நாளைக்கு கயிட்டமாகத்தான் இருக்கும். போகப் போக எல்லாம் பழகீடும். இந்த இரண்டு கிழமைக்கை நடந்த சங்கதியளை நீ கேக்கேல்லை....! இப்ப நாங்கள் சீவிற கள்ளு, கருப்பணியள் எல்லாம் கோப்பிரேசனுக்குத்தான் நேரை போகுது. முன்னைய மாதிரி வீடு வீடாக கொண்டு திரிஞ்சு குடுக்கிறதில்லை. அத்தோடை இனி வெங்காய வைப்பு, களை புடுங்கல் எண்டு எங்கடை பகுதிப் பெண்டுகள் எங்கையும் அலையத்தேவையில்லை. மூடல், குட்டான், பாய், இழைக்கிற வேலையோ அல்லது பணங்கட்டி, பாணிப்பனாட்டு, புழுக்கொடியல் போடுற வேலையோ எதுவெண்டாலும் இனி அவையள் எல்லாரும் எங்கடை பணம்பொருள் நிலையத்திலையே வந்து வேலை செய்யலாம். அதே மாதிரித்தான் சலவைத் தொழிலாளிகளையும், சாய்ப்புக்காரர்களையும் குடிமைத் தொழில் செய்ய வேண்டாமெண்டு அறிவிச்சிருக்கிறம். ஆரும் அப்பிடி இசகுபிசகா நடந்தால், எங்கடை சங்கத்தாலை தண்டனை குடுக் கிறதாகவும் முடிவெடுத்திருக்கிறம். இப்ப என்னெண்டால் வயலூரிலை ரகசியமா வீட்டிலை வைச்சுக் கள்ளுக் குடிச்சவைக்கு வயித்திலையடி. இப்ப மைமல் பட்டதுக்கு பிறகுதான் ஒளிச்சொளிச்சு எல்லாரும் கோப்பிரேசனுக்குப் போயினம். கிழடுகட்டைகள் எல்லாரையும்

www.padippakam.com



முகச்சவரஞ் செய்யுறதுக்குக் கூட சைக்கிளிலை ஏத்திக் கொண்டு சாய்ப்புக்குப் போயினம். துடக்குத் துணியளையும் அழுக்குத் துணியளையும் அவையவையே பொட்டழி கட்டிக் கொண்டு லோன்றிக்குப் போயினம். அதைவிட முசுப்பாத்தி, வயலூரிலை ஆரும் செத்தாலும் பிரேதம் காவுறது, சவம் எரிக்கிறது எல்லாம் வெள்ளாமாக்கள்தான். எப்பிடி நாங்கள் தொடங்கியிருக்கிற வேள்வி?''

''பெரிய ஆள் தான் நீங்கள்'' என மலர் சொன்னதும், தொடர்ந்தும் அன்று நள்ளிரவு வரை அவளுடன் அங்கிருந்து விட்டு பின்னர் கூத்தே பாராது திரும்பியதும்..... எண்ணங்கள் கருப்பனீராக இனித்தன.

இவை நடந்த சில நாட்களின் பின்னர் தான்....... எவருமே எதிர்பார்த்திராத....... அது கனவுபோல் நடந்து முடிந்தது!

வெளிநாட்டிலிருந்து திரும்பிய மலரது கணவன் நேராகச் செம்பாட்டுத் திடலிற்கே ஓடோடிவந்து சேர்ந்தது. விரக்தியின் விளிம்பிலிருந்த வல்லி வாயெல்லாம் பல்லாக மாணிக்கன் பகுதிக்குக் கூட அழைப்பு விடுத்து பெரும் 'டீங்காக' மகளின் சடங்கை முடித்தது.

ஆறு மாதங்கள் கழிந்தன. இப்போதெல்லாம் வல்லியின் வளவுப் படலையையே மாணிக்கன் திறப்பதில்லை. கள்ளும் காய்வெட்டிக் கள்ளாகிவிட்டதால் அங்கு சீவலையும் அப்போதே அவன் நிறுத்தி விட்டான்.

அண்மையில்தான் அதிர்ச்சி தரும் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. திடீரென்று 'ஹாட் அற்றாக்'கால் பாதிக்கப்பட்ட மலர்விழியின் கணவனை கிராமத்து ஆஸ்பத்திரியில் 'டாக்குத்தர்' மார் கைவிரிக்கவே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு ஏற்றினார்கள். பெரிய 'டாக்குத்தர்' பரிசோதித்து விட்டுச் சொன்ன பதில் பேரதிர்ச்சியாகவே இருந்தது. ஏற்கனவே இரு முறை இந்நோய்க்கு ஆளாகியிருக்கிறானாம் அவன். இது இறுதி முறை. ''எங்கடை கையிலை ஒண்டுமில்லை. இனிக் கடவுள் விட்ட வழி!''

''நறுவிலி வைரவா!'' மலர்விழி தன் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டாள்.

www.padippakam.com



வேண்டியபடியா விடயங்கள் நடக்கின்றன?

ஆறு மாதங்கள்....அவளை வாழவைத்தவன், அதுவே போது மென்ற ஆறுதலுடன்....!

"ஐயோ என்ரை ராசா! என்னை விட்டுப் போட்டியோ?" – மலர்விழி ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். நெஞ்சு நெஞ்சாக இடித்தாள்.

அயலவர்கள் கூடி வந்து பலவாறும் தேற்றினர்.

"உனக்கெண்டு உது நடந்ததே பிள்ளை? என்ரை நடுவிலாளுக்கும் உன்னோட்டை வயது தானே? அவளின்ரை புருஷனும் சீவலுக்கு பனை ஏறக்குள்ளை, கைதவறி விழுந்து மோசம் போகேல்லையே?" நடந்த கதைகளைச் சிலர் உதாரணம் காட்டினர்.

"உங்கை இளவட்டனுகள் என்னமாதிரி அம்பாளிக்குதுகள். என்ரை பிள்ளைக்கெண்டு இந்த வாழ்மானம்?" – வல்லி தலைதலையாக இடித்தார்.

"உதுகளெல்லாம் எங்கடை கையிலேயே அம்மான்? இன்னும் அதுகளையே யோசிச்சுக் கொண்டிருந்தால், மற்ற அலுவல்களை ஆர் நிண்டு பாக்கிறது?" – வல்லியின் ஒன்றுவிட்ட தங்கைமகன் தெய்வேந்திரன் ஆறுதல் வார்த்தை கூறினான்.

அது நடந்து ஒரு மாதத்தின் பின்பு... அந்தியேட்டி வளவிற்கென்று சென்றபோதுதான் மாணிக்கன் அவளைச் சந்தித்து அனுதாபம் கூற முற்பட்டான்.

மணிக்கணக்காக.....வல்லியின் புலம்பலைக் கேட்டுச் சகித்த மாணிக்கன் நேரஞ் சென்றும் அவன் வராததைக் கண்டு "பழைய வளவுக்கை சீவலுக்குப் பனை பாத்துக்கொண்டு வாறன்" என்று கூறிச் சென்று அடுப்படிப் பக்கம் தலை நீட்டியும் அவள் வெளிவராது போகவே......"பாளை இன்னும் வெளிப்படேல்லை!" என்று வல்லிக்குக் கூறிவிட்டு மெல்லென மாறிவிட்டான்.

www.padippakam.com



மலர்விழியின் இளமைக்கால விதவைக் கோலத்தைப் பற்றி வடலித்திடலில் கூட பலரும் பரிவாகக் கதைக்க ஆரம்பித்ததன் பின்னர் தான் 'அவளுக்கு நான் வாழ்வளித்தால் என்ன?' என்ற எண்ணம் மாணிக்கன் மனதில் தளிர்ப்பு எய்தியது.

திக்கற்றிருக்கும் அவளது வாழ்வில் மாறுதல்களை ஏற்படுத்தி அவள் வாழ்வில் புத்தொளி வீச, மனதில் வழிவகுத்து அந்த அங்கலாய்ப்பில் அதற்கு அவளது விருப்பறிய வீரனைத் தூதாக மாணிக்கன் அனுப்பிய போதுதான் 'உத்தரத்து வேள்வியண்டைக்கு வரச்சொல்லுங்கோ மறுமொழி சொல்லுறன்' என்று சொல்லி அனுப்பினாள் அவள்.

அந்தப் பதிலை......எதிர்ப்பார்த்துத்தான் இப்போது மாணிக்கன் ஆவலோடு காத்திருக்கிறான்!

'என்ன மறுமொழி அவள் சொல்வாள்?' சருகு பத்திப்போன காவோலைகளைப் பிய்தெறிந்து கொண்டு நெடுப்பனையிலிருந்து மிக வேகமாக விழுந்த ஒரு பனங்காய் உருண்டு வந்து மாணிக்கனின் முன்றலில் நின்றது.

நுறுவிலி வைரவர் கோவிலில் வேள்விப் பறையும்.....மேலாக சிலம்படி ஓசையும் ஒலிப்பது மாணிக்கனுக்கு இப்போது தெளிவாகவே கேட்கிறது.

பனங்கொட்டினின்றும் துள்ளி எழுந்தவன்.....கிணற்றடி சென்று கால்முகங் கழுவித் தன்னை அலங்கரித்து.....செம்பாட்டுத்திடலை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான்.

எப்படி நடந்தானோ தெரியாது. படலையைத் திறந்து கொண்டு மாலிற்குள் புகுந்தான் மாணிக்கன்.

'எண்டாலும் ஒல்லுப்போலை கொட்டுப்பட்டுத் தான் போனாள்!' – நீண்ட நாட்களின் பின் அவளைக் கண்ட மாணிக்கன் முதலில் மனதில் எண்ணிக் கொண்டது இது.

www.padippakam.com



"என்ன அப்பிடி யோசனை? நான் ஒருத்தன் வந்ததையும் கவனிக்காமல்."

"ஓ! வாருங்கோ இப்பிடி இந்தக் குந்திலை இருங்கோ." மலரின் முகம் சீக்காயாக இறுகியிருந்தது.

"வீரன் அண்டைக்கு விசயம் எல்லாம் சொல்லியிருப்பான் எண்டு நம்புறன்."

"ம்!....." நீண்ட பெருமூச்சு ஒன்று மட்டுமே பதிலாக வந்தது.

"நடக்கக் கூடாதது நடந்து போச்சு. இன்னும் அதையே நினைச்சுக் கொண்டிருந்தால்..... "

"அதுக்கு. இப்பிடி நடக்குமெண்டு ஆர்தான் எண்ணியிருந்தது' – நா தடுமாறியது. குரல் 'தள, தள'த்தது.

"அதுக்கு இப்ப என்ன செய்யிறது மலர்? இது தான் நியதி எண்டால் ஆராலைதான் மாற்றமுடியும்? இந்த நேரத்திலை...இதை... சொல்லுறதும் சரியில்லை! ஆனால் உன்ரை நிலவரத்தைப் பார்த்துச் சொல்லாமல் இருக்கவும் முடியேல்லை! உனக்குச் சம்மதமெண்டால்.... உன்னை நான் கலியாணங் கட்டுறன்."

"மாணிக்கன்!" – என்றுமே தன் பெயரைச் சொல்லாதவள் இன்று இப்படிப் பேயறைந்தவளாகக் கத்தியது, மாணிக்கனுக்குப் பேரதிர்ச்சியாகவே இருந்தது.

"என்ரை வாழ்க்கை முடிஞ்சுபோச்சு. அவருக்குப் பெண்சாதியாக வாழ்ந்த அந்த ஆறு மாதங்களுமே என்ரை வாழ்க்கையிலை பாளை பூத்த நாட்கள். மலர்.....மலர்.... எண்டு வாய்க்கு நூறுதரம் சொல்லுவியளே உங்கடை, அந்த மலர் இப்ப பூத்து உதிர்ந்து போச்சு."

"மலர்! உனக்கென்ன பைத்தியமே?"

www.padippakam.com



“இல்லை. பைத்தியம் தெளிஞ்சு போச்சு. கலியாணம் கட்டியிருந்தும் இளமை உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு, உங்களிலை விருப்பப்பட்டு, கண்காணாத தேசத்திலை இருந்த புருசனுக்குத் துரோகஞ் செய்தனே......? ஒரு கடதாசி கூடப்போட முடியாமல் நோயாலை துன்பப்பட்டுக் கொண்டிருந்த அவற்றை வருத்தங்களைக் கூட நினைக்காமல், என்ரை ஆசையளைப் பெரிசா நினைச்சுக் கொண்டு திமிர் பிடிச்சுத்திரிஞ்சனே..... அவர் திரும்பி வந்து என்னோடை வாழ்ந்த அந்த ஆறு மாதங்களிலைதான் என்னாலை எல்லாத்தையுமே உணர முடிஞ்சுது. வெறும் உடம்பாலை மட்டுமில்லை, நோயோ நொடியோ......வருத்தமோ துன்பமோ......ஒரு நாளெண்டாலும் புருஷனும் பெண்சாதியும் ஒற்றுமையா வாழ்ந்தால் அதுதான் உயர்ந்த வாழ்க்கை எண்டது இப்பத்தான் எனக்குப் புரியுது.”

“மலர்! அப்பிடியான ஒரு வாழ்வைத் தான் உனக்கு நான் தாறன்.”

“பட்டுப்போன பனையிலை பாளையைப் பாத்துக் கொண்டு நிக்கிறியளே...? விட்டுப்போட்டு நானிப்ப சொல்லுறதைக் கேளுங்கோ.”

“மலர், ஏனிப்பிடி எல்லாம் பறையிறாய்? உனக்கென்ன நடந்தது?”

“உங்கடை நல்ல மனசுக்கு ஒண்டும் நடக்கக்கூடாது. என்னாலை நீங்கள் ஏமாந்து போனதாகவும் இருக்கப்பிடாது. அதுக்காகத்தான் இதெல்லாத்தையும் சொல்லுறன். சலனமற்ற குளமாயிருந்த உங்களின்ரை வாழ்க்கையிலை இளமை உணர்ச்சிக்கு இடமளிச்சு ஒரு கல்லைப் போலை நான் வந்து விழுந்தன். ஆனால் உங்களோடையும் வாழ முடியாமல், அவரோடை கடைசி மட்டும் வாழுற பாக்கியமும் இல்லாமல் ஒரேயடியா வாழ்க்கையிலை விழுந்து போயிருக்கிறன். நான் அவருக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்துக்கு நறுவிலி வைரவராப் பாத்துத் தந்த தண்டனை இது. இப்பிடியான ஒரு வாழ்க்கை வேறை எந்தப் பெண்ணாப் பிறந்தவளுக்குமே வரக்கூடாது!”

“அதுதானே மலர் சொல்லுறன். உன்னைக் கண் கலங்காமல் கடைசிமட்டிலை நான் காப்பாத்திறன்.”

www.padippakam.com



"கட்டினவன் விட்டுட்டுப் போட்டான் எண்டெண்ணித் தான் உங்களின்ரை நிழலிலை நான் வாழ நினைச்சன். ஆனால், கண்கண்ட கடவுளா அவரே திரும்பி வந்து எனக்கு வாழுறதுக்கு ஒரு வழியை அமைச்சுச் தந்து, தன்ரை வாரிசா என்ரை வயித்திலை ஒரு சீவனையுந் தந்திட்டுப் போகக்குள்ளை, இன்னொரு வாழ்க்கைத் துணையை எனக்காக நான் தேடிக்கொள்ளுறது எந்த வகையிலை நியாயம்? அதுதான் நான் சொல்லுறன். உங்களை ஏமாத்தினதா என்னை இந்த ஊர் பழி சொல்லாமல் இருக்கவேணு மெண்டால்.......நீங்கள் என்மேலை வைச்சிருந்தது...... வைச்சிருக்கிறது உண்மையான அன்பாயிருந்தால் நான் சொல்லுறபடி கேளுங்கோ. இன்னும் உங்கடை வாழ்க்கையைச் சீரழிக்காமல் உங்களுக்கெண்டொரு துணையைத் தேடிக்கொண்டு நீங்கள் நலமா இருக்க வேணும். இதுதான் உங்கடை மலருக்கு நீங்கள் செய்யிற பேருதவி."

"மலர்....உதுதான் உன்ரை முடிவாயிருந்தால்.......என்ரை முடிவையும் நான் சொல்லுறன். இன்னொரு துணையைத் தேடிக்கொள்ளுறதெண்டது இனி என்ரை வாழ்க்கையிலை ஒருநாளும் நடக்காதது. எண்டைக்காவது ஒரு நாள் நீ மனம் மாறுவாய் எண்டுதான் நான் நம்புறன். அப்ப சொல்லியனுப்பு நான் உன்ரை வளவுக்கு உன்ரை புருஷனாக, உன்ரை பிள்ளைக்கு தகப்பனாக வாறன். அது வரையிலை ஒற்றைப்பனையாகத்தான் நான் இருப்பன். இப்ப நான் போட்டுவாறன்."

நறுவிலி வைரவர் கோவிலில் வேள்வி முடிந்து, ஒலிபெருக்கில் ஒலிக்கும் இனிய கானம் காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

**(சுடர் - பரிசுக்கதை : 1982)**

# புத்தொளி

பகவதி 'அந்த' அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபட வில்லை. கன்னத்தில் கோடிடும் கண்ணீரைக் கிழிந்து போன தனது சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு, அடுப்படி நிலத்தை அருகிலிருந்த 'அடவியனால்' துப்பரவாக்கியவாறே, கையை மடித்துத் தலையணையாக்கி மெல்லெனச் சரித்து விட்டாள் அவள். தலைவேறு அம்மியது அவளிற்கு.

புவனத்தாலும் 'அதைத்' தாங்க முடியவில்லை. நேற்றுவரை வலுவாரப்பாடாய் இருந்த அவர்கள், இந்தப் பேச்செடுத்ததுமே இப்படி மாறிப் போனது? மூட்டிய அடுப்பில் ஏற்றி வைத்த உலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். சூட்டடுப்பு சுவாலை கக்கி எரிந்து கொண்டிருந்தது.

குமரனிற்கு அவர்களைப் பார்க்க ஒரே வெப்பியாரமாக இருந்தது. தாய் தமக்கையின் இந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியாமல், அடுப்படிக்குள் அம்மிக்கருகில் குந்தியிருந்தவன் ஆவேசம் பொங்க எழுந்தான். "உங்களுக்கு அப்பவுஞ் சொன்னனான். அவை வீட்டுப்படலை திறந்து சம்மந்தம் கேட்க வெளிக்கிட வேண்டாமெண்டு. இப்ப நடந்த பரிசுகேட்டைப் பாத்தியளே?"

"எனக்குத் தெரியுமே இழவை, இப்பிடி வாழ்மானம் வருமெண்டு....போக்கறுவான் புறியமில்லாட்டி இல்லை யெண்டுறதுக்கு

www.padippakam.com



என்ன தேள்வைக்குப் பேஞாயமெல்லாம் பறைஞ்சவன்?"–பற்றி வந்த ஆத்திரத்தை வார்த்தைகளாக வடித்தாள் பகவதி.

"மாமியும் முடியாதெண்டு சொன்னவவாமே?"

"அவளுமொரு மாமியே? தாடகை. உன்ரை மருமோளை என்ரை கொழுந்து கட்டிப்போட்டு அவனென்ன மாரடிக்கிறதே? இருக்கிறதுக்கு ஒரு ஆன வீடுவாசல் கூட இல்லாமல் என்ன முகாந்திரத்திலை அவள் கலியாணம் பேச வெளிக்கிட்டவள்? எண்டெல்லோ கொம்மானைப் பார்த்து நையாண்டி பண்ணினாளாம்."

"முற்றா என்ன சொன்னவையாம்?"

"இது ஒத்து வராது. வேறை இடத்தைப் பாருங்கோ எண்டு கொம்மானின்ரை முகத்திலை காறித் துப்பின மாதிரிப் புரியனும், பெண்டிலும் சேர்ந்தாப் போலை சொல்லிச்சினமாம். அவளுக்கென்ன கடந்தனிக் கவலையோ? கன்னி கரை சேராத கவலையோ? புரியன்ரை சொத்து சுகத்தை அம்பாளிச்சுக் கொண்டு திண்டு திண்டுட்டுத் திமிர் எடுக்கிறதுக்கே உந்த அறுந்துபோன கதை கதைச்சவள்?. . . போன கொம்மானுக்கு ஒரு தண்ணி வென்னி, அதுதான் இல்லாட்டி ஒரு வெத்திலைத் தட்டு.....பாவம் அது அழுவாரைப் போலை வந்துது. அக்கையின்ரை பிள்ளையளுக்காக அதுபாவம் எவ்வளவு பங்கப் படுகுது. எங்களுக்கெண்டு இந்தச் சீலக்கேடு வந்து துலைஞ்சுது." –குமரனால் மேலும் அங்கு நிற்க முடியவில்லை. அடுப்படியை விட்டு வெளியே வந்தவன் தீராந்தி வாசலில் வந்து குந்திவிட்டான்.

எப்படியும் இம்முறை ஒரு பிசகுமில்லாமல் தமக்கையின் கலியாணத்தை ஒப்பேற்ற வேண்டுமென்ற வைராக்கியத்தில் கொழும்பில் 'கொம்பனி'யொன்றில் கடமையாற்றும் அவன், வயலூர் பிள்ளையார் கோவில் திருவிழாவோடு லீவில் வந்தவன் தான். இரு கிழமையாகியும் இன்னுந் திரும்பவேயில்லை.

www.padippakam.com



முப்பத்திபிரண்டு வயது முற்றுப் பெற்றும் இன்னும் கல்யாணங் காட்சியென்று எதுவுமே காணாதிருக்கும், தன்னைவிட ஐந்து வயது முதிய தமக்கை புவனத்திற்கு 'ஏழரைச் செவ்வாய்' என்ற காரணத்தால் பதினாறு வருஷங்களாகக் கலியாணம் பேசியும் பயனில்லாது போயும் அண்மையில் கப்பலிலிருந்து திரும்பிய மாமியின் மகனிற்காவது பொருந்துமோ? என்ற தாயின் நப்பாசையில் கேட்டும் அங்கும் இப்பிடி ஒரு 'பிரச்சினை' உருவானது...?

குமரனின் தகப்பன் சின்னையா சாதாரண தோட்டக் காரனாகத் தான் இருந்தார். 'இருபது பட்டி பொயிலைக் கண்டு. அஞ்சு பட்டி மிளகு கண்டோடை ஈரக்காய் போக, பூசணி' – அவ்வளவுதான் அவரால் முடிந்தது.

வயலூர் வட்டவிதானையாரின் தோட்டத்தறையைக் குத்தகைக்கெடுத்து வாழ்க்கையைப் பண்படுத்திய அவர் இருதய நோயால் வலுவிழந்து. . . கண்மூடியதற்குப் பிறகு கடந்த ஆறேழு வருஷங்களாக அந்தக் குடும்பத்திற்கு குமரன் தான் தலையாள். மேற்படிப்பு படிக்கத் தகுதியிருந்தும் வீட்டு நிலவரத்தால் இளம் வயதிலேயே தொழில் துறையென இறங்கிவிட்டான் அவன். அவனது நாலாயிரம் ரூபாய் சம்பளமும்; நெல்லுப் பிழுக்கி, கருப்பனீர் காய்ச்சி மாடாடு வளர்த்து மாடாயுழைக்கும் பகவதியின் பெருமாற்றலாலுந்தான் அந்தக் குடும்ப வண்டி இந்தளவிற்காவது ஓடுகிறது .....

வீட்டுச் செலவு, தங்கை சறோவின் படிப்புச் செலவென மாதச் சம்பளமே. . .ஒரு மூலைக்கும் கிள்ளித்தெளிக்கக் காணாத இந்த எக்கச்சக்கமான காலத்தில் மாலும் குடிலுமாய் இருக்கும் வீட்டினைத் தான் அவன் எவ்வாறு மாற்றி அமைக்க முடியும்? இறக்கும் போது சின்னையர் விட்டுச்சென்ற ஒரு பத்தாயிரம் ரூபாக் காசு மட்டுமே குடும்பச் சொத்தாய் உள்ளது. பத்தாயிரம் ஒரு வீட்டு அத்திவாரத்திற்கே பத்தாத இந்த நாளையில்.......

தந்தையின் மூத்த மைத்துனர் விசுவமடுவில் வேளாண்மைக் காரர் முருகேசர் ஆரம்பத்தில் . . . 'ஒல்லுப்போலை' தமக்கு உதவி

www.padippakam.com



செய்தாலும் காலப்போக்கில் தாமாகவே விலகிக் கொண்டதை அவன் உணராமலில்லை.

இந்த வேளையில் தான் உழைக்கவென 'கப்பலேறிய' முருகேசரின் ஒரே மகன் சந்திரன் திரும்பி வந்தான். சந்திரனுக்கும் புவனத்திற்கும் ஒரே வயதென்றாலும் சின்னையர் இருக்கும் போது சந்திரனிற்குத் தான் புவனம் என்றொரு பேச்சிருந்தது. சின்னையர் சாகும் போது கூட, "நீ மூத்தவளைப் பற்றி கவலைப்படாதை! அவளை அக்கையின்ரை பெடியன் கட்டுவான். இனி..... இளையவளையும் கடவுளேயெண்டு எங்கடை பொடியன் கவனிப்பான் தானே? வயலூரான்ரை அருளாலை எல்லாம் நல்லபடியா ஒப்பேறும்" – என்றே கூறிச் சென்றார்.

குடி இருக்கும் ஒரு பரப்பு வளவைத் தவிர வேறெதுவுமே தமக்கைக்குத் தாங்கள் கொடுக்க முடியாதிருப்பதை உணர்ந்தும் தனது விருப்பத்தின் பெயரில்; 'அக்கைக்கும், அக்கையின் மகளிற்குமாக' மாமன் பரமசிவம் ஓடியாடித் திரிந்து ஏறியிறங்காத படிகளில்லை என்பதும் அவன் தெரியாமலில்லை.

"என்ன பூராயம் பிடிக்கிறாய் பரமு? தங்குமடம் மாதிரி கிடக்குது...அந்தக் குஞ்சட்டி வளவுக்கை என்னெண்டு எங்கடைபிள்ளை வந்திருக்கிறது–?", "நாசமாப்போக! ஒரு பரப்பு வீட்டை வைச்சு நாங்களென்ன மாரடிக்கிறதே? நாங்களொண்டும் பிறத்தியாரைப் போலை கொழுத்த சீதனமாகக் கேக்கேலை... இரண்டு இலட்சம் காசாத்தரேலு மெண்டால் சொல்லு. அதைப்பற்றி யோசிப்பம்" – என ஆரம்பத்தில் சொல்லியவர்களும்; "என்ன பரமு, புதுநாணயக் கதை பறையிறாய்? குமர் முத்திக் குரங்காப் போச்சு! இனி அந்தப் பொடிச்சிக்கு என்ன கலியாணம்? இனியும் சிறைவைச்சிருக்காமல் வாய்ச்சால் எங்கையாலும் இரண்டாந்தாரமா எண்டாலும் பரவாயில்லை தள்ளிவிடுங்கோ.... பொடிச்சியும் வலுவாக் கொட்டுப்பட்டுப் போச்சு.....இனி உதுக்கு ஊருக்கை?" – எனப் பின்பு கூறினோரும்......அப்பப்பா! பரமசிவம் படாதபாடெல்லாம் பட்டுவிட்டார்.

www.padippakam.com



கடைசியாகத்தான் "அவையையும் ஒருக்கால் கேட்டுப் பாப்பமடா, சந்திரனுக்கும் ஏழரைக் குற்றமிருக்குது எண்டு கேள்வி,"– என்று பகவதி மும்முரமாய் நின்று பரமசிவத்தை மண்டாடியதன் பெயரில் தான்.....அவர் சம்மந்தம் கேட்கவென இன்று முருகேசர் வளவிற்குச் சென்றிருந்தார்.

'பாவம் அம்மானும் எங்களுக்காக எவ்வளவு...?' ஏக்கப் பெருமூச்சுதிர தீராந்தி வாசலை விட்டெழுந்தான் குமரன். அவனுக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. மீண்டும் அடுப்படிக்குள்ளே வந்து அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தான்.

எப்படியாவது தமக்கைக்கு ஒரு வழி பிறக்க வேண்டும். முப்பத்தியிரண்டு வயதைக் கடந்த அவளிற்கு இனியார் விரும்பி மாப்பிள்ளை தரப்போகிறார்கள்? சீதனம் இல்லாத பிரச்சினை வேறு.

திக்கற்றவர்களுக்குத் தெய்வந் தான் துணை என்பார்களே! அவர்களைப் பொறுத்த மட்டில் அந்தக் கடவுள் கூட கல்லாகிவிட்டாரா?

"கல்வளவுக் கனகசபை வீட்டிலை ஒரு புதுக்குடும்பம் வந்திருக்கு. வேற்றூரில் சனங்களாம். வடலித்திடல் பனம்பொருள் நிலையத்திலை பொடியர் மனேச்சராம். தங்கக்காறப் பொடிச்சி யோடையும், தேப்பனோடையும் பொடியன் குடிவந்திருக்கு. . மனேச்சர் பொடியன் முன்னை கட்டினதாம். . . பெண்சாதி தலைப்பிரசவத்திலை செத்துப் போச்சு தெண்டு கதைக்கினை. பொடியருக்கு வ்யதும் அவளவு ஏற்றமில்லை எண்டு சொல்லிச்சினை. தங்கைக்காறப் பொடிச்சிக்கு இருபத்தைஞ்சு வயதாம். மாற்றுச் சம்பந்தமா எங்கையாவது வாய்ச்சால் எங்களிட்டைச் சொல்லுங்கோ எண்டு தேப்பன் சங்கக்கடை சண்முகத்தாரட்டை சொல்லியிருக்கிறாராம். இப்ப நானுதிலை போகக்குள்ளை நறுவிலித் திடலடியிலை சந்திச்சு முகத்தார் சொன்னார். அது தான் உன்னட்டை ஒருக்கால் சொல்லுவமெண்டு ஓடி வந்தனான்." வேர்க்க விறுவிறுக்க பரமசிவத்தார், தாய் பகவதிக்கு சொல்லிக் கொண்டிருப்பது குமரனிற்கும் தெளிவாகக் கேட்கிறது.

www.padippakam.com



"என்ன விசர்க்கதை கதைக்கிறாய்? பொடியன் பனம்பொருள் நிலையத்திலை வேலை எண்டுறாய். அதுகள் என்ன சாதியோ?"

"உந்தக் கண்டறியாத குலங் கோத்திரம் பாக்கிறதாலேதான் எங்கடை இனசனங்கள் இப்படியிருக்குதுகள். உதுகளிலை என்ன கிடக்கு ...... சாடையாக் கேட்டுப் பாப்பமே அக்கை?"

"எங்கடை பொடிச்சியை இரண்டாந் தாரமாக் கட்டிக்குடுக்கிற தேடா?"

"எங்கடை நிலவரத்தையும் எல்லோ சாடையா நாங்கள் யோசிக்க வேணும். பொடிச்சிக்கும் வாற ஐப்பசியோடை முப்பத்தியிரண்டு முடியப் போகுது. இல்லைத் தெரியாமல் தான் கேக்கிறன்........ இனியும் சிறைவைச்சிருந்து என்னேயப் போறாய்?"

"இதுக்கு எங்கடை பொடியன் ஒத்துவருவனே?"

"ஒத்துக் கொள்ளாமல் என்னேயிறது? . . . அவையின்ரை பக்கத்திலும் பொடிச்சி அவ்வளவு பழுதில்லையாம். இனி அவை சீதனமா ஒண்டையும் எதிர்பாக்கேலையாம்.....சீதன வாகனமெண்ட பேச்சே பொடியருக்கு பிடியாதாம்.... இனி அந்த முறையிலை மூச்சுவிடக் கூடாது. போக.... பொடியருக்கும் ஏழரைக்குற்றம் இருக்காம். .. இது எங்களுக்கு வாய்ச்ச சம்பந்தம் எல்லே அக்கை....."

"எதுக்கும் தம்பியையும் ஒருக்கால் கேட்டுப்போட்டு...."

"இதிலை நான் சொல்ல ஒண்டுமில்லை. எப்பிடியாவது அக்காவின்ரை காரியம் ஒப்பேறவேணும்." என்றவாறே குமரன் வீட்டுத் தலை வாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

"பிள்ளை....உலைத் தண்ணியை மீட்டு கொம்மானுக்கும், தம்பிக்கும் ஒல்லுப்போலை தேத்தண்ணி போட்டுக்குடு. டேய் தம்பி

www.padippakam.com



வாசிகசாலைப் பக்கமோ போறாய்? தண்ணியைக் குடிச்சிட்டுப் போடா மோனை" – புவனம் மட்டுமல்ல பகவதியும் இப்போது பம்பரமாக இயங்க ஆரம்பித்துவிட்டாள்.

உலைத் தண்ணியை மீட்டு தேநீர் போட்டுவிட்டு, உலைக்குள் அரிசியைப் போட்டாள் புவனம்.

சுவாலை கக்கி எரிந்து கொண்டிருந்த சூட்டடுப்பு தற்போது புத்தொளி வீசியவாறே அரிசியை வேகவைத்துக் கொண்டிருந்தது.

**(ஈழநாடு வாரமலர்: 1978)**

www.padippakam.com

# புதிய அத்தியாயம்

**க**ல்லூரி எல்லை மதிலில் கரைந்தவண்ணமிருந்த காகங்கள், காரியாலயத்திலிருந்து கேட்ட மணியோசையினால் வெகுண்டெழுந்து வகுப்பறைகளை வட்டமிடத் தொடங்கின.

எப்போது மணியடிக்கும் என ஏங்கியவண்ணமிருந்த மாணவர்கள், மணியோசை கேட்டது தான் தாமதம், தம் வகுப்பறையிலிருக்கும் ஆசிரியரையும் மனதிற் கொள்ளாது வகுப்பறைகளை விட்டு வெளியேறித் தத்தமது பாதைவழியே செல்கின்றனர். ஆசிரியர்களும் அதனைக் கவனிக்காதவர்கள் போல மாணவர்களை முந்திக்கொண்டு வெளியேறுகின்றனர்.

போசன மணியடித்ததையும் மனதிற் கொள்ளாது தமிழ்ப் பாடத்தின் 'அன்றைய' அத்தியாயத்தையே முடிப்பதில் கண்ணாயிருந்த திவாகரன் மாஸ்டர், வெளியில் மாணவர்கள் போடும் கூச்சலால் தனது வேலையைத் தொடர முடியாது போகவே 'மிகுதிப் பாடத்தைப் பின்னேர வகுப்பில் தொடர்வோம்.....' என்று மாணவர்களுக்குக் கூறிவிட்டு உணவருந்துவதற்காக கல்லூரி 'ஸ்ராஃப் ரூமை' நோக்கிச் செல்கின்றார்.

அதிபரின் அறையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தவர், தன்னை யாரோ அழைக்கும் சப்தத்தைக் கேட்டுச் சற்றே திரும்பிப் பார்க்கின்றார்.

www.padippakam.com



சக ஆசிரியை மல்லிகா தான் மிகவும் கலவரத்துடன் காணப்பட்டாள்.

"வட் மல்லிகா? வட் ஹுபன்ற் ரு யூ ?"

"பிளீஸ் ஸ்ராப் ரூமுக்கு வாங்க. அங்கை பேசலாம்."

ஊழியர் அறையில் சாப்பாட்டு மேசையில் எவருமே இருக்கவில்லை. எல்லா ஆசிரியர்களும் 'கரம்' அடிப்பதிலேயே கண்ணாயிருந்தனர். இதனால் அந்த மேசையில் அவர்கள் இருவரும் சுதந்திரமாகவே உரையாடக்கூடியதாய் இருந்தது. திவாகரன் சாப்பாட்டுப் பொட்டலத்தை அவிழ்த்துச் சாப்பிடத் தொடங்கினார். மல்லிகா சாப்பாட்டுப் பொட்டலத்தைப் பிரித்தபடியே திவாகரன் காதருகில் 'எதையோ' சொல்கிறாள். திவாகரன் முதலில் திடுக்கிட்டுப் போனார்.

"யெஸ் திவாகர். கேள்விப்பட்டவுடனே நானும் உப்பிடித்தான் அதிர்ந்தே போனன்."

"மல்லிகா.... மாது இப்படிச் செய்வானென்டு நான் கனவிலும் நினைக்கவேயில்லை."

"நான் மட்டுமென்ன நினைச்சா இருந்தன்?"

"மல்லிகா..... இப்ப கவலைப்பட்டு என்னம்மா பிரயோசனம்? ம்..... 'ஐ ஆம் ஏ ஃபூல்.' நான் மட்டும் அந்த நேரம் கண்டிப்பாக இருந்திருந்தால் நீர் இப்ப இப்படிக் கலங்க வேண்டிய அவசியம் வந்திருக்காது."

மேலும் எதையோ சொல்ல திவாகரன் வாயெடுத்த போது, தொடர்ந்தும் இரு ஆசிரியர்கள் போசனப் பொட்டலங்களுடன் மேசையினை வந்தடைந்தனர். இனியும் அங்கிருந்து உரையாடுவது

www.padippakam.com



அசாத்தியம் என்பதை உணர்ந்த திவாகரன், சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக எழுந்து சென்றுவிட்டார்.

'கரம்' எழுப்பும் 'கலகல'ப்பு இப்போது உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது.

திவாகரன் 'மாஸ்டரின்' மனமோ ஒரு நிலையில் இல்லாது தவித்துக் கொண்டிருந்தது. ஊழியர் அறையின் ஒரு மூலையில் இருந்தவாறே, அண்மையில் வெளியான நாவல் ஒன்றினைப் புரட்டிக் கொண்டிருந்தார் அவர். நாவலின் முதலாம் அத்தியாயம்... புரண்டு கொண்டிருந்தது.

திவாகரன் அந்தக் கல்லூரிக்கு ஆசிரியராக வந்து ஏறத்தாழ ஏழு வருஷங்களாகி விட்டன. 'அட்வான்ஸ் லெவல்' வரை படித்த அவர், ஒரு தமிழ் ஆசிரியராகத்தான் அந்தக் கல்லூரிக்கு நியமனம் பெற்றிருந்தார். மாதவன் திவாகரனுடன் ஆரம்பப் பள்ளி தொட்டு 'அட்வான்ஸ் லெவல்' வரை ஒன்றாகப் படித்தவர். ஆனால், திவாகரனைவிட வசதி படைத்தவர். அதனால் சர்வகலாசாலை வரை மாதவனின் படிப்பு நீண்டது. அண்மையில் தான் ஒரு பட்டதாரி ஆசிரியராக மாதவன் அந்தக் கல்லூரிக்கு நியமனம் பெற்று இருந்தார்.

அப்போதுதான் அந்தக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்து இருந்தாள் பட்டதாரி ஆசிரியை மல்லிகா. கண்டதும், திரும்பவும் பார்க்கவைக்கும் அழகு, கஷ்டமான ஒரு குடும்பத்திலே.....ஐந்து பெண்களுக்கு மூத்தவளாகப் பிறந்திருந்தாலும் தனது ஏழ்மை நிலையை வெளியே காட்டாத சாதுரியம், வயது இருபத்தெட்டினைத் தாண்டினாலும், பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தியின் இளமை. இவை யாவும் மல்லிகாவின் தனித்துவமான அமிசங்கள்.

மாதவனும், மல்லிகாவும் பட்டதாரி ஆசிரியர்கள் ஆதலால், கருத்தரங்குளில் அடிக்கடி இருவரும் சந்திக்க வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. அந்தச் சந்திப்பு மாதவனுக்குத் தடுமாற்றத்தை

www.padippakam.com



ஏற்படுத்திவிட்டது. ஆமாம்........ மல்லிகாவை மாதவன் மனதார விரும்பினான். இதனை வெளிப்படையாக மல்லிகாவிடம் எடுத்துச் சொல்ல மாதவனின் மனதிற்குச் சற்றுச் சங்கடமாகவே இருந்தது. அதற்கு நண்பன்..... திவாகரனின் உதவி தேவைப்பட்டது.

அன்று ஆய்வு கூடத்தில் வைத்து மாதவன் திவாகரனிடம் விஷயத்தைத் தெரிவித்தபோது....."மாது! என்னைப் பொறுத்தமட்டில மல்லிகா என்ரை 'ஓண் சிஸ்டர்' மாதிரி........அவளை நல்லவன் ஒருவன் கைப்பிடிப்பதை நான் விரும்பாமல் இல்லை. ஆனால்........"

"நீ எதை மனசிலை வைச்சுக் கொண்டு இப்படிச் சொல்லுறாய் எண்டு எனக்குப் புரியுது திவாகர்."

"மாது கோவப்படாதை! உள்ளதைத்தான் கேக்கிறன். படிக் கேக்குள்ளை அவள் மைதிலியை விரும்பிப் பிறகு என்ன செய்தனீ?"

"திவாகர், அது வேறை......இது வேறை..."

"வட் ஆர் யூ ரோக்கிங் மாது?"

"அது பள்ளிக் காதல்....பருவ வெறியிலை ஏற்பட்ட காதல் எண்டு கூடச் சொல்லலாம்."

"என்ன மாதவன் சொல்கிறாய்? நீ சொல்லுறபடி பருவவெறிக் காதலாக மைதிலி அதை நினைக்கேல்லையே!"

"திவாகர்....."

"அதுதான் சொல்லுகிறன் மாதவன்! மைதிலியின்ரை நிலை இப்ப என்ன? நீ 'கம்பசுக்கு' போகேக்குள்ளை அவளை மறந்தாய். அவள் அதைத் தாங்கிக் கொள்ளாமல்......இந்த உலகத்தையே மறந்தாள். பாவம்.....பைத்தியக்காரியாகீட்டாள்."

www.padippakam.com



"மைதிலிக்கு 'மெண்டல் அப்செட்' வந்தது என்னாலையா? 'கம்பசுக்கு என்ரான்ஸ்' கிடைக்காததாலை எண்டு ஊரிலை..."

"ஊரிலே ஆயிரம் கதைச்சாலும் உள்ளது இதுதானப்பா."

"திவாகர், முடிவா நீ என்ன சொல்லுறாய்?"

"மல்லிகாவின்ரை விதி மைதிலியின்ரை கதியாகிடக் கூடாதே என்பதுதான் எனக்குள்ள கவலை."

"மைதிலியாக இந்த மாது மாறுகிறது மட்டும் உனக்கு விருப்பமா திவாகர்?"

"மாது......'வட் யூ மீன்'?"

"யெஸ்! திவாகர்.....எனக்கு மல்லிகாவின்ரை நினைவாலேயே பைத்தியம் பிடிச்சுடும் போலையிருக்கு."

"மாது, அப்ப எனக்கொரு 'புறமிஸ்' கொடு."

"என்ன?"

"இனி, மல்லிகாவைத் தவிர வேறொருத்தியையும் ஏறிட்டே பார்க்கமாட்டன், அவளையே மரி பண்ணுவன் எண்டு."

அருகிலிருந்த உடைந்து போன 'ரெஸ்ட்ரியூப்பை' ஆவேசத்துடன் எடுத்த மாதவன், தன்கையில் பலமாகக் கீறி பீறிடும் இரத்தத்தைத் தொட்டு திவாகரனிடம் சத்தமாகச் சொல்கிறான். "இந்தப் 'பிளட்' மீது 'புறொமிஸ்' பண்ணிச் சொல்றன். மல்லிகாவை கடைசி மட்டும் நான் கைவிட மாட்டன்."

இப்படியெல்லாம் நடந்து கொண்ட மாது இன்று இப்படி மாறிப்போனது...?

www.padippakam.com



"ராஸ்கல்! ஏன்ரா இப்பிடிச் செய்தனீ?" –சத்தமாகத் தன் மாணவனை அதட்டும் சக ஆசிரியர் குரல் கேட்டு நினைவு திரும்புகிறார் திவாகரன். மேலும் அந்தச் சச்சரவில் மனதை லயிக்காது... கையில் புரளும் நாவலின் இரண்டாவது அத்தியாயத்தைப் புரட்டுகிறார் அவர்.

**மு**தன் முதலாக ஒரு சரஸ்வதி பூஜை அன்றுதான் காதலுக்குத் தூதாக மல்லிகாவிடம் திவாகரன் சென்றார்.

மாதவனின் நிலையதனை மல்லிகாவுக்கு எடுத்துரைக்க திவாகரன் பட்ட பாடு இருக்கிறதே.....அப்பப்பா...... அவருக்கு போதும் போதும் என்றாகி விட்டது.

"இதை நான் அப்பவே நினைச்சன்."

"என்ன நீர் சொல்லுறீர் மல்லிகா?"

"செமினார் நடக்கேக்குள்ளை அந்தாள் திரும்பித் திரும்பிப் பார்த்து, எனக்குப் பல்லைக் காட்டைக்குள்ளை."

"மல்லிகா..... மாது மிகவும் நல்லவன்."

"உங்களை விடவா?"

"அ...அது.... ஏதோ, இதுக்கு இப்ப நீர் என்ன சொல்லுகிறீர்?"

"கண்டவங்களையும் எனக்குக் கட்டிவைக்க என்ரை ஐயா, அம்மா அவையள் ஒண்டும் ஏமாளிகள் இல்லை. ...!"

"மல்லிகா..., ஒரு சகோதரன் நான் இருக்கிறதை மறந்து நீர் பேசிக்கொண்டே போறீர்..... ஒரு சகோதரிக்குக் கல்யாணம் செய்து வைக்கிறதிலை நான் அக்கறையில்லாமல் இருப்பனோ என்ன?... ஏதோ இத்தனை நாளும் நீர் ஒரு 'ஒண் சிஸ்ரர்'போலப் பழகின

www.padippakam.com



உரிமையோடை.....இவ்வளவு பாசத்தோடை கேட்ட எனக்கு நல்ல மறுமொழி தருவீர் எண்ட நம்பிக்கையிலை வந்தன். ஆனால். ...?"

"தி......திவாகர்!"

"ஆனால், மல்லிகா ஒண்டு மட்டும் சொல்லுறன்....இது வரையில நான் எந்த விசயத்திலையும் தோல்வி கண்டதேயில்லை. ஆனால், இதிலை மட்டுந்தான்..."

"ம்..... உங்கட மாதுவை உங்களுக்காக நான்.........."

"மாஸ்டர் லெட்டர் ஃ போ யூ!" – கல்லூரிப் 'பியூனின்' குரல் அது. கடிதத்தைப் பிரித்தார் அவர். அது மல்லிகா சொன்ன அந்த சேதியையே உறுதிப்படுத்தியது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அந்தப் பகுதியில் திவாகரனின் கண்கள் மீண்டும் நிலைக்குத்துகின்றன.

......நினைத்தபடி நான் மல்லிகாவை ஏற்று விட்டால் என் தங்கையை யார் பார்ப்பது?

அவளுக்கும் ஒரு வளமான வாழ்வு அமைவதையே நான் விரும்புகிறேன். நான் மட்டும் மல்லிகாவுடன் நலமாக இருந்தால் போதுமா? அதுதான் இந்த முடிவுக்கு வந்தேன்.

சீதனமென்று தருவதற்கோ மல்லிகாவிடம் எதுவுமே இல்லை. ஆனால், இப்போ எனக்கு வாற 'புறப்போசலிலை' இனாமாக மட்டும் ஐந்து இலட்சம் திவாகர், ஐந்து இலட்சம், தவிர காணி, பூமி வயல் நிலங்கள் என்று என் பெயருக்கு 'ரென் லாக்ஸ்' பெறுமதியான 'டவுறி.'

எனக்காக எதையும் நான் ஏற்க விரும்பாவிட்டாலும் என் தங்கைக்காக 'அற்லீஸ்ட்' ஒரு 'வண் லாக்' மல்லிகாவால் தர

www.padippakam.com



முடியுமா? ஒரு மூத்த சகோதரியை இன்னும் வீட்டிலை வைத்திருக்கும் உனக்கு இது நன்றாய் புரியும் என்றே நினைக்கிறேன். இதைவிட அதிகம் நான் எழுதத் தேவையில்லை ........

அமைதியில் மூழ்கியிருந்த கல்லூரி மீண்டும் 'கலகல'ப்பில் களை கட்டிவிட்டது. 'சைலன்ஸ் பீறியேட்' முடிந்து, மாணவ தலைவர்கள் தத்தமது வகுப்பறைக்குச் சென்று கொண்டிருந்தனர்.

"ஆர் யூ பிறீ மிஸ்டர் திவாகர்?" – கல்லூரி அதிபரின் கண்டிப்பான குரலது.

"ஓ யெஸ்! இப்ப நான் ஃபிறீ."

மீண்டும் தனிமை. அதே நாவல் புரள்கிறது.....அடுத்த இத்தியாயம் இப்போது கண்களின் முன்னே......

"இந்தக் கடிதத்தை மல்லிகா 'ரீச்சர்' தந்தா. தான் அரை நேரத்தோடை லீவிலை போறாவாம்." – ஆறாம் ஆண்டுப் பையன் ஒருவனது குரல் கேட்டு நிமிர்கிறார் 'மாஸ்டர்.'

இப்போது கடிதம் கையில் புரள்கிறது.

அன்புடன் திவாகர்.

அபலை மல்லிகா எழுதிக் கொள்வது.

திவாகர், மாது என்னை ஏமாற்றி விட்டான். என் அழகை.... இளமையைக் காதலிக்கத் துணிந்த அவனது மனம் என்னை ஏற்கத் துணியவில்லை. என்னைக் காதலிக்க ஆரம்பித்த போதில்லாத தங்கைப் பாசம் இப்போது அவனுக்கு திடீரென முளைத்துள்ளது.

சீதனமாக எனக்குத் தர உன்னிடம் என்ன உள்ளது மல்லிகா? எனக்காக 'எதையும்' நான் கேட்கவில்லை. என் தங்கைக்காகத்தான்

www.padippakam.com



கேட்கிறேன். என்னை நம்பியுள்ள தங்கையைத் தவிக்க விட்டு உன்னை நான் ஏற்பதனால், நான் படித்த படிப்பே பயனில்லாது போய்விடும்.

காலையில் நான் அறிந்த விடயங்களுக்கு மேலாக இப்போது இப்படி மாது எனக்கொரு "உருக்கமான" லெட்டர் போட்டிருக்கிறான்..... அதைப் படித்து விட்டே இதை நான் எழுதுகிறேன்.

பதினைந்து இலட்சம் பெறுமதியான வயல் நிலம், மாடிவீடு, நகை நட்டு சீதனங்களுடன் மாதுவுக்கு இன்று கல்யாணமாம்! பொம்பிளை வயலூர் வட்டவிதானையாரின் ஒரே மகளாம்!

எண்ணியபடி காதலிப்பது....கண்களை மூடிக்கொண்டு வாக்களிப்பது....பின்பு கல்யாணம் என்டதும் அக்கா தங்கை என முதலைக் கண்ணீர்வடிப்பது. சீ .... இவங்களும் மனிதர்களா? படித்து விட்டார்களாம் பெரிய படிப்பு. இவங்கள் படிச்ச படிப்புக்கு இப்படிச் செய்வது மட்டும் அழகோ? ஆணாகப் பிறந்துவிட்டார்கள். அவ்வளவு தான். இப்படிக் கல்யாணத்தைப் பொருட்காட்சியாக எண்ணு கிறவங்களுக்குக் கழுத்தை நீட்டுவதை விட ......

திவாகர் எனக்கு நேர்ந்த விதி வேறெந்த பெண்ணுக்குமே நேரக்கூடாத கதி. ஆமாம் திவாகர் உங்கள் மென் இதயத்தை கல்லாக்கி நான் எழுதுவதைத் தொடர்ந்து வாசியுங்கள்.

இந்த மாதுவை நான் மனப்பூர்வமாகக் காதலித்ததாகவா நீங்கள் கருதுகிறீர்கள்? இல்லை திவாகர், இல்லை! மாதுவை உங்கள் வற்புறுத்தலுக்காகவே மணம் செய்து கொள்வதாகச் சம்மதித்தேன். ..... அதற்குமுன் நான் ஒருவரை மனதாரக் காதலித்தேன். நான் காதலித்த அவரையே மணம் செய்து கொள்ளவும் விரும்பினேன். ஆனால், விதி...?

ஆமாம் திவாகர்.... நான் யாரைக் காதலித்துக் கணவனாகக் கனவு கண்டேனோ, அவர் என்னைத் தன் 'ஓண் சிஸ்ரராக' மதிக்கிறார்.... என் காதல் வெறுங் கானல் என்பதை அப்போது தான் நான் உணர்ந்தேன்.

www.padippakam.com



நான் விரும்பிய அவர்....., மாதுவைப் போல மாறக்கூடிவர் அல்ல. அவர்.......மனிதர்! அவர் வேறுயாருமல்ல.......நீங்கள் தான் திவாகர், நீங்கள்தான்! காலம் கனியும் போது அதை உங்களிடம் உணர்த்தலாம் எனக் காத்திருந்தேன்.......வீட்டில் ஒரு மூத்த சகோதரியை கரைசேர்க்காது வைத்திருக்கும் உங்களுக்கு, அதை எப்படி.......?

என்றாலும் சரஸ்வதிபூஜை அன்றாவது உங்களிடம் அது பற்றிக் கதைக்கலாம் என்றிருந்தேன். ..... நான் அதை உணர்த்த வர, நீங்கள் வேறெதையோ சொல்லிவிட்டீர்கள்.

நான் நினைத்தபடி தான் வாழ முடியவில்லை. நீங்கள் நினைத்தபடியாவது வாழ்வோமே என்ற காரணத்திற்காகவே........ என்னையடுத்தடுத்து அடுக்காய் உள்ள நான்கு பெண்களினதும் வாழ்வும் தடைப்பட்டு விடக்கூடாதே.......அதற்காக ஒரு 'ஓண் பிறதர்' எனக்கு தேடித்தரும் கணவனாகவே மாதவனை நான் ஏற்றேன்!

ஆனால், மாதவன் என் இயலாமையை சாதகமாக்கி...... ஆமாம் திவாகர், மாது ஆசைக்காட்டி என்னை மோசம் செய்துவிட்டான்! இதற்காக வயலூர் பிள்ளையார் கோவிலில் பூங்கொல்லைக் கிணற்றில் போய் விழுந்து என் உயிரை மாய்த்துக் கொள்ளும் கோழையாகி விடமாட்டேன் நான்.

காலம் பூராகக் கன்னியாகவே வாழ்ந்திடலாம்....... ஆனால், இந்த பொல்லாத சமூகம் ஏதாவது பழி சொல்லுமே? அதுவுமில்லாமல் தொடர்ந்துள்ள என் தங்கையர் வாழ்வு?

இலட்சக்கணக்கில் என்னிடம் பணம் இல்லை. ஆனால், எனக்கும் ஒரு இதயம் உண்டு. அதில் உணர்வுகள் உண்டு!

அதிகம் எழுதும் நிலையில் நானில்லை !

அன்புடன் உங்கள் முடிவை நாடும்..... அபலை மல்லிகா.

www.padippakam.com



காரியாலயத்தில் இருந்தெழுந்த மணியோசை திவாகரன் காதுகளில் வந்து மோதுகிறது. அவரின் 'ஃபிறீ பீரியட்' இப்போது....... முடிந்து விட்டது.

கடிதத்தினைப் படித்து முடித்தவர், மீண்டும் ஒரு முறை கடித இறுதி வாசகங்களை நோக்குகிறார்.

'அன்புடன் உங்கள் முடிவை நாடும் .......அபலை மல்லிகா.' கண்களிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் அபலை என்ற சொல்லினை அழித்து விடுகின்றன.

கடிதத்தினை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்தவர், புதிய தீர்மானம் ஒன்றுடன் புத்தகத்தைத் தூக்கியவாறே, வகுப்பறைக்குள் நுழைந்து, புதிய அத்தியாயம் ஒன்றினைப் புரட்டுகிறார்.

(தினகரன் வாரமஞ்சரி :- 1977)
(மறுபிரசுரம் : தாரகை)

///

படிப்பகம்

www.padippakam.com

# காகித உறவுகள்

கொழும்பு-14,
23-12-81.

அன்புடையீர்!

அண்மைக்காலங்களாகத் தங்களது பல கதைகள் எமது ஆஇ சஞ்சிகையின் பிரசுரத்துக்காகக் கிடைத்து வருகின்றன. அவை யாவுமே எமது மாசிகையில் வெளிக்கொணரக் கூடியவைகளாக அமைந்திருக்கின்றன. இதன் பிரகாரம் மார்கழி இதழினை அலங்கரிக்கும் தங்களது 'அரிச்சுவடி' கதையினைத் தொடர்ந்து மாசி இதழுக்காக 'புறமோஷன்' என்ற கதையினையும் தேர்ந்தெடுத்துள்ளோம்.

ஆஇ என்ற ஈரெழுத்துள் பொதிந்திருக்கும் எமது 'ஆக்க இலக்கியம்' எனும் மாசிகையின் மகிமையுணர்ந்து செயலாற்றும் தங்கள் திறன் போற்றற்கரியது. தொடந்து வரும் தங்களது பிரசவங்களுக்கூடாகவே தங்கள் திறனின் பரிணாம வளர்ச்சியை மிகவும் உணர்ந்து வருகிறேன். வெறுமனே தயாரிப்புகளாக அன்றி தங்களது ஒவ்வொரு படைப்பும் சமூகத்தின் நிதர்சனங்களையும் பிரக்ஞைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. கூரான, செறிவான மொழிநடை; லாவகமான வெளிப்பாடு, இவற்றினால் தங்களது பதிவுகள் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. நிச்சயமாக தங்களுக்கு ஈழத்தின் இலக்கியவாதிகள் மத்தியில் ஒரு உன்னத இடம் உண்டு.

www.padippakam.com



தொடர்ந்தும் எழுதுங்கள் அம்மணி! தங்களுக்கு ஊக்கமளிப்பதால் ஆ.இ பெருமை பெறுகிறது!

அன்புடன்
**ஆசிரியர்,**
**ஆ.இ.**

❖

**யாழ்ப்பாணம்,**
25.12.81.

**ம**திப்பிற்குரிய ஆ.இ ஆசிரியர் அவர்களுக்கு!

ஐயா!

தங்களது மடல் ஒன்று என் கரம் கிட்டியிருப்பது பரமாத்மா ஜீவாத்மாவைத் தேடிவந்த வரலாற்றுக்கு நிகரானது. எழுத்துலகில் அஆ எழுதுபவள் நான். அப்பேற்பட்ட எனக்கு ஆ.இ சஞ்சிகை ஆசிரியரது பாராட்டுக்கள் கிடைத்திருப்பதை உண்மையில் பெரும் பேறாகவே கருதுகிறேன். தங்களது மடல் எனக்குச் சந்தோஷத்தைத் தந்திருந்தாலும் வெறும் பல்கலைக்கழக மாணவியான என்னைப்போய் அம்மணி எனத் தாங்கள் விழித்திருந்தது பெரிதும் சங்கடமாக இருந்தது. தங்களது வேண்டுதல்படி தொடர்ந்தும் எழுதுவேன். மேன் மேலும் தங்களது பாராட்டுக்களை தட்டிக் கொள்வேன் என உறுதி பகர்ந்து விடைபெறுகிறேன்.

நன்றிகளுடன்
**ஆரத்தி.**

❖

www.padippakam.com



**கொழும்பு.**
**1.1.82.**

**அ**ன்புமிக்க சோதரி!

இனிய புதுவருட வாழ்த்துக்கள்!

உங்களது மடலுக்கு நன்றி. ஆக்க இலக்கியத்தின் பரிணாமத்தை அகலப்படுத்த முனைந்த உங்களது அறுவடைகளின் ஆழ அகலங்களின் அடிப்படையில் வைத்து ஆரத்தியின் வயதைக் கணித்து விட்டது எனது அறியாமைதான். முதிர்ந்து பண்பட்டது உள்ளமும் அறிவுமே என்பதனை இப்போது தான் புரிந்து கொள்கிறேன். அது நிற்க, பரமாத்மா என்றெல்லாம் சொல்லுமளவிற்கு நான் மட்டும் மணிவிழாக் கண்ட முதுபெரும் கலைஞனா என்ன? மார்கழி இதழினை அலங்கரித்த தங்கள் அரிச்சுவடிக்கே ஆயிரக்கணக்கில் அர்ச்சனை மடல்கள் வந்து குவிகின்றன. முன்னணிச் சுவைஞர்கள் மூவரது கருத்துக்கள்ளை மட்டும் இங்கு இணைத்துள்ளேன்.

உங்கள் பதில் கண்டு பிற!

அன்புடன்
**சோதரன்**
**செல்லா**

❖

**யாழ்ப்பாணம்,**
**23.4.82.**

**அ**ன்பின் செல்ல(ா) அண்ணா!

உங்கள் புத்தாண்டு வாழ்த்து மடலும் இரு கடிதங்களும் கிடைத்திருந்தன. எனது பதிலை எதிர்பார்த்துச் சலித்து முடிவில் "என்ன இவளுக்கு?" என்றெல்லாம் நன்றாகவே கற்பனை

www.padippakam.com



பண்ணியிருப்பீர்கள். எனக்கு இறுதியாண்டு பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது அண்ணா. இன்றுதான் இறுதிப்பாடம். பரீட்சையால் வந்ததும் வராததுமாக இருந்து இதனை வரைகிறேன்.

கடந்த 22 ஆண்டுகளாக குடும்பத்தில் தனியாகவே வாழ்ந்து விட்டவள் நான். அம்மாவைத் தவிர என் மீது அன்பு பொழிய இதுவரை எவருமே இருந்ததில்லை. ஆனால், இப்போதெல்லாம் அந்தக் குறை அற்றுப்போய்விட்டது அண்ணா! உங்கள் கடிதங்கள் எனக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் நல்கி வருகின்றன. உடன் பிறந்தவன் ஒருவன் இத்தனை காலங்களுக்குப் பிறகாவது கிடைத்திருப்பது எனது பேரதிர்ஷ்டமே. அம்மா கூட எங்களது பாசம் பற்றி அடிக்கடி சொல்லிப் பூரிப்படைவா.

நிற்க ஆடி புத்தாண்டு மலரிலும் என் கதை ஒன்றினைப் பிரசுரித்திருக்கின்றீர்கள். 5 மாதங்களுள் எனக்கு மட்டும் 3 களம் தந்த உங்கள் உயர்ந்த மனதுக்கும், அன்புக்கும் என்றென்றும் நான் கடமைப்பட்டவள். அண்ணி, பிள்ளைகள் யாவரும் அங்கு நலந்தானே? மீண்டும் மறுமடல் ஒன்றில் சந்திக்கின்றேனே....!

**-இனிய தங்கை ஆரத்தி.**

❖

**கொழும்பு,**
**25.12.82.**

**எ**ன் இனிய தங்கை ஆரத்திக்கு!

இன்று எனது பிறந்த நாளுக்காக வந்து குவிந்த எத்தனையோ வாழ்த்துக்கள் மத்தியில் உனது பதிவை மட்டுமே மிக்க பதுமையானதாக நான் உணருகின்றேன். 30 வரிகளின் உச்சக் கட்டமாக முடிவில் நீ எழுதிய " உங்கள் பெயரே செல்லா நான் சுமக்கும் முதல் மழலை!" என்பதனை வாசிக்கும் போது உண்மையிலேயே என் கண்கள் பனித்துவிட்டன ஆரத்தி.

www.padippakam.com



"இப்பிறப்பில் மட்டுமல்ல நீ எப்பிறப்பிலும் என்னுடன் பிறக்க வேண்டும்!" என்ற வரியும் மிக்க என் கவனத்தை ஈந்தது. இதற்குப் பதிலாக நான் என்ன தரமுடியும்? ஆரத்தியின் 'அட்வான்ஸ் லெவல்' கதை தாங்கி ஆ இயின் நத்தார் மலர் நாளை வெளிவருகிறது என்பதை மட்டுமே பிறந்த நாள் பரிசாக என் தங்கைக்கு இந்தக் குசேலனால் அன்பளிக்க முடிகிறது!

**உன் அண்ணா**

❖

**யாழ்ப்பாணம்,**
31.3.83.

என் அண்ணா!

நானுங்களுக்கு வரையும் 50 ஆவது மடல் இது. பிரதித் திங்கள்களிலும் உங்கள் மடல் என் கரம் கிட்டுவதுண்டு. அதில் தற்செயலாகத் தாமதம் நிகழும் போது தபால் திணைக்களத்தில் எனக்கு வரும் எரிச்சலை வெறும் வார்த்தைகளால் வடிக்க முடியாது அண்ணா.

'ஆ இ'ன் சித்திரை மலரிலிருந்து ஆரம்பமாகிறது ஆரத்தியின் 'பட்டதாரிகள்' தொடர்கதை என்ற விளம்பரத்தினைக் கடந்த இதழில் கண்டு மகிழ்ந்தேன். அதேசமயம் ஆரம்பித்த 5 ஆண்டுகளுள் 'ஆ இ'யின் வளர்ச்சியினை நான் மிக உன்னிப்பாகவே கவனித்து வருகிறேன். குப்பைகள் மலிந்து விட்ட இன்றைய இலக்கியக் களத்தில் 'ஆ இ'யின் பாதை தனியானது தான். 30 வயதுகளில் மட்டும் இருந்துகொண்டு இப்படியான கனதியான தொகுப்பினைத் தர எப்படி அண்ணா உங்களால் முடிகிறது?

கடந்த காலங்களில் 'ஆ இ'யில் பிரசுரமான என் கதைகள் சிலவற்றினைத் தொகுத்து நூலுருவாக்கும் முயற்சியில் நான் ஈடுபடலாம்

படிப்பகம்

www.padippakam.com



என்றிருக்கையில் முதுமாணிக்கான பரீட்சைக்காகவும் தயார்ப்படுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தம். முதலில் படிப்பை முடித்துப் பின்னர் நூலை வெளிக்கொணர இப்போது தீர்மானித்திருக்கிறேன். என் நூல் வெளியீட்டுவிழாவுக்கு வந்து சிறப்புரையாற்றி முதல் பிரதி பெறுவது நீங்கள் தான் செல்லா நினைவிருக்கட்டும்!

**-ப்ரிய தங்கை ஆரத்தி**

❖

**கொழும்பு.**
23.7.83.

ப்ரிய தங்கை ஆரத்தி!

"ஆஇ என்ன ஆரத்திக்குச் சீதனமா? " என்று அன்றொரு நாள் நண்பர் அளையூரான் பகிரங்கமாகவே இலக்கியக் கூட்டம் ஒன்றில் இங்கு கேட்டிருந்தாராம். வேறு நண்பர்கள் சொன்னார்கள். அளையூரானது ஆக்கங்கள் இலக்கிய உலகில் இப்போது எடுபடாது போய்விட்டதனால் அதிகமாக அதேவேளை ஆரோக்கியமான இலக்கியம் படைத்துவரும் ஆரத்தி மீது அவரது ஆத்திரம் திரும்பியிருப்பதில் வியப்பேதும் இல்லைத்தான்.

உனது 'பட்டதாரிகள்' நாவல் தனது உள்ளத்தைத் தொட்டதாகப் பிரபல நாவலாசிரியர் தெளிவத்தை ஜோசப் அவர்கள் தனது கைப்படவே கடிதமெழுதி 'ஆஇ'க்கு அனுப்பியுள்ளார். எண்பதுகளில் எழுத ஆரம்பித்தவர்களுள் ஆரத்திக்கு ஒரு தனியிடமுண்டு என்ற ரீதியில் முன்னணித் திறனாய்வாளர் கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் ஒரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் 'பட்டதாரிகள்' உனக்கோர் வெற்றிப்படைப்பு என்று மிகத் தாராளமாகவே கூறிக் கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



சிறுகதைகளை விட நாவல் இலக்கியத்திலேயே உனது ஆளுமை பூரணப்படுத்தப்படுகிறது என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். பல்கலைக்கழகக் களத்தோடு ஒன்றியதாக மட்டுமன்றி மென்மேலும் உனது பார்வை விரிவடைய வேண்டும் என்பதே எனது அவா!

**-அண்ணன் செல்லா**

❖

**யாழ்ப்பாணம்**
1.9.83.

**அ**ன்புள்ள செல்லா அண்ணா குடும்பத்தினருக்கு! நிகழ்ந்து விட்ட இனக்கலவரத்தில் உங்கள் நிலை அறிய நான் கொண்ட துடிப்பினை வார்த்தைகளில் வடிக்க முடியாதண்ணா! ஜூலை 25 லிருந்து தொடர்ந்து இரு வாரங்களாக உங்கள் குடும்பம் பட்ட துயரத்தினை மடலில் பார்த்த போது பெருகி வந்த என் கண்ணீரைத் தடுக்க முடியவில்லை அண்ணா! என்ன கொடுமை இது? எங்கள் இனத்துக்கு கால் நூற்றாண்டுக்குள் அடுத்தடுத்தாக ஏனிந்த நியதி?

வீடுவாசல், பொருள் பண்டங்களை இழந்து உடுத்த உடையுடனேயே கடந்த 5 வாரங்களாக அகதிமுகாமில் அல்லலுற்று வரும் உங்கள் குடும்பத்துக்கு ஆறுதல் வார்த்தைகளைத் தவிர இங்கிருந்து வேறு எவற்றினை அண்ணா என்னால் அனுப்பி வைக்க முடியும்?

ஆஇ அச்சகம் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டதாகவும் காகிதங்களும், பல நூல்களும் குவிக்கப்பட்டு உங்கள் கண்முன்னாலேயே எரிக்கப்பட்டதாகவும் அறிந்து சொல்லொண்ணாத் துயருற்றேன். கல்வித்தாய்க்கு நிகழ்ந்த கதிக்கு காலம் ஒரு பதில் சொல்லாமல் விடாது அண்ணா!

www.padippakam.com



பல பேருக்கு ஏணியாக இருந்து தமிழ் இலக்கியத்துக்கு அரும் பெரும் தொண்டாற்றிய செல்வர் நீங்கள். உங்களால் உயர்ந்த ஒருவரே நாளை உங்கள் வளர்ச்சிக்கு ஒரு வழி சொல்லக்கூடும்! ஆதலால் உறுதியாக இருங்கள் அண்ணா என்பதையே இறுதியாகவும் கூறி விடைபெறுகிறேன்.

அன்புடன்,
**தங்கை,**
**ஆரத்தி.**

❖

**கொழும்பு-3**
7.10.83.

**அன்புத் தங்கை!**

இரத்மலானை இந்துக்கல்லூரி அகதிகள் முகாமுக்கு நீ அனுப்பி வைத்த ஆறுதல்கடிதம் கண்டு மிக மகிழ்ந்தேன். உனது அன்பின் ஆழத்தின் நிதர்சனத்தினை நீ அழகாக நிரூபித்துவிட்டாய் என என் மனைவியும் கூறினாள்.

இப்போது கவிஞர் மீரானது வீட்டில் நாம் குடியிருக்கின்றோம். தற்காலிகமாகத் தனியார் அச்சகமொன்றில் முகாமையாளனாகப் பணி புரிந்து என் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். மீரானது குடும்பத்தினரின் அன்பும், புரிந்துணர்வும் ஓரளவுக்கு எமது இழப்புக்களை நிவர்த்திக்க முனைகின்றன.

ஆ இ ஏட்டினை மீண்டும் ஆரம்பிக்க எடுத்த முதல் முயற்சி தோல்வியைத் தழுவி விட்டது. அதனைத் தொடர முடியும் என்ற நம்பிக்கை அருகி வருகிறது.

அதிகம் எழுதும் மனோநிலையில் நானில்லை. பிறபின்.

❖

www.padippakam.com



கொழும்பு – 3,
25.12.83.

அன்புத் தங்கை!

நீண்ட நாட்களாக உன் காகிதங்கள் எவற்றையுமே காணவில்லையே ஏன்? அஞ்சாது உன் அஞ்சல்களை மீரானது விலாசத்திற்கே அனுப்பி வைக்கலாம் ஆரத்தி! 'ஆஇ'ல் அதிகமாக தன் கவிதைகளை அரங்கேற்றாத புதுக்கவி மீரான் இப்படியாக எனக்கு உபசாரம் தருவது உண்மையில் வியப்பினைத் தருகிறது. தங்கும் வாடகையினைக்கூட வாங்கத் தயங்குகிறார் அவர். எனது 'கிளிக்' என நான் கருதியிருந்த நண்பர்கள் ஏனோதானோ என்றிருக்கும் இவ்வேளையில் மீரான் கவி இத்தனை கரிசனை என் விடயத்தில் காட்டிவருவது உண்மையில் மானுடம் ஒன்றினை எனக்கு இனங்காட்ட விளைகிறது! உன் பதில் கண்டு மீண்டும் எழுதுவேன்!

❖

கொழும்பு-3
16.5.84.

அன்புத் தங்கை!

இன்று உனது ' புதிய உறவுகள்' நூல் வெளியீட்டு விழா என பத்திரிகையில் பார்த்தேன். முதல் பிரதி வாங்கிச் சிறப்புரை ஆற்றும் அந்தக் கலாநிதியின் பெயரினைக் கூட ஆர்ப்பாட்டமாகப் போட்டிருந்தார்கள். தகுதியானவர்தான். ஆனால், ஒரு அழைப்பிதழ் கூட என் கரம் கிட்டாதளவிற்கு இந்தச் செல்லா இன்று செல்லாக் காசாகி விட்டானா ஆரத்தி?

"அற்றகுளம்,அநாதைகள் என எம்மை இனங்கண்டதும் முன்பு ஒட்டியிருந்தவர்களே இப்போ எம்மை எட்டி உதைக்கிறார்களே?" என என் மனைவி இதையறிந்ததும் சொன்னாள். ஆனால், ஆஇ மாசிகையால்

www.padippakam.com



இனங்காணப்பட்டு இலக்கிய உலகில் நிரந்தர இடத்துக்கு வந்துவிட்டவர்கள் மத்தியில் உன்னை இன்னமும் ஒரு வித்தியாசமான இலக்கிய வாதியாகவே என்னால் கணிக்க முடிகிறது. அதனால் மென்மேலும் உன் வளர்ச்சிக்காக ஆண்டவனைப் பிரார்த்தித்து அடியேனின் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖

கொழும்பு,
7.9.85.

அன்புச் சகோதரி!

தங்களது திருமணச் செய்தி பற்றி விளம்பரம் பார்த்தேன். அதில் உற்றார் உறவினர் இதை ஏற்றுக்கொள்ளவும் என்ற வாசகம் இருந்ததல்லவா? உரிமையோடு நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

தங்கள் துணைவரும் தங்களைப் போல பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற சேதி மிக்க மகிழ்வைத் தந்தது! அழகு, அறிவு, இளமை, கல்வி, புகழ், பெருமை போன்ற பதினாறு வளமும் உங்கள் இருவரையும் மேலும் சேர வேண்டி மனதார வாழ்த்தி விடைபெறுகிறேன்!

❖

கொழும்பு,
25.12.88.

அன்புடையீர்!

மிகமிக நீண்ட இடைவெளிக்குப் பின் இம்மடலினை நான் வரைகிறேன். ஆராய்ச்சிக் கல்வியின் நிமித்தம் தம்பதிகளாகவே தாங்கள் வெகு விரைவில் வெளிநாடு செல்லத் தீர்மானித்திருப்பதாக அறிகிறேன். மிக்க மகிழ்ச்சி. இப்போதும் 'ஆ இ' வெளிவந்து கொண்டிருக்குமானால்

www.padippakam.com



இந்தச் செய்தியை விஷேட மகுடத்தின் கீழ் வெளிக்கொணர்ந்திருப்பேன். என்ன செய்வது 'செல்லா'தான் இன்று 'செல்லா'து போய்விட்டானே?

கடந்த மாதம் தங்கள் மழலையின் முதலாண்டு பிறந்ததின வாழ்த்து பத்திரிகையில் பார்த்தேன். இலக்கியன்! என்ன அழகான பெயர்? பெற்றவர் போல படிப்பில்... படைப்பியலில் இலக்கியனும் இப்பாரில் பெருமை பெற வேண்டி யானும் பிரார்த்திக்கின்றேன்.

ஆக்க இலக்கியத்திலாவது தாங்கள் காட்டிய ஈடுபாடு வெறும் 'காகித உறவுகள்' ஆகிப் போய்விடக்கூடாது என்பதனை மட்டும் ஒரு முன்னாள் மாசிகை ஆசிரியன் என்ற கோதாவில் தங்களிடம் இறுதியாக வேண்டி விடை பெறுகிறேன்! நன்றி! வணக்கம்!

என்றும் அன்புடன்,
**முன்னாள் ஆசிரியர் ஆ.இ.**

**(வீரகேசரி வார வெளியீடு: 1989)**

//

www.padippakam.com

# அம்மா

அம்மாவால் மேலும் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. ஊன்றிக் கொண்டு வந்த கோலை கெட்டியாகப் பிடித்தவாறே, அருகிலிருந்த மைல்கல் மதகில் அமர்ந்து கொண்டாள். கண்களில் ஒளிமங்கிக்கொண்டு வருமாப் போலிருந்தது. வீதி வழியே சென்று கொண்டிருப்பவர்களையோ, அல்லது வாகனங்களையோ பார்க்க முடியாத அளவிற்கு, படிப்படியாகக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன. இங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு இன்னும் அரை மைல் தூரமாவது நடக்க வேண்டும். அம்மாவால் இந்நிலையில் எப்படி இவ்வளவு நீண்ட தூரத்தைக் கடந்து செல்ல முடியும்? கண்கள் இருண்டு கொண்டு வந்தாலும், அம்மாவுக்கு இன்னமும் நினைவுகள் தெளிவாகவே உள்ளன.

அம்மாவுக்கு பெற்றோர் இட்ட பெயர் அன்னம்மா. ஆனால், உணவு முத்திரைக்கான அட்டையில் மட்டுமே அப்பெயர் பதியப்பட்டிருந்ததே தவிர, அக்கம் பக்கத்தார் உட்பட பழகிய சகலருமே அன்னம்மாவில் அன்னத்தை விழுங்கிவிட்டு வெறுமனே 'அம்மா' என்று மட்டுமே அழைத்து வரலாயினர். உணவு முத்திரைக்கான உலர் உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் சங்கக்கடை மனேஜர், 'அடுத்தது அன்னம்மா' என்று அன்னம்மாவை பார்த்து அழைத்தாலும், அது பின்னாலை யாரையோவாக்கும் என்று 'அம்மா' ஆறுதலாக 'வெற்றிலை' போட்டுக்கொண்டு இருக்குமளவிற்கு .... இன்று ஏறத்தாழ தன் முழுப்பெயர் அன்னம்மாவுக்கே மறந்த நிலையில் அம்மா என்ற பெயரே நிலைத்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அம்மாவுக்கு மறந்து போனது தன் முழுப் பெயர் மட்டுமல்ல, வாழ்ந்த குடும்பமும் தான். அம்மாவுக்கு உடன் பிறப்புகள் ஏழு பேர். அம்மா தான் அப்பு, ஆத்தைக்கு தலைப் பிள்ளை. "உனக்கேன் படிப்பை? சனியன், வீட்டிலை போய் அடுப்பை ஊதன்!" என, அம்மா ஐந்தாம் வகுப்பு படித்தபோது வல்லிபுர வாத்தியார் 'சேட்டிபிக்கட்' கொடுத்த ஒரு சில நாட்களில், அவளது மூன்றாவது தம்பி பிறந்தபோதாகத்தான் இருக்க வேண்டும், ஆத்தைக்கு உதவிக்காக அம்மா பள்ளிக்கூடம் போவதை நிறுத்திக் கொண்டாள். அதன் பிறகு பிறந்த அத்தனை தம்பிமாருமே அம்மாவைத்தான் தமது தாயென எண்ணிக் கொள்ளுமளவிற்கு, தன் உடன் பிறந்தவர்கள் நலனுக்காக அம்மா தன்னையே அர்ப்பணித்துக் கொண்டாள்.

அம்மாவுக்கு பூப்பெய்திய சில நாட்களுக்குள்ளேயே திருமணமும் நடைபெற்றது. திருமணம் என்றால் ரோகினி நட்சத்திரமும் அமிர்த யோகமும், கன்னி லக்கினமும் கூடிய சுப வேளையில், கெட்டி மேளம் கொட்ட 'மாங்கல்யம் தந்துனானே' என்று ஐயர் சொல்ல, தங்கத் தாலியெல்லாம் கட்டி டாம்பீகமாக அல்ல! அம்மாவுக்குத் தூரத்து உறவில் மச்சான் முறையில் உள்ள ஒருவரை ஒரு நல்ல நாளாகப் பார்த்து அழைத்து வந்து அன்றைய மைமல்ப் பொழுதில் சோறு குடுப்பித்து, மிக எளிமையான சடங்காகத் தான் திருமணம் ஒப்பேறியது. இரண்டு பரப்புக் காணியிலமைந்த ஓரறை வீட்டில் தனிக்குடித்தனமாக அம்மாவின் இல்வாழ்க்கை ஆரம்பமானது.

பிரமன் அம்மாவின் தலை விதியை நிர்ணயித்தது பெரும்பாலும் மஞ்சள் கயிறு கழுத்தில் ஏறியதன் பின்பாகத்தான் இருக்க வேண்டும். அம்மாவுக்கு வாய்த்த கணவன் 'இனிஷலுக்கு' மட்டுமே அந்த ஸ்தானத்தில் இருந்தானே தவிர, குடும்பப் பாரத்தை அம்மாவே சுமக்க வேண்டி இருந்தது. தனக்கு வாயத்தவன் தன் உழைப்பை எல்லாம் உறிஞ்சி ஆதாரமாக இருந்த சொத்துக்களிலும் கைவைத்து ஊதாரியான போதும் அம்மா தன் கணவனைச் சினக்கவில்லை. இறுதியில், இருக்கும் இரு பரப்புக் காணியும் ஈட்டில் போகும் நிலை ஏற்படுமோ என்ற பயம் வந்த போது தான் எதிர்காலம் பற்றி கணவனுக்கு எடுத்துரைக்க அம்மா ஆரம்பித்தாள்.

www.padippakam.com



மனைவியிடமிருந்து புத்திமதிகளைத் தவிர இனி ஒரு சதக் காசுமே கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட பின்பு ஒரு மாரிக்கால காலைப் பொழுதிலிருந்து, அம்மாவின் கணவன் காணாமல் போய்விட்டான். 'இவர் இறுதியாகக் காணப்பட்ட போது நீல நிற 'பற்றிக்' சாரமும், வெள்ளை நிற 'சேட்டும்' அணிந்திருக்கக் காணப்பட்டார். அத்துடன் சவரஞ் செய்யப்படாத முகத்துடன் காட்சியளித்தார். இவரைக் கண்டவர்கள் தயவு செய்து அருகிலுள்ள காவல் நிலையத்துக்கு தகவல் தரவும்,' என அம்மா பெரிதாக எதுவும் விளம்பரப்படுத்த விரும்பவில்லை.

கணவனின் இழப்பால் ஒன்றும் கதிகலங்கிப் போய்விடவுமில்லை. ஆனால், கணவனின் போக்காலும் பாராமுகத்தாலும் பத்தாண்டுகளாக உறவுகள் விடுபட்டு, வேறுபட்டிருந்த தன் உடன் பிறப்புகள் மீண்டும் தன்னை நாடி வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றமாய்ப் போனது தான் அம்மாவுக்கு கவலை அளித்தது.

அருகிலிருக்கும் பல்கலைக்கழக மாணவர் சிலருக்கு உணவு சமைத்துக் கொடுத்து, அதில் வரும் சொற்ப இலாபத்தில் அம்மாவின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக மாறி மாறி வரும் பல்கலைக்கழக மாணவர்களே அம்மாவுக்கு பிள்ளைகள், குடும்பம், உலகம் எல்லாமே. சாப்பிடவரும் ஒவ்வொரு மாணவனும் சாப்பாட்டு விடயமாக அம்மாவிடம் உரிமையாகப் போர்க்கொடி தூக்கும் வேளைகளில் தனக்குப் பிள்ளைகள் இல்லையே என்ற குறை அம்மாவுக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

தன் பின் பிறந்த எழுவரில் அறுவர் கனடா, சுவிஸ் என ஒருவர் பின் ஒருவராக கப்பலேறி விட்டதாகவும், கடைக்குட்டி கனகன் மட்டும் மருத்துவக்கல்லூரியில் 'டொக்டருக்குப்' படிப்பதாகவும் அம்மாவின் காதுகளுக்கு அவ்வப்போது செய்திகள் வந்துகொண்டிருந்தன. 'எங்கை யிருந்தாலும் என்ரை பிள்ளையள் நல்லா இருந்தால் அது ஒண்டே போதும்' எனச் செய்தியாளர்கள் மத்தியில் அம்மா 'கருத்துத்' தெரிவிப்பாள். ஆனாலும், இத்தனை நீண்ட காலங்களாகத் தன்

www.padippakam.com



தம்பிமார் தன்னுடன் தொடர்பின்றி அந்நியப்பட்டுப் போவதற்கு அவர்களுக்கு தான் என்ன குறை வைத்ததாக அம்மாவின் மனம் உள்ளூரக் கலங்காமல் இல்லை. 'அந்தாள் அமர் கொண்டு திரிஞ்சதுக்கு நான் என்ன செய்ய? அந்தாளிலை உள்ள வெறுப்பை ஏனிதுகள் என்னிலை காட்டுதுகள்?'

அம்மாவுக்கு இப்போது வயது ஐம்பத்தைந்தை நெருங்குகிறது. ஆனால், தன்பெரும்பாலான காலத்தை வேதனையிலும், விரக்தியிலும் கழித்ததில் பார்ப்பதற்கு அம்மா எழுபது வயதைத் தாண்டியவரைப் போலவே காட்சியளித்தாள். கடந்த சில மாதங்களாக அம்மாவுக்கு எதுவுமே முடியவில்லை. சாப்பிட வந்த மாணவர்களும் அம்மாவுக்கு இனி இயலாது என முத்திரை குத்தி விட்டுத் தமது உணவிற்கு வேறிடம் பார்த்து விட்டார்கள். சதா அடுப்பு வெக்கைக்குள் இருந்து வேகி பலபேருக்கு அவித்துப் போட்ட அம்மா படுக்கையில் வீழ்ந்த போது பக்கத்திலிருந்து ஒரு வெந்நீர் தானும் வழங்க எவருமே இல்லை. நிலைமை மேலும் மோசமடையவே 'ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குக் காட்டிப் பாப்பம்' என்ற அங்கலாய்ப்பில் தான் இன்று காலையிலேயே கிளம்பியிருந்தாள் அம்மா.

நோயால் உடல் மிகவும் பலவீனப்பட்டுப் போனதாலும், கடந்த நான்கைந்து தினங்களாக எதுவுமே உட்கொள்ளாததாலும் தான் அம்மாவுக்கு இப்படி நடக்கவே முடியாத நிலை ஏற்பட்டது. மதகில் இருந்த அம்மாவிற்கு இப்போது படிப்படியாக நினைவுகளும் மங்கிக்கொண்டு வந்தன.

**மீ**ண்டும் அம்மாவுக்கு நினைவு திரும்பிய போது கைகள் இரண்டும் வலியெடுப்பது போன்ற ஓர் உணர்வு. ஏதோ ஒரு சூழலில் பஞ்சணையில் படுத்திருப்பதைப் போன்ற பிரமை. கண்களை மெல்ல திறந்து பார்த்தாள். முதல் தெரிந்த திரைமறைவே, இருக்கும் சூழலை படம் பிடித்தது. 'உதயனோ', 'ஈழநாடோ' ஏதோ ஒரு பத்திரிகையில் தன்னை மெய்மறந்திருந்து விட்டு தற்செயலாகத் திரும்பிப் பார்த்த போது, அம்மா விழித்திருப்பதைக் கண்டு விட்ட தாதி ஒருத்தி, அம்மா

www.padippakam.com



அருகில் ஓடி வந்தாள். கிட்ட வந்தவள், அம்மாவின் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு, பயிற்சி பெறும் தாதியாக இருக்கலாம் சாதாரண உடையில் இருக்கும் இன்னொரு தாதியைக் கூப்பிட்டு கூறிக் கொள்வதும் அம்மாவால் கேட்க முடிகிறது. "இந்தப் 'பேசன்ரைக்' கவனமாப் பாத்துக் கொள்ளும். இவ 'டொக்டருக்கு' மிக வேண்டியவ. நான் ஓடிப்போய் டொக்டரைக் கூட்டிக்கொண்டு வாறன்."

அம்மாவுக்கு எல்லாமே புதிராக இருந்தது. மெல்ல அண்ணாந்து பார்த்தாள். ஒரு பக்கத்தில் இரத்தமும், மறுபக்கத்தில் 'குளுக்கோசுமாக' உடலிற்குள் ஏறிக் கொண்டிருந்தன. கைகள் வலியெடுப்பதற்கான காரணம் புரிந்தது. வெளியே சென்ற தாதி உள் நுழைவது தெரிந்தது. இவள் மிக அண்மையில் தனது தனிப்பட்ட தேவை ஒன்றிற்காக 'டொக்டரின்' சிபாரிசை எதிர்பார்த்து நிற்பவளாக இருக்க வேண்டும். நினைவு திரும்பிய அம்மாவின் வியப்பு அவளுக்கும் புரிந்தது. அருகில் வந்து கூறுகிறாள். "நீங்கள் மதகடியில் மயங்கி விழுந்து கிடந்தீங்களாம். காவல்துறைப் பொடியன்கள் தான் தங்கடை 'பிக்கப்பிலை' உங்களை 'ஓ.பீ.டிக்கு' கொண்டு வந்திச்சினம். அப்ப 'ஓ.பீ.டி'யிலையிருந்த 'டொக்டருக்கு' நீங்கள் தெரிஞ்சனிங்களாம். மிக்க வேண்டியவராம். அவரே முன்னுக்கு நிண்டு உங்களுக்கு வேண்டியதெல்லாத்தையும் செய்தார். போதாததுக்கு இப்ப உங்களுக்கு ஏத்தியிருக்கிற இரத்தம் கூட 'டொக்டர்'தான் தன்ரை உடம்பிலை இருந்து கொடுத்தார். இவ்வளவு நேரமா இங்கையே இருந்திட்டு இப்ப தான் சாப்பிட்டுட்டு வாறனெண்டு போனார்."

அம்மா சமைத்துக் கொடுக்கும் காலங்களில் சமையல் முடியுமுன்பே மாணவர்கள் சாப்பாட்டிற்கு வந்துவிட்டால் நேரத்தைப் போக்காட்டுவதற்காக முற்றத்திலிருந்தவாறே தாம் முதல் நாள் இரவு 'செக்கண்ட் ஷோ' பார்த்த எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசனது திரைப்படங் களைப் பற்றி விவாதிப்பார்கள். நடைமுறைக்கு முரணான சம்பவங் களையே தமிழ்த் திரைப்படங்களில் காட்டுகிறார்கள் எனக் கூறிக் குறைப்பட்டுக் கொள்வார்கள். ஆனால், தனக்கு இப்போது நிகழ்ந்ததைப் பார்த்தால் வாழ்க்கையின் நடைமுறைகளைத்தான் சினிமா நாடகங்களிலும் சித்திரிக்கின்றார்கள் என ஒரு வேளை அவர்கள் ஒப்புக்கொள்வார்களோ என்னவோ? என அம்மா நினைத்துக் கொண்டாள்.

www.padippakam.com



எது எப்படியாயினும் அம்மாவின் வியப்பெல்லாம் எனக்கு இப்படி தன் உதிரத்தைக் கொடுத்து 'பெத்த பிள்ளை போல் உதவிற அந்த 'டொக்டர்' யார்? அம்மாவின் கண்கள் 'டொக்டரின்' வரவை நோக்கி அகல விரிந்துகொண்டிருந்தன.

பத்து நிமிடங்கள்கூடக் கடந்திருக்காது.'டொக்டர்' மிக வேகமாக வருவதை அம்மாவால் உணர முடிகிறது. அம்மாவுக்கு அருகில் வந்து கட்டிலில் ஊன்றியவாறே 'டொக்டர்' கேட்டார் "அம்மா எப்பிடி இருக்கு?" அம்மாவால் எதையுமே கதைக்க முடியவில்லை. சொற் களைக் கூட்டிப்பார்த்தாள். நாக்கு நகர மறுத்தது.

"அம்மா, என்னை உங்களுக்குத் தெரியேல்லையா? வடிவா உற்றுப்பாருங்கோ!" அம்மா 'டொக்டரின்' கண்களை உற்றுப் பார்த்தாள். எங்கேயோ மிக அறிமுகமான கண்கள். நித்தமும் பழகியதைப் போன்ற உணர்வு. ஆனால், இன்னாரென்று மட்டுக்கட்ட முடியவில்லை. 'டொக்டர்' தொடர்ந்தார். "அம்மா, பத்து வருஷத்துக்கு முந்தி 'யூனிவசிட்டியிலை' நான் படிக்கைக்குள்ளை உங்களட்டைத்தான் சாப்பிட்டனான். ஒரு நாள், இரண்டு நாளில்லை. ஐஞ்சு வருஷங்கள் உங்களின்ரை கையாலை சாப்பிட்டுத் தான் நான் படிச்சன், டொக்டரானன். கிட்டடியிலை தான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தன். அப்ப நான் முதலிலை உங்களைப் பற்றித் தான் விசாரிச்சன். அப்ப தான் இப்ப நீங்கள் சமைச்சுக் கொடுக்கிறதில்லை எண்டும், சுகமில்லாமல் இருக்கிறியளெண்டும் அறிஞ்சன். உங்களைப் பார்க்க வரவேணும் எண்டு இருக்கைக் குள்ளைதான் காலமை நீங்கள் மயக்கமா வீதியிலை விழுந்து கிடந்ததாக ஓபீடீக்கு கொண்டு வந்திச்சினம்."

அம்மா 'ஏதோ' சொல்ல விரும்பியவளாக மீண்டும் ஒருமுறை கதைக்க முயற்சித்தாள். "அம்மா, நீங்கள் இந்த நேரத்திலை எதுவும் கதைக்கக் கூடாது. உங்களோடை எவரும் கனக்கக் கதைக்கவும் கூடாது. உங்களுக்கு ஓய்வு தேவை. நீங்கள் சுகப்பட்டதும் இனி எங்கேயும் போய் தனியாகக் கஷ்ரப்படத் தேவையில்லை. என்ரை 'குவாட்டேசுக்கே' வாங்கோ. கடைசி வரையில இனி உங்களைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை, அம்மா. நான் செய்த

www.padippakam.com



புண்ணியமோ என்னவோ உங்களுக்குத் தேவையான 'குறூப்' இரத்தம் என்ரை உடம்பிலை ஓடினது."

அம்மாவின் இதயத்துடிப்பை 'டொக்டர்' பரீட்சித்துக் கொண்டிருந்தார். இதுவரை ஆயிரம் பேர் அம்மாவை 'அம்மா' என அழைத்திருக்கலாம். ஆனால், இன்று இந்த டொக்டர் 'அம்மா' 'அம்மா' என தன்னை அழைப்பதே அர்த்தமுள்ளதாக அம்மாவுக்குப் பட்டது.

இதயத்தை பரிசோதித்த 'டொக்டர்' இப்போது அம்மாவின் கண்களுக்கு தன் கைகளைக் கொண்டு செல்கிறார். கண்களைச் சோதிப்பதற்காக அல்ல, தலையணையை நனைத்துக் கொண்டிருக்கும் அம்மாவின் கண்ணீரைத் துடைப்பதற்காக.

போத்தலில் இருந்த 'டொக்டரின்' இரத்தம் துளித்துளியாக அம்மாவின் உடலில் ஏறிக்கொண்டிருந்தது.

**(வீரகேசரி வாரவெளியீடு : 1992)**

www.padippakam.com

# ஒரு பக்கத் தாளம்

அவள் சிரிக்கிறாள். என்னைப் பார்த்துத்தான். தன் தோழிக்கு 'எதையோ' கூறிவிட்டு நிமிர்ந்து என்னைப் பார்க்கின்றாளே! அண்ணலும் நோக்க. . .அவளும் . . . நோக்க . . . வகுப்பில் பாடம் நடக்கிறது. யாருக்கு அந்தக் கவலை?

அவள் அழகி! அழகி என்றால். . .உந்த ஐஸ்வர்யா ராய், மனிஷா கொய்ராலா எல்லோரும் எந்த மூலைக்கு? நல்ல உயரம், கட்டுடல், சுருள் கேசம். . .அந்தி வெய்யிலை மிஞ்சும் மஞ்சள் நிறம். எனக்கு நல்லா 'மச்' பண்ணுவாளாம். நண்பன் சீலனின் அபிப்பிராயம் இது. ஆனால், இவளா அழகி என்பான் நண்பன் ரஞ்சித். எப்போதுமே என்னை அழாக்குறையாகப் பார்க்கும் அலாதிப் பிரியம் அவனுக்கு.

எல்லாம் சரி. அவள் என்னை 'லவ்' பண்ணுகிறாளா?–இது தான் இப்போ எனக்குள்ள 'தீராத' பிரச்சினை.

அவளை நோக்குகிறேன். எங்கெல்லாமோ சுழன்றடித்து விட்டு அவளின் 'சிலுக்கு' விழிகளும் என் விழிகளுடன் மோதின. ஆ! அவளின் அந்த விழிகளுக்குத்தான் எத்தனை சக்தி?–அவ்வளவுதான். அவள் குனிந்து விட்டாள். காதலனைக் கண்டதும் கால் பார்க்கும் கண்ணகி பரம்பரையைச் சேர்ந்தவளோ?

இந்த 23 வயதிலேயே......தவத்தான், நெட்டைரவி, சடையப்பர், சிங்கன், முத்துலிங்கன், மூத்தண்ணன், போன்ற என்னுடைய 'கிளிக்'

www.padippakam.com



நண்பர்கள் எல்லாருக்குமே 'கேள் பிரண்ட்.' எனக்கு மட்டும் 'கேள் பிரண்ட்' இல்லாததை......'சாட்டெட் எக்கவுண்டன்ஸ்ஸி' படிக்க வந்த என்னைக்கூட ஏதோ 'குவாலிவிக்கேஷன்' குறைந்ததைப் போலக் கருதி பல விடயங்களிலும் அவர்கள் என்னைப் புறக்கணித்த நாட்கள் எத்தனை? இந்த 'லவ்' மட்டும் 'சக்சஸ்' ஆனா, நண்பர்கள் மத்தியில் நானும் ஒருவனாக......

பாடங்கள் நடக்குந் தோறும் பாவை அவள் என்னைப் பார்த்துப் புன்னகைப்பது 'ஏதோ' உண்மைதான். அந்தப் புன்னகை ஒன்றை மட்டுமே வைத்துப் பெண்ணவள் என்னைக் காதலிக்கிறாள் என்று எப்படி?

"எனி டவுட்ஸ்?" – வகுப்பு முடிவதற்கு அறிகுறியாக 'லெக்ஷரர்' இறுதியாக வினவுகிறார்...யாரிற்குப் பாடத்தில் சந்தேகம்? இருநூறு பேர் நிரம்பியிருந்த அந்தக் கட்டிடம் 'மாக்கெட்' போலாகிறது. பாதிப்பேரும் 'கேற்'றைத் தாண்டி விட்டனர். எப்போது இந்த 'அலுப்பு' முடியும் என்ற எதிர்பார்ப்பில்.' இறுதியாக... 'லெக்ஷரர்' படி இறங்குகிறார்.

'ஃபைலை' மூடிக்கொண்டு மெல்ல......மெல்ல.....நானும் எழும்பு கிறேன். அருகே ரஞ்சித். என்னவளும், தோழியும் முன்னேறுகின்றனர்.

காதல்-அது புனிதமானது. தெய்வீகமானதுங்கூட. காலத்தால் அழியாத அது இன்று கடற்கரை தாழம் பற்றைகளிலும், விகாரமாதேவி பூங்காவிலும்.... இருள் சூழ்ந்த பேருந்து நிலையங்களிலும், ஏன் சில சமயங்களில் வகுப்பறைகளிலுங் கூட படும் பாடு, அப்பாடா....

"சந்தர்ப்பவசத்தால் இருதூய உள்ளங்களின் அன்பின் இணைவே காதல். எதிலும் அனுபவம் வேண்டும் என்பதற்காக காதலிலும் அதுதேவை என்று எண்ணிச் சந்திக்கும் பெண்களுடன் தவறாகப் பழகாதே!" –படிக்கவென கொழும்பு வந்த போது பருத்தித்துறை 'பஸ் ஸ்ராண்டில்' வைத்து எனக்குத் தந்தையார் தந்த 'அட்வைஸ்' இது!

இப்போதெல்லாம்....படிக்கவென நான் மேசையில் அமர்ந்தால், அவளையே பாடப் புத்தகத்தில் காண்பதுண்டு. சட்டப் புத்தகம்

www.padippakam.com



கையில் புரள்கையில், அவள் அணிந்த சட்டை நினைவிற்கு வந்து தொலைப்பதும்,. . .கணக்கியலைப் பார்த்தால், அவளைக் காண உள்ள நேரத்தை மணிக்கணக்கில் எண்ணிப் பார்ப்பதும் சகஜமாகிவிட்டது.

மொத்தத்தில் இப்போது. . . நான் நானாக இல்லை.

“நீ முந்தின மாதிரி நல்லா நடந்தால் . . . இப்ப அந்த பஸ்ஸிலை நாங்கள் போயிருந்திருக்கலாம்.” ஸ்ராண்டில் நின்ற பஸ்ஸைக்கண்டு பாதிப்பேரும் பறக்கும் போது, ஏக்கத்தோடு ரஞ்சித் சொன்னான்.

இந்த் ‘விபத்து’ மட்டும் நடக்கா விட்டால் நான்கூட நன்றாகத்தான் நடந்திருப்பேன். காதல் என்பதும் ஒரு விபத்துத் தான். ஆனானப்பட்ட விசுவாமித்திர முனிவரே மேனகை முன் ‘கிளீன் போல்ட்’ ஆகவில்லையா?

‘ஸ்ராண்டில்’ நின்ற ‘பஸ்’ஸைக் கண்டு எல்லோரும் ஓடினாலும் என்னவள் மட்டும்......ஓடவேயில்லை.

என்னால் தான் ஓடமுடியாதே.

“என்னை விட்டு ஓடிப்போக முடியுமா? இனி முடியுமா?” தேநீர்க் கடையொன்றில் இருந்து சீர்காழி கோவிந்தராஜன் பெருங்குரல் எழுப்பிக்கொண்டிருந்தார். ‘ஸ்ராண்ட்’ நெருங்கிவிட்டது.

எங்கள் ‘றூட்டில்’.....அவள்! அருகே தோழி. நான். . .பக்கத்தில் ரஞ்சித்.

அவளுடன் மனம்விட்டுக் கதைக்க என் மனம் ஆசை கொள்கிறது. நானாக முதலில் கதைப்பது அவ்வளவு அழகல்ல. ஆனால்......ஆண்கள் தான் முதலில் ஆரம்பிக்க வேண்டுமாம், சீலன் அடித்துச் சொல்வான்.

‘பற்றிக் சேட்’டும், பவுடர் பூச்சுமாக திரியும் ‘மொட்’ வாலிபர் பலர் இருக்க........‘வைற் அன்ட் வைற்றில்’ வரும் என்னை இவள் காதலிக்கின்றாள் என்றால்?

www.padippakam.com



சிவபூசையில் இசைக்கப்படும் கரடி வாத்தியம் போல.... எங்களருகில் இன்னொருவன். 'கிளாஸ் மேற்'. வந்தவன் சும்மா நிற்கக்கூடாது? அவ்வை சண்முகிக்குப் பிறகு கமலஹாசன் என்ன வேடம் ஏற்கக்கூடும் என்பது பற்றி 'சீரியஸாக' ஆராய்ந்து கொண்டிருந்தான். ஒரே 'அறுவை'!

தேநீர்க் கடையில் பாடல் மாறுகிறது. சீர்காழிக்குச் சளைத்தவரல்ல தான் என ரி.எம்.எஸ் நிரூபித்துக்கொண்டிருந்தார்.

'யார் அந்த நிலவு '–வந்தவன் வினவினான், என்னவளை கண் ஜாடை காட்டி. போச்சடா!–எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"நம்ம ஊர் தான்"– அர்த்தச் சிரிப்போடு அவன். இவனேன் என்னவள் மீது இப்படி சிரத்தை எடுக்கிறான்? ஒருவேளை நான் 'சுழட்டுவது' பற்றி ஏதாலும் தெரிஞ்சு வைச்சிருப்பானோ?–என்னுள் பயம் பற்றிக் கொள்கிறது. இவனை எப்படியாவது 'காய் வெட்ட' வேண்டும்.

அவள். . .இப்போதும் என்னையே நோக்குகிறாள். கள்ளமாக அவளது அழகை அள்ளிப் பருகுகிறேன் நான். . . 'சாய். நான் மட்டும் கண்ணதாசனாகப் பிறந்திருந்தால் அவளையே கவியாக்கியிருப்பேன்.'

கற்பனையில் மிதக்கிறேன் நான், கதாசிரியர்களைப் போல.

துணிந்து சென்று என் காதலியிடம் நேராக விடயத்தைக் கூறுகிறேன். நாணம் மேலிட அவள் கைகளால் முகத்தை மூடிக் கொள்ளவே.... 'கள்ள்ளீ!'–ஆசை மீதியால் நான் கடிந்து கொள்கிறேன்.

எனக்கும் இப்படி ஒரு அழகான காதலி?......எனக்கும் இவளிற்கும்.....

"றிஜிஷ்டேஷன் முடிஞ்சுது. ஆவ்ர த எக்சாம் வெடிங்–"

www.padippakam.com



"என்ன?..."

அவன் தான் தொடர்கிறான். "உந்தக் 'கேளை'ப் பற்றித்தான் சொன்னனான்! மாப்பிளை 'என்ஜினியர்.'"

சொல்லிக் கொண்டிருந்தவன் என் விழித்திரையில் தலைகீழாக விழுந்து கொண்டிருந்தான். அருகில் நின்ற ரஞ்சித்தை மேலும் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன்.

தேநீர்க் கடை வானொலியில் மரண அறிவித்தல் போய்க்கொண்டிருந்தது. 'இத்தகவலை உற்றார், உறவினர் சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.'

தூரத்தே ஒரு 'பஸ்' ஆறுதலாக வருகிறது!

அவள்... 'பஸ்'ஸில் ஏறுகின்றாள். மெல்ல... மெல்ல நானும் ஏறுகிறேன்......எனக்கு ரஞ்சித் பக்கத்துணை.

நிலக் கண்ணிவெடி விபத்தில் இழந்துபோன என் வலது காலிற்குப் பதிலாகப் பொருத்தப்பட்ட பொருத்துக் காலை முன்வைத்து நானும்... ஏறுகிறேன். இப்போது.... அவளை நோக்குகிறேன்.

அவள் சிரிக்கிறாள். என்னைப் பார்த்துத்தான்.. தன் தோழிக்கு எதையோ கூறிவிட்டு நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாளே! இப்போது .... அவளது பார்வையில் காந்தம் தெரியவில்லை. வெறும் கிறுக்குகளே தெரிந்தன.

(மெதபெரதிக)

///

www.padippakam.com

# விடியட்டும் பார்ப்போம். . . . . !

"என்ன கதைஞரே! நீண்ட நாட்களாகத் தங்களது சிருஷ்டிகள் எதையுமே பத்திரிகைகளில் காணோமே? கற்பனை வரண்டு விட்டதா? அல்லது வசனங்களுக்குப் பஞ்சமேற்பட்டு விட்டதா?" எனக் கேட்டு லண்டனிலிருந்து இவனது கல்லூரி நண்பன் 'தவத்தான்' அண்மையில் இவனுக்குக் கடிதம் ஒன்று எழுதியிருந்தான்.

"தங்களைப் போல், எண்பத்து மூன்று ஆடிக்கலவரம் முடிந்த கையோடு 'அகதி' அந்தஸ்து பெற்று சீமை சென்றிருந்தால், சூழ்நிலை இடர்கள், இடையூறுகள் ஏதுமின்றி பாதுகாப்பாக, நிம்மதியாக இருந்து சிறுகதைகள் என்ன தொடர்கதைகளையே நான் படைத்திருப்பேன்." என ஆரம்பித்து 'தவத்தான்' பாணியிலேயே பதில் எழுத இவன் நினைத்திருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

சதா அச்சத்துடனும், ஏக்கத்துடனும், நிம்மதியின்றி. ஆளடையாள அட்டையையே ஆத்மாவாக்கி நெருக்கு வாரங்களுடன் விரக்தி நிலையில் வாழ்ந்து கொண்டு எழுதுவதற்காகப் பேனா பிடிப்பதென்பது முடிகிற காரியமா? இது எத்தனையோ கிலோமீட்டர்களுக்கு அப்பால் அந்நியப்பட்டிருக்கும் தவத்தானுக்குப் புரியாததில் வியப்புற ஏதுமில்லை.

1990ம் ஆண்டு ஆனி மாதத்திற்குப் பிறகு இவனால் உருப்படியாக எதையும் எழுதவே முடியவில்லை. அந்தளவிற்கு இவனது மனம்

www.padippakam.com



ஆடிப்போய் விட்டது. கதைகள் எழுத எனத் தாள்களை எடுத்து பிள்ளையார் சுழி போட முன்பே வானொலியிலிருந்தோ, அல்லது வேறு 'மீடியா' வாயிலாகவோ வந்து சூழும் செய்திகள் கற்பனையை மழுங்கடித்துவிடும். போராட்ட தேசத்திலிருக்கும் மனைவி, பிள்ளைகள் பற்றிய சிந்தனை மூளையைச் சூழ்ந்து கொண்டு குழப்பும்.

''நாட்டிலே நடைபெறும் சம்பவங்கள், மனதுக்கு இதமானதாக இல்லாதிருப்பதும், விடியலைத் தேடும்போது தூர ஒரு விடிவெள்ளிதானும் புலப்படாத போதும் எப்படி ஒரு கதைஞனால் ஆரோக்கியமான பிரசவங்களைப் பிரசவிக்க முடியும்?'' என தவத்தானுக்குப் பதில் எழுத வேண்டுமென இவன் நினைத்தாலும், பதிலுக்கு அதிரடியான கதையொன்றை எழுதி தவத்தானை அசத்தினால் என்ன? என்று இவனது மனம் அங்கலாய்க்காமலும் இல்லை.

'அறுபதுகளில் புரையோடிப் போயிருந்த பிரச்சினைகளையே இன்னமும் எழுதிக் கொண்டிருக்கிறீர்களே? ஏன் சமகாலங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் எரியும் சம்பவங்களை உங்கள் படைப்புகளில் படம் பிடித்தால் என்ன?' என எண்பதுகளின் பிற்பகுதியில் வெளியான இவனது கதை ஒன்றைப் படித்துவிட்டு வாசகர் ஒருவர் அதே பத்திரிகையில் கேள்விக்கணை தொடுத்த பின், இனி எழுதும் போது சமகாலத்தை ஒட்டியே எழுத வேண்டுமென இவன் சிந்தித்துக் கொண்டான்.

அப்படியாயின் கதையில் எப்படிச் சமகாலத்தைப் பிரதிபலிப்பது? அரசியல்வாதிகளைப் போல வெறுமனே பிரச்சினைகளைச் சொல்லிவிட்டு, தீர்வுகள் எதையுமே முன் வைக்காது நழுவி விடலாமா? 'பார்வையாளனாக இல்லாது பங்காளனாகவும் இருப்பதே ஒரு கதைஞனின் கடமை', என எங்கேயோ வாசித்ததாக இவனுக்கு நினைவு. ஆனால், இவன்பாட்டிற்கு பங்களிப்பிற்காக எதையாவது எழுதிப் பின்னர் அது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாகி விட்டால்? நானூறு கிலோ மீட்டர்களுக்கு அப்பாலிருக்கும் தன் இரு மழலைகளினதும் ஞாபகம் வரவே 'ஏன் வீண் வம்பு?' என அந்த எண்ணத்தினையும் கைவிட்டு விட்டான்.

www.padippakam.com



சரி போகட்டும், காதல் கதை ஒன்று எழுதலாமா? "என்ன சார் அந்த நாள் தொட்டு இந்தநாள் வரையில் இந்தக்கதாசிரியர்களுக்கு காதல் தேசத்தைத் தவிர வேறு எந்த தேசமுமே கண்களில் தெரிவதில்லையா?" என யாராவது விமர்சகர்கள் கேட்டு விட்டால்? அதுவும் புத்தகம் போட்டு, அறிமுக விழாக்கள் எல்லாம் வைத்துப் பிரபலமும் பெற்று விட்ட பின்பு இவையெல்லாம் தேவைதானோ?

"மச்சான்! இண்டைக்கு எப்பிடியாவது ஒரு கதை எழுதவேணும். 'பிளீஸ்' என்னைக் குழப்பாதை!" அறைக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக கட்டிலில் படுத்திருந்த 'றூம்மேற்' ரஞ்சித்திற்கு இவன் சொன்னான்.

"நீ பாட்டுக்கு எதையாவது கிறுக்கிப் போட்டுக் கொண்டு போய் பேப்பருக்கு குடுக்க அதைப் பார்த்துப்போட்டு 'எடிற்றர்' கதையிலை கனதி இல்லை எண்டு சொல்லிப் போட்டார் எண்டால் 'நோண்டியாப்' போயிடும். அதனாலை வேலோன், கதை எழுதும் போதே 'பைல் கவர்' மாதிரி ஏதாவது கனத்த தாளிலை எழுத ஆரம்பி. அப்பத்தான் கதை நல்ல கனதியாக இருக்கும். உனக்குத்தானே நீ வேலைசெய்யிற அச்சகத்திலையே வேண்டிய மாதிரியாக் கனதியான 'பேப்பர்கள்' எல்லாம் எடுக்கலாம்."– சட்டெனக் கட்டிலை விட்டெழுந்து துவாயை எடுத்துக் கொண்டு 'பாத்ரூமை' நோக்கிச் சென்றவாறே ரஞ்சித் சொன்னான்.

ரஞ்சித் எப்போதுமே இப்படித்தான். "தங்கள் பிரசவம் தாங்கள் எழுத ஆரம்பித்த எண்பதுகளின் ஆரம்பத்தினைப் போல் ஆரோக்கியமானதாக இல்லையே?" என வாசகி எவராவது இவனுக்கு எழுதிய கடிதம் ரஞ்சித்தின் கண்களில் பட்டுவிட்டால் போதும், "உங்கள் பிரசவம் ஆரோக்கியமானதாக அமைய வேண்டுமென்றால் கருவுற்றிருக்கும் போது சத்துணவு அருந்துங்கள். அல்லது அருகில் உள்ள வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள்." – என வானொலியில் ஒலிபரப்பாகும் 'வைத்தியரைக் கேளுங்கள்' நிகழ்ச்சி பாணியில் குரல் தருவான்.

www.padippakam.com



அவன் கிடக்கட்டும். இப்போ... கதைக்கென்ன கருவைத் தேர்ந்தெடுக்கலாம்? ஓ! இளம் தம்பதிகள் வடக்கிலுந் தெற்கிலுமாகப் பிரிந்திருப்பதால் ஏற்படும் பாலியல் பிரச்சினை பற்றி பிய்த்து உதறலாமா? "என்ன மச்சான் வழமைபோல இதுவும் உன்ரை வரலாறோ?" எனக் கதையைப் படித்து விட்டு ரஞ்சித் கேட்டு விட்டானென்றால் ..... "ஓம்! என்ரை வரலாறு மட்டுமல்ல. என்னை ஒத்த மத்திய தர வகுப்பு இளைஞர்களின் சமகால வரலாறு" என வேண்டுமென்றால் ரஞ்சித்திற்குச் சொல்லித் தப்பி விடலாம். ஆனால், கதை இவனது மனைவி சாந்திக்கும் எட்டி "என்னப்பா கண்றாவிக் கதை இது?" என அவள் கேட்டு விட்டாள் என்றால்......ஏற்கனவே நெரிசல் பஸ்சில் சுகம் காணும் இளைஞனது கதையையும் 'புளுபிலிம்' பார்க்கப்போன பையனது கதையையும் எழுதப் போய், "என்ன இவை எல்லாம் தங்களோடை அனுபவங்களோ?" என சாந்தியிடம் முறையாக வாங்கிக் கட்டிக் கொண்டது நினைவிற்கு வரவே.....

"இந்த முறை ஆரைப்பற்றி வேலோன் கதை எழுதப் போறாய்?" உடலைத் துவாயினால் உலர்த்தியவாறே ரஞ்சித் உள்ளே நுழைந்தான்.

"உன்ரை கதையைப் பார்த்தால் நான் என்னவோ ஊரா வீட்டுக் கதையளைத்தான் எழுதிவாறன் எண்டமாதிரியெல்லோ இருக்கு?"

"பின்னை என்ன மச்சான்? அந்தநாள் முதல் கொண்டு இந்தநாள் வரைக்கும் உன்ரை கதையிலை வாற கதாநாயகிகளின் உண்மைப் பெயர்களை பட்டியல் போட்டுச் சொல்லட்டே?"

"ஓகே...! ஓகே...! சரி... இந்தமுறை நான் சொல்லப் போற கதை கொஞ்சம் வித்தியாசமானது."

"என்ன . . . அப்ப இது சரித்திர காலத்துக் கதையோ?"

"இல்லை ... சமகாலக் கதையைத்தான் நான் சரித்திரமாக்கப் போறன்."

www.padippakam.com



"கிழிஞ்சுது போ!.........ஆலாபரணங்கள் பண்ணி அறுக்காமல் கதையைச் சொல்லித் தொலை."

"அது ஒரு இளம் தம்பதி. கல்யாணம் செய்து மூன்றோ அல்லது நான்கோ வருசங்கள் தான். அவனுக்குக் கொழும்பிலை வேலை."

"மச்சான் அவன் எங்கை அச்சகத்திலைதானே வேலை?"

"சீரியஸா கதை சொல்லக்குள்ளை செந்திலை மாதிரி குறுக்காலை வராதை. ஆட்டுக் கிடாய் வாயா! அவன் கொழும்பிலை வேலை. பொருளாதாரக் கஷ்டத்தாலை அவனாலை கொழும்பிலை குடும்பத்தோடை இருக்க முடியாத நிலைமை. கடந்த வருடங்களில் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது குடும்பத்தைச் சென்று பார்த்து வருவான். ஆனால், தொண்ணூறாம் ஆண்டு ஆனிக்குப் பிறகு அவனாலை அப்படிச் சென்று வரமுடியாத இக்கட்டு. ஒரு வருச இடைவெளியின் பின் அவன் கடந்த கிறிஸ்மஸ்சிற்குத்தான் ஊர் சென்றான். அந்தத் தடவை அவன் பயணத்திலை பட்ட கஷ்டங்களையும், அவனைப் பிரிந்து தனியாக தான் மட்டும் அங்கிருப்பதையும் மனதிருத்தி அவனது மனைவி இப்படிக் கூறுகிறாள். 'இந்த நிலைமையிலை இப்பிடி நாங்கள் அங்கையும், இங்கையும் இருக்கிறதாலை என்ன நன்மை? பேசாமல் உந்தக் கண்டறியாத வேலையை 'றிசைன்' பண்ணிப் போட்டு வாங்கோ. வாழ்வோ, சாவோ ரண்டுபேரும் ஒண்டாகவே கடைசி மட்டும் இங்கையே இருப்பம்' எண்டு."

"பள்ளி அறை கொள்வதிலும், பரமனடி சேர்வதிலும், பக்கத் துணையிருப்போம்! எண்டதை உன்ரை கதாநாயகி தான் ஒழுங்கா விளங்கியிருக்கிறாள் போலை கிடக்கு."

"பரதேசி நாயே! இப்ப நான் என்ன வில்லுப்பாட்டோ நடத்துறன்.... பக்கப்பாட்டு பாடிக்கொண்டிருக்கிறாய்...., அதுபோக இப்ப, எதிலை விட்டனான்? ம்.....அவன் பிறகும் கொழும்புக்கு வேலைக்குத்

www.padippakam.com



திரும்புகிறான். ஊரிலை மனைவி சொன்னது இவனது மனதிலை மீண்டும் மீண்டும் ஒலிக்கிறது. அவனாலை தொடர்ந்தும் கொழும்பிலை இருக்க முடியவில்லை. ஒரு முடிவுக்கு வருகிறான். ஒருசில நாட்களில் வேலையை 'றிசைன்' பண்ணிவிட்டு ஒரேயடியாகவே ஊர் திரும்புகிறான். ஊர் சென்று அங்கு அவன் ஏதோ ஒரு சிறுவேலையில் சேர்ந்து கொள்கிறான்."

"என்ன வேலை மச்சான்? சைக்கிளிலை நாகர் கோவிலுக்கு வந்து விறகு கட்டிக் கொண்டு போற வேலையோ?"

"உனக்கெண்டால் அதுக்கும் லாயக்கில்லை....கதை சொல்லக்கை கதை குடுத்தால் இனி உதைதான் கண்டியோ? நாட்கள் நகர்கின்றன. ஒரு நாள் இரவு திடீரென்று அவனது வீட்டு முகட்டில் பலத்த சத்தத்துடன் 'ஷெல்' விழுந்து வெடிக்கிறது. விடிந்ததும் பார்க்கையில் அந்த இளம் தம்பதிகளும் இரண்டு குழந்தைகளும் இரத்த வெள்ளத்திலை பிணமாகக் கிடந்தனர்."

" நெஞ்சத்தைப் பிழிந்து விட்டீர்கள் எழுத்தாளரே! சபாஷ் முடிவாக .... இந்த சிருஷ்டி மூலம் தாங்கள் சமூகத்திற்குச் சொல்ல வந்த சேதிதான் என்ன?" –நக்கீரன் பாணியில் ரஞ்சித் வினவினான்.

"அதை உய்த்தறிகிற பொறுப்பை வாசகர் கையிலை விடப்போறன்."

"பை த வே...... உன்னுடைய கதையைக் கேட்ட பிறகுதான் எனக்கு ஞாபகமே வருகுது. இவன் எங்கடை நெட்டை ரவி நேற்றுத்தான் ஊரிலையிருந்து வந்தவனாம். இண்டைக்கு மத்தியானம் சாப்பிடப் போன இடத்திலை ஆமர் ஸ்றீற் சந்தியிலை வைச்சு ஆளைக் கண்டனான். எங்கடை பக்கமெல்லாம் சாமானுகளெல்லாம் தலைதெறிச்ச விலையாம். ஒரு கிலோ அரிசி ஐம்பது ரூபாவாம், ஒரு கிலோ மாவு நாற்பது ரூபாவாம், சீனி கிலோ அறுபதுக்கும் தட்டுப்பாடாம். மரக்கறி ஒவ்வொண்டும் காக்கிலோ இருபத்தைந்து ரூபாவாம். அத்தோடை எங்கடை பக்கத்திலை ஒரே 'ஷெல்' அடியாம்...." – தூரத்தில்

www.padippakam.com



எங்கோ வானொலியில் செய்தி சொல்வதற்கு முன்பாக ஒலிக்கும் வாத்திய இசை அமங்கல ஒலியாக இவன் செவிப்பறையில் வந்து விழுகிறது.

சொல்லியவற்றை முடித்து விட்டு ரஞ்சித் இவன் முகத்தைப் பார்க்கிறான். திறந்து வைத்திருந்த பேனாவை மூடி, தயாராக வைத்திருந்த வெற்றுத் தாள்கள் மேல் போட்டுவிட்டு, இவன் தன் கட்டிலில் சரிகிறான்.

"நாங்கள் இஞ்சை மூண்டு நேரமும் மூக்குமுட்ட விழுங்கிப் போட்டிருக்கிறம். அங்கை அதுகள் என்ன பாடோ தெரியேல்லை" தெளிவாகப் பிடிபடாத பீ. பீ. சி அலை வரிசையாக வார்த்தைகள் இழுபட்டன.

"ஓ..... ! அண்ணனுக்கு அண்ணி, பிள்ளைகளின்ரை ஞாபகம் வந்திட்டுது போலை." - அன்றைய நிகழ்வுகளை பதிவதற்காகத் தனது 'டயறி'யை கையிலெடுத்தவாறே ரஞ்சித் சொல்கிறான்.

"ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாகக் கழிச்சிப் போட்டு நாங்கள் 'டயறியி'லை அதைப் பதிஞ்சு வைக்கிறம். ஆனால் விடிஞ்ச பொழுதை எப்பிடிக் கழிக்கப்போறம் எண்டு அதுகள் அங்கை ஏங்கித் தவிக்குதுகள், முழுசுதுகள்."

"நல்ல 'மூட்'டிலை வந்த உன்னை தேவையில்லாத கதையளைச் சொல்லி நாசமாக்கிப் போட்டன். அதுசரி கதை எழுதவேணும் எண்டு அச்சகத்தாலை வந்த உடனை நாண்டு கொண்டு நிண்டாய் இப்ப என்ன ஒரேயடியாகவே சரிஞ்சிட்டாய்."

"மச்சான், கவியரசரே ஒரு இடத்திலை சொல்லியிருக்கிறார். அது இது சாய்ஞ்சு போனால் ஏதாவது ஒண்டாவது செய்யலாம். ஆனால் இந்த மனம் சாய்ஞ்சு போனால் என்ன செய்யலாம் எண்டு......எனக்கு

www.padippakam.com



இப்ப 'மூட்' இல்லையடாப்பா.... நீ உதை முடிச்சுப் போட்டு 'லைட்'டை ஒஃப் பண்ணிப் போட்டுப் படு. பிறகு, விடியட்டும் பார்ப்பம்....!"

மறுபக்கம் திரும்பி கட்டிலிலிருந்த 'ரேப் ரெக்கோடரை' 'ஓன்' பண்ணி விடுகிறான். அரிச்சந்திர புராணத்து மயான காண்டத்தில் வி.வி. வைரமுத்துவின் குரல் உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. " விதியே . . . ! உனக்கொரு முடிவில்லையா? உன் வேலைக்குமே ஓர் அளவில்லையா?"

**(வீரகேசரி வாரவெளியீடு: 1991)**

//

www.padippakam.com

# இருட்டினில் வாழும் உயிர்களுக்கு...!

"சொல்லடா வாய் திறந்து அப்பா என்று! சொல்லடா!" என 'நீலவானம்' திரைப்படத்தில் தேவிகா 'பாடியது' போலக் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு பாடவேண்டும் போல இருக்கிறது எனக்கு.

'பின்னை என்ன? கொழும்பிலிருந்து வந்து ஏழோ எட்டு நாட்களாகியும் இன்னமும் இந்தப் 'பயல்' என்னுடன் சேரவோ, என்னுடன் பழகவோ மறுக்கின்றானே?'

"அவன் உடம்பு பிரட்டும்போது ஊரிலிருந்து போனியள். அவன் தவழ்ந்து, நடந்து, கதைக்க ஆரம்பிச்சதுக்குப் பிறகு இப்ப திரும்ப வந்திருக்கிறியள். ஏறத்தாழ ஒண்டரை வருஷ காலமாக உங்கடை அரவணைப்பில்லாமலேயே வளர்ந்தவனைப் பார்த்து, இப்ப திடீரென்று 'அப்பா எண்டு சொல்லடா' எண்டால்.....எப்படி அப்பா?" –இது என் மனைவி சாந்தியின் சமாதானம்.

நேற்றுக் காலையிலாக இருக்க வேண்டும். நிவாரண உலர் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கென கூட்டுறவுக் கடைக்குச் செல்வதற்காக சாந்தி புறப்பட்ட போது, மகனை என்னிடம் தந்துவிட்டு, வீட்டுக் கேற்றைக் கூடத் தாண்டியிருக்கமாட்டாள். அழுது குளறி அயலில் உள்ள சனங்கள் எல்லோரையுமே கூடவைத்து விட்டான் மகன். பக்கத்து வீட்டுத் தங்கம் மாமி வந்து குழந்தையை என்னிடமிருந்து

www.padippakam.com



வாங்கியது தான் தாமதம்..., அவனது அழுகை, குளறல் எல்லாமே பறந்து விட்டது.

இந்தப் பதினாறோ பதினேழு மாதங்களும் அப்படி எங்கும் வெளிநாட்டில் இருந்து விட்டு வந்தவனல்ல நான். இதே நாட்டில் ஒரு நானூறு கிலோமீட்டர்கள் தூரத்திற்கு அப்பாலில் தான் இருந்துவிட்டு வந்திருக்கின்றேன். இந்தக் குறுகிய தூரமே எப்படியாக எம்மை அந்நியப்படுத்தி வைத்திருந்திருக்கிறது?

எனது திருமணம் நடந்ததும் ஒரு போராட்ட கால சூழலில் தான். மணமுடித்த மறுநாளே வடமராட்சித் தாக்குதலால் பிறந்த மண்ணுக்குள்ளேயே இடம் பெயர ஆரம்பித்தோம். அன்று தொட்டு இன்று வரை இந்த பத்து வருட காலமும் வடக்கிலும், தெற்கிலுமாக அகதியும், பயணியுமாகத்தான் காலங்கள் கடந்திருக்கிறது.

“இஞ்சாருங்கோ அப்பா, தம்பியை ஒருக்கால் பார்த்துக் கொள்ளுங்கோ. நான் ஓடிப்போய் நல்ல தண்ணி அள்ளிக்கொண்டு ஓடி வாறன். பிறகு ‘ரியூஷன்’ முடிஞ்சு மீராவும் வந்திடுவள். எல்லாரும் ஒண்டாகச் சாப்பிடலாம்” என்றவாறே ஒரு நாரியில் வெறுங்குடமும், மறு நாரியில் மகனுமாகச் சாந்தி என் முன் வந்து நின்றாள்.

“என்னாலை ஏலாதப்பா! வேணுமெண்டால் நல்ல தண்ணியள்ள நான் போட்டு வாறன். உந்தப் பயல் அழ வெளிக்கிட்டானெண்டால் என்னாலை ஆத்தேலாது. அயலையே கூட்டி விடுவான். பிறகு மரியாதை கேடு!”

“கதையை விட்டுட்டு பேசாமல் பொடியைத் தூக்கி வைச்சிருங்கோ. அவன் அழான். அழுகிறான் அழுகிறான் எண்டு கொண்டு இப்படியே விலகியிருந்தியள் எண்டால் எப்ப அவன் உங்களோடை அணையிறது? எப்ப சேருறது?” சாந்தி கூறும்போது ‘கேற்’ திறந்து யாரோ வளவுள் நுழையும் அரவங் கேட்டது.

www.padippakam.com



மகள் மீரா தான் 'ரியூஷன் கிளாஸ்' முடிந்து ஓடி வந்து கொண்டிருந்தாள். "நாலாம் ஆண்டுக்கே நாளுக்கு நாலு மணித்தியாலங்கள் 'ரியூஷன்' வைக்கினமே. என்ன படிப்பப்பா இது? கொஞ்ச நாளைக்காவது பொடியளோடை சந்தோஷமா இருக்கலாமெண்டு பள்ளிக்கூட விடுமுறையாப் பார்த்து வந்தன். இதென்னடா எண்டால் பள்ளிக்கூட நேரம் பரவாயில்லைப் போலல கிடக்கு."

"அப்பா! அப்பா! 'ரீச்சர்' கேட்டுக் கொண்டு வரச் சொன்னவ...... நீங்கள் எப்ப கொழும்புக்குப் போறியளாம் எண்டு." வீட்டு முன் தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்த, எனது மடிமீது வந்தமர்ந்தவாறே மகள் கேட்கிறாள்.

"ஏணாம் மகள்? 'ரீச்சரும்' அப்பாவோடை கொழும்புக்குப் 'பிளேனிலை' வரப்போகிறாவாமோ? அப்பா கொழும்பிலையிருந்து வரைக்குள்ளேயே போறதுக்குமாகச் சேர்த்து 'ரிக்கட்' எடுத்துக்கொண்டு வந்தனான் எல்லே? பிறகு என்னெண்டு மகள் 'ரீச்சரையும்' கூட்டிக் கொண்டு போறது?"

"இல்லை அப்பா! 'ரீச்சர்' கனடாவுக்கு ஆருக்கோ 'லெட்டர்' அனுப்ப வேணுமாம். உங்களட்டைத் தந்து போடுவிக்கவாம்", புத்தகப் பையினை அருகிலிருந்த வாங்கிலில் வைத்தவாறே மகள் கூறுகிறாள்.

"இன்னும் ஆறேழு நாளைக்குள்ளை அப்பா போயிடுவார் எண்டு 'ரீச்சருக்கு' நாளைக்குச் சொல்லுங்கோ மகள்" என்று நான் கூறியபோது "சரி சரி... அப்பாவும் அக்காவுமாகத் தம்பியைப் பார்த்துக் கொண்டிருங்கோ. நான் ஓடிப்போய் நல்ல தண்ணி அள்ளிக் கொண்டு ஓடி வாறன்" என்றவாறே மீராவுக்கருகில் மகனை இறக்கி விட்டுச் சாந்தி வெறுங்குடத்துடன் வெளியே சென்றுகொண்டிருந்தாள்.

**நா**னில்லாத காலங்களில் நடைபெற்ற மாறுதல்களை மகள் என்னிடங் கூறிக் கொண்டிருந்தாள். "அப்பா, எங்கடை வீட்டுக்குப்

www.padippakam.com



பின்னாலை நிண்ட பனை மரங்கள் எல்லாத்தையும் 'புள்டோசர்' போட்டுத் தறிச்சுப் போட்டாங்கள் எண்ட கவலையிலை அம்மா இரண்டு மூண்டு நாட்களாகச் சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தவ. பனையளெல்லாந் தறிச்சு பிறகு பெரிய வரம்பும் போட்டு 'சென்றியும்' போட்டதுக்குப் பிறகு அஞ்சாறு மாதங்களாக இஞ்சை இருக்கப் பயந்து நாங்கள் எல்லாரும் அப்பம்மா வீட்டிலை போயிருந்தம் அப்பா. இந்த 'சென்றியை' எடுத்து வல்லிபுரக்கோயிலடியிலை போட்டதுக்குப் பிறகு தான் இப்ப திரும்பவும் எங்கடை வீட்டிலை வந்திருக்கிறம்."

அவ்வப்போது சாந்தி கடிதங்களில் எனக்கெழுதிய விடயங்களை தனது அனுபவங்களாக இப்போது மீரா கூறிக்கொண்டிருந்தாள்.

"தம்பி அழேலையே?" கேட்டுக்கொண்டே நிறை குடத்துடன் சாந்தி வந்து கொண்டிருந்தாள்.

"அக்காவின்ரை கதைகளைத் தம்பியும் கேட்டுக்கொண்டிருந்தான். அதாலை இண்டைக்கு ஊரைக் கூட்டேல்லை" என்று நான் கூறியபோது, "அப்பா அப்பா வாங்கோ தம்பியோடை ஒழிச்சு விளையாடுவம்" என்று எனது கைகளை உலுப்பிக் கொண்டிருந்தாள் மகள்.

"இப்ப வேண்டாம் மகள். வெய்யில் தணியட்டும். பின்னேரம் விளையாடுவம்."

"அப்பா! அப்ப இப்ப எனக்கு ஏதாவது சோதனை வையுங்கோ."

"ஏன் மகள் உள்ள சோதனைகள் போதாதெண்டோ?"

"என்னப்பா சொல்லுறியள்?"

"இல்லை மீரா. பள்ளிக்கூடத்திலை மீரா தானே முதலாம் பிள்ளை. பேச்சுப்போட்டி, விளையாட்டுப்போட்டி எல்லாத்திலையும் மகளுக்குத் தானே முதலாமிடம்? பிறகுமேன் அப்பா சோதனைவைப்பான்?"

www.padippakam.com



"சும்மா புகழாதையுங்கோ. சின்னப் பருவத்துக் கெட்டித்தனமும் ஒரு கெட்டித்தனமே? ஏன் நீங்களும் கூடத்தான் அந்த நாளையிலை 'ஸ்கொலஷிப்' எல்லாம் பாஸ் பண்ணினியள். பிறகு என்ன நடந்தது.....?" சாந்தி எப்போதுமே இப்படித்தான். மகள் முதலாம்பிள்ளையாக வந்தாலும்..... அதற்கு மேலும் ஏதோ கிடைக்க வேண்டும் என்பது போல!

"ஓகே மகள். இப்ப அப்பா மீராவுக்கு ஒரு சோதனை வைக்கப் போறன். ஒரு 'பேப்பரும்' பேனையும் கொண்டு வாங்கோ பாப்பம்" என்று நான் கூறியதுமே, தம்பியையும் தள்ளி விட்டு விட்டு துள்ளிக் குதித்தவாறே மீரா எழுந்து சென்று 'பேப்பரும்', பேனாவும் எடுத்து வந்து பரீட்சைக்கு ஆயத்தமானாள்.

**நா**ன் வைக்கப்போகும் பரீட்சை என்னவாக இருக்கலாம்....என்ற ஆர்வம் மேலிட தம்பியையும் தூக்கியவாறே சாந்தியும் என்னைப் பார்த்தாள்.

"இப்ப ஒரு எழுத்தை நான் சொல்லுவன். அதைக் கொண்டு ஒரு ஆணின் பெயரும், ஒரு பெண்ணின் பெயரும் ஒரு இடத்தின் பெயரும், ஒரு பொருளின் பெயரும் எழுத வேணும். சரி தானே மகள்? உதாரணத்துக்கு து எண்ட எழுத்தை நான் சொன்னன் எண்டால் ஒரு ஆணின் பெயருக்குத் துவாரகன் எண்டும் ஒரு பெண்ணின் பெயருக்குத் துளசி எண்டும், ஒரு இடத்தின் பெயருக்கு துன்னாலை எண்டும், ஒரு பொருளின் பெயருக்கு தும்புக்கட்டை எண்டும் எழுதலாம். விளங்குது தானே மீரா?" என்று நான் சொன்ன போது "இதிலை என்னப்பா திறமை இருக்கு? அப்படி என்ன புதுமை இருக்கு?" என்பது போலச் சாந்தி என்னை நோக்கினாள்.

"இப்படிப்பட்ட பரீட்சைகளாலை வளரிளம் குழந்தைகளின் அனுபவங்களை, எண்ணங்களை, அந்தக் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, பிடிப்புகளை அறிந்து கொள்ள முடியும். எதிர்காலச் சமுதாயத்தை, ஏன் எதிர்கால நிகழ்வுகளைக்கூட ஊகிக்க முடியும்" என்று நான் கூறினேன்.

www.padippakam.com



"அப்ப ஒரு எழுத்தைச் சொல்லுங்கோவன் பாப்பம்", என்றாள் சாந்தி.

"மீரா பரீட்சைக்குத் தயார் தானே? இப்போ உங்களுக்குத் தரப்பட்டுள்ள எழுத்து கீ அல்ல கி" என்றேன், வானொலியில் பாட்டுக்குப் பாட்டு நடாத்தும் அப்துல் ஹமீட் பாணியில்.

"என்னப்பா கினாவோ?" என்று கேட்டாள் மீரா.

"ஓம் மீரா கி!கிளிக்கு வாற கி" என்றேன்.

மகள் சிந்திக்க ஆரம்பித்தாள்.

ஏறத்தாழ சாந்திக்கு மட்டுமே கேட்கும் வகையில் சொல்கிறேன். "சாந்தி இந்த எழுத்தை வைச்சுக்கொண்டு சாதாரணமாகவுஞ் சிந்திக்கலாம். சர்வதேச மட்டத்திலையும் சிந்திக்கலாம். இதே எழுத்தை கொழும்பிலை ஒரு நாள் ஐந்தாம் ஆண்டு படிக்கிற உன்ரை கொண்ணற்றை மகனுக்கும் கொடுத்தன். அவன் கிளிங்டன், கிளியோபாத்ரா, கிரீஸ், கிற்றார் எனச் சர்வதேச மட்டத்திலை சிந்திச்சு எழுதியிருந்தான்."

"ரிவி பார்த்து 'ரேடியோ' கேட்டு வளருகிற பிள்ளையள் அதுகள். அழகு ராணிப் போட்டியையும் 'கிரிக்கெட் மச்'சையும் இருந்த இடத்திலேயே இருந்து பார்க்கிறதுகள்.... அப்பிடிச் சிந்திக்கிறதிலை என்ன வியப்பு? ஆறேழு வருஷங்களாக, பிறந்ததிலையிருந்தே இருட்டுக்குள்ளேயே வாழுகிற சீவன்கள் எங்கடை பிள்ளையள். இதுகளட்டை அப்படியெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?" என்பது சாந்தியின் அங்கலாய்ப்பு.

"பாப்பம், இந்த மண்ணிலை படிக்கிற ஒரு முதல்தர மட்டத்திலை இருக்கிற பிள்ளை எப்படிச் சிந்திக்குது எண்டு?" என்றவாறே திரும்பி மகளை நோக்கினேன்.

www.padippakam.com



"சரியா அம்மா?"

"ஓமப்பா எழுதிப்போட்டன்."

"எங்கை மகள் எழுதினதை வாசியுங்கோ பாப்பம்."

"கி'னாவிலை ஆணின் பெயர் கிட்டு, பெண்ணின் பெயர் கிருஷாந்தி, இடத்தின் பெயர் கிளாலி, பொருளின் பெயர் கிரனைட்டு."

சாந்தி என்னை நோக்கினாள். 'இதுவும் சர்வதேச மட்டத்து சிந்தனை தானே?' என்பது போலிருந்தது அவளது பார்வை.

நான் அண்ணாந்து வானத்தை நோக்கினேன். பெருமழை ஒன்றைப் பொழிந்து ஓய்ந்திருந்தாலும் மறுபடியும் பெய்வேன் எனப் பயங் காட்டிக் கொண்டிருக்கிறது நீலவானம்.

**(வீரகேசரி வாரவெளியீடு : 1997)**

படிப்பகம்

www.padippakam.com

# கிராமத்திலிருந்து....பள்ளித் தோழன்.

**பிராமண வீதி,**
**தும்பளை,**
**பருத்தித்துறை.**
25.12.1996

**ந**ண்பா!

பிறந்த தின வாழ்த்துக்களுடன் ஆரம்பிக்கின்றேன். 'புதிய பயணம்' சிறுகதைத் தொகுதி நண்பர் ஒருவர் மூலம் கிடைக்கப் பெற்றேன். வாசித்து மகிழ்ந்தேன். நண்பர்களுக்கும் கொடுத்தேன்.

நல்ல தாளில் பொருத்தமான அளவு எழுத்தில் வெளிவந்துள்ளது. சிறுகதைகள் வெளிவந்த ஆண்டையும் சிறுகதைகளுக்கு கீழ் குறித்திருக்கலாம்.

நிறையக் கதைக்கலாம். எல்லாவற்றையும் எழுத முடியாது. ஒன்றை உணர்ந்து கொண்டேன். **வேலோன் அலட்சியப்படுத்தக்கூடிய ஒருவன் அல்ல. குறிப்பிடக்கூடிய மட்டத்தில் வைத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவன்** என்பதைப் பெருமிதத்துடன் கூறுகின்றேன். வேலோனின் எழுத்துக்களை realism என்னும் கட்டத்துள் வைத்துத்தான் அளவிடுகின்றேன். இங்கு naturalism, இயற்பண்பு; காலத்துக்கு நெருக்கமான realism ஐத் தான் குறிப்பிடுகிறேன். ஆண்டாண்டுகாலமாக கருப்பொருள், வடிவம் இரண்டையும் reality ஆக சொல்வதில்தான் கவனம் செலுத்தப்படுகிறது.

உன் சிறுகதைத் தொகுதி பற்றி மிகச் சுருக்கமாக ஒருசில வார்த்தைகள் கூறுகிறேன். கூறுவது எனது கடமையும் கூட என உணருகிறேன்.

☆ பள்ளித் தோழன், நீண்டகால நண்பன்.
☆ நீண்ட காலமாக இருந்த சிரமங்களுக்கு இடையில் எழுதி வருபவன்.
☆ ஊரவன் என்கிற நேசம்.
☆ சிறுகதைகள் ஏற்படுத்திய சில அதிர்வுகள் மிக முக்கியமான காரணமாகும்.

**வேலோன் லேசுப்பட்டவனல்ல என்பதை சில கதைகள் ஊடாக நிரூபித்துள்ளாய். கலைத்துவ ஆற்றல் நிறையவே உன்னிடம் இருப்பதை**

**உணர்ந்து கொண்டேன்.** கலைத்துவ வீச்சு போதாமல் இருப்பதையும் உணருகிறேன்.

பாரதி - சிறுகதை நன்றாகப் பிடித்துக் கொண்டது. இயல்பான முறையில் பாத்திரங்கள் அனைத்தும் வழிநடத்தப்படுகின்றன. உன்னுக்குள் - இதயத்துக்குள்ளால் - வெளிவந்திருக்கிறது. அறை நண்பன் ரஞ்சித்தின் இயல்பு, பாரதியின் தொடர்பு இல்லாத போது உனது துடிப்பு, வீட்டுக்குப் போனபோது நடைபெறுவன; அனைத்தும் மிகக் கவனமாக, நயம்பட எழுதப்பட்டுள்ளது. 'அடியடா புடியடா' என பாரதியை ஒரு புரட்சிக்காரியாகப் படைக்கவில்லை. ஆனால், இதை வாசித்ததும் பாரதி இவ்வளவு தூரம் மாறி இருக்கக் கூடாது என்ற உணர்வை ஏற்படுத்தி கதாநாயகனில் ஒருபரிவையும், சமூக குடும்ப விழுமியம், கட்டுப்பாடு என்பவற்றில் ஒரு கேள்வியையும் எழவைக்கின்றதே அது உனது வெற்றி.

அடுத்ததாக தேன்சிந்துமோ வானத்தைக் குறிப்பிடலாம். நுண்ணிய சமநிலையைப் பேணி நகர்த்தியிருக்கிறாய். தாயின் நடத்தை - பெண்ணைப் பெத்தவளுக்கு எமது சமூக அமைப்பால் சீதனம், மாப்பிள்ளை பிடிப்பதில் உள்ள சிரமம் எல்லாம் சொல்லாத சேதிகளாய் மனதுள் ரீங்காரமிடவைத்துள்ளாய். சொன்ன சேதிகளை விட சொல்லாமல் விடும் சேதிகள் - அது ஏற்படுத்தும் அதிர்வுகளுக்கு, தாக்கம் அதிகம் தான்.

தப்புக்கணக்கு - தலைப்பை மாற்றியிருக்கலாம். தலைப்பைப் பார்த்தவுடன் முடிவு தெரிகிறது. சுவை குறைகிறது. என்றாலும் இளைஞனின் பார்வையில், உணர்வுகளின் சித்திரிப்பு நன்றாகவே உள்ளது. கருவுக்கு - 60; உருவம் 20 புள்ளி......... என பிரிப்பவர்கள் இவைபற்றி குறிப்பிடாமல் பிறகதைகளையே குறிப்பிடுவர் என்பதையும் நான் அறியாமல் இல்லை.

பிறந்த நாள், புத்துணர்ச்சி என்பன அதன் இயல்பான நிலையில் இல்லை. கருப்பொருளைச் சொல்லவும் வேண்டும், அங்கீகரிக்கவும் கூடாது என்ற சங்கட நிலையில் தான் இருந்து எழுதியுள்ளாய். வேறொரு முறையில் நகர்த்தப்பட்டிருக்க வேண்டும் என உணருகிறேன். தேவையானால் உனது மகிழ்வுக்காக போதனைக்கதைகள் என்பதற்குள் இதைச் சேர்த்துக்கொள். நல்ல வரவேற்புக் கிடைக்கும்.

இப்படியான போதனைப்பண்பு கொண்டுள்ள வேலோன் - "நான் நானாகவே நின்று கதை சொல்வதையே பெரிதும் விரும்பும் வேலோன்" மீறல்கள் கதையில் மிகவும் முதிர்ச்சியுள்ளவன் போல் எப்படி இருக்க

www.padippakam.com

முடிகிறது? எமது சமூகத்தின் குடும்பம் என்னும் மூலவேர் சாந்துவிழும்போது அதைப் பார்த்துக்கொண்டு நிதானமாக எப்படி முடிந்தது? ஆச்சரியம் தான்! இலட்சிய வாதம் – இதில் தலைதூக்கிவிடுகிறது! அரியண்டக்கதையிது.

புதிய பயணம், ஒருவிடியலுக்கு முன் ஆகியவற்றில் ஆங்காங்கு சில சம்பவங்கள்' நன்கு வந்துள்ளன. ஒரு விடியலுக்கு முன் வித்தியாசமான அணுகுமுறை. இன்னும் கூடிய வீச்சுடன் எழுதியிருக்கலாம் போல் தோன்றுகிறது. சமகாலப்பிரச்சனை என்றவகையில் இவற்றை குறிப்பிடாமல் இருக்க முடியாது. (ரஞ்சகுமாரின் கோசலை......... போன்ற சிலகதைகளின் திறமை வரவில்லை.)

**ஆயினும் உனது அனுபவ எல்லைக்குள் நின்று சாதி, இனம், பாலியல், சீதனம், பெண்ணியல்வாதப் பிரச்சனைகளைச் சொல்ல முற்படுகிறாய். தோல்வி அடையவில்லை.** வெற்றியின் அளவு காலம் தீர்மானிக்கும்.

'ஒரு விடியலுக்கு முன்' கதையில் "இந்த வளர்ச்சி பூரிப்பு எல்லாவற்றையும் அடிக்கடி பார்த்து மகிழ இவனுக்குக் கொடுத்துவைக்க வில்லையே"! இந்த நிலையில் தான் நான் உள்ளேன். மனைவி வன்னியில். 10 மாதமாகிறது சந்தித்து. பிள்ளை பிறந்து 6 மாதங்கள், முகமறியேன். தைபிறக்க வசதியைப் பார்த்து வருவார்கள்.

அடுத்து – உனது 'விடியட்டும் பார்ப்போம்' வெளியீட்டு விழாவுக்கு என் வாழ்த்துக்கள். உன் சளையாத முயற்சிக்கும் தான்!

அன்புடன்

**பா. இரகுவரன்.**

www.padippakam.com

# ரஞ்சகுமாரின் தினக்குறிப்பிலிருந்து ..........

## 05-01-1997 ஞாயிற்றுக்கிழமை

**வே**லோனை நேற்றுக் கண்டேன். பழசெல்லாம் ஞாபகம் வருகின்றது. அந்தப் பக்கம் ஆழ்கடல்....இந்தப் பக்கம் 'பொலிஸ் ஸ்டேசன்'....மறுபுறம் நீதிமன்றம்...... எதிரே பெண்கள் பாடசாலை.... நடுவே எமது பள்ளிக்கூடம்.... ஹாட்லிக்கல்லூரி. கட்டிடங்கள் மட்டும் பள்ளிக் கூடங்களாகிவிடாது. கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்டமான பின்னரும், இன்றும் எமது பள்ளிக்கூடம் வளர்கின்றது. சாம்பலிலிருந்து எழும் 'பீனிக்ஸ்' போல......எமது வகுப்பு..... எமது ஆசிரியர்கள்....எமது நண்பர்கள்....எமது நம்பிக்கைகள்..... எம்மை நெருக்கியடித்து பிழிந்துவிட முயலும் வாழ்க்கை.....

நான், வேலோன், இரகுவரன், மாறன், விஷ்ணுநாதன்....எழுத முயற்சித்தவர்கள்......மாறன் எங்கெல்லாமோ அலைந்து,களைத்து கடைசியில் கனடாவில்...... விஷ்ணுநாதன் புல்லுமலையில் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு.......பின்னர் காணாமல் போனான்..... எத்தனையோ ஆண்டுகள்..... இன்னமும் ஒரு தகவலும் இல்லை. நில அளவையாளன் நிலத்துக்குள் போயிருப்பானோ? இரகுவரன் மட்டும் ஊரில் இருக்கிறான். அதே ஹாட்லியில்........ எமது அந்த ஊர்......அந்த வீதிகள்..... அந்தக் கடைகள்.... டிஸ்பென்சரி.... எமது நண்பர்கள்... குலசிங்கம் அண்ணன் ..... டொக்டர்..... இன்னும் ஊர் வாழ்கிறது..... வெட்ட வெட்டத் தளைக்கின்றது. வேலோன் கொழும்பில்..... அச்சகமொன்றில் வேலை........ அடிக்கடி காண்பேன்.


நேற்று இரகுவரனின் கடிதம் வாசித்தேன்..... வேலோன் காட்டினான்........ மனைவியும், கைக்குழந்தையும் வன்னியிலாம். நினைக்க நினைக்க நெஞ்சு வேகுகின்றது. வேலோனும் கனநாட்களாக ஊருக்குப் போகவில்லை. மனைவி, மக்கள் ஊரில். எங்கள் ஊரை அவன் கிராமம் என்று தான் கூறுவான். கிராமம் நினைக்க நினைக்க இனிக்கும் அவனுக்கு....பிளேனில் இடம் கிடைக்குமா, என்று அலைந்து கொண்டிருக்கிறான். வேலோன் போனவருஷம் ஒரு புத்தகம் போட்டான். இந்த வருஷம் இன்னுமொன்று வருகிறதாம்....எல்லோரையும் போலவே யுத்தமும், வாழ்வும் அவனை நொருக்குகின்றன. அவற்றை மீறி மேலெழ அவன் செய்யும் பிரயத்தனங்கள் தான் அவனது எழுத்துக்கள் **".....வேலோன் அலட்சியப்படுத்தக்கூடியவன் அல்ல........" என்று இரகுவரன் எழுதியிருந்தான். உண்மை தான்!**

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்



எளிமையான ஆனால் தேர்ந்த சக்திமிக்க வார்த்தைகள் வேலோனின் படைப்புகளுக்கு ஒரு பலத்தைக் கொடுக்கின்றன. இவருக்கொரு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக் கின்றன.

**தெளிவத்தை ஜோசப்**

☆

புலோலியூர் இரத்தின வேலோனின் படைப்புக்களும் ஆற்றல் வாய்ந்த இலக்கியங்களாகவே இனங்காணப்படுகின்றன. கடந்தவருடம் வெளியிடப்பட்ட 'புதிய பயணம்' இப்பொழுது வெளியிடப்படும் 'விடியட்டும் பார்ப்போம்' ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வேலோனது எழுத்தாற்றலின் சுகப்பிரசவங்களாக கருதப்பட வேண்டிய வையாகும்.

**சி. வன்னியகுலம்** M.A.

☆

இரத்தின வேலோன் தனக்கென ஒரு சுய நிலைபாட்டை எடுத்துக்கொண்டு தனது படைப்புக்களைச் சிருஷ்டிக்கின்றார். வேலோனின் ஆக்கங்களில் எளிமையிருக்கின்றது. தெளிவு இருக்கின்றது. உயிர்த்துடிப்பும் கலை அம்சமுமிருக்கின்றது.

**நீர்வை பொன்னையன்**

---

Typeset and Printed by Print Graphics,
4. Nelson place, Colombo - 6. Tele : 596312.